Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

AXSHAYA CONSTRUCTION JAFFNA

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல்,
பழைய வீடுகளைத் திருத்துதல்,
குளியலறை கட்டுதல்

Plumbing, Electrical, Painting

அனைத்தும் தரமாகவும், குறைந்த விலையிலும், குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்



தொடர்புக்கு : 0776679564

(C/3690)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 08 ஞாயிற்றுக்கிழமை (22.06.2014) பக்கங்கள் 20 ஓசை – 264

அடிப்படைவாத அமைப்புகள் தடை; மதப் பிரச்சினையை தீர்க்காது

ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அடிப்படைவாத அமைப்புக்களை தடைசெய்வதில் எந்தப்பிரச்சினையும் இல்லை. இவ்வாறு தடைசெய்வதன் மூலம் மதங்களுக்கிடையிலான பிரச்சினை முடிந்துவிடும் என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் இல்லை எனவே பொதுபல சேனாவையும் தடைசெய்ய முடியாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்ததாக ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அளுத்கம வன்முறைகளுக்குக் காரணமான பொதுபல சேனாவைத் தடை செய்ய வேண்டும் என்று கடந்த வியாழக்கிழமை காலையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் ஆகியோர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனால், அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியுடன்

19 ஆம் பக்கம் பார்க்க

அண்மைய சம்பவங்கள்; விசாரிக்க உயர்மட்டக்குழு

நாட்டில் இடம்பெற்றுள்ள அண்மைய சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு உயர்மட்டக் குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ டுவிட்டர் சமூக வலைத்தளத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்தக் குழுவில் இடம்பெறவுள்ள அதிகாரிகள் தொடர்பில் இதுவரை தீர்மா

19 ஆம் பக்கம் பார்க்க

யாழ். நாவாந்துறையிலுள்ள பள்ளிவாசல் மீது தாக்குதல்



(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறை எம்.ஒ.வீதியில் அமைந்துள்ள கமால் பள்ளிவாசல் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று அதிகாலை தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். இத்தாக்குதலில், பள்ளிவாசலின் 3 யன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளதாகவும், தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

அனைத்து இன மக்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்

ஜெனிவாவில் உறுதியளித்தது அரசு

(கொழும்பு)

இலங்கையில் வாழும் அனைத்து மக்களதும் அவர்களின் வழிபாட்டு இடங்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு, உறுதி செய்யப்படுமென ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் குறித்து ஜெனிவாவில் நடந்து வரும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில், அளுத்கம வன்முறைகள் குறித்து ஜேர்மனி, கனடா, நோர்வே ஆகிய நாடுகள் கேள்வி எழுப்பின இதன்போதே

இலங்கையின் ஜெனிவாவுக்கான பிரதித் தூதுவர் மனிசா குணசேகர இந்த உறுதி மொழியை அளித்தார்.

அரசாங்கம் எந்தவொரு இன அல்லது மத வன்முறைகளையும் மன்னித்ததில்லை.

சம்பவம் தொடர்பான நம்பகமான தகவல்கள் திரட்டப்பட்டு, அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

எல்லா மக்களினதும். வழிபாட்டு இடங்கள் மற்றும் சொத்துக்களினதும் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிசெய்யும் என்று

19 ஆம் பக்கம் பார்க்க

இலங்கையில் தலிபான்களை உருவாக்க முயலும் அமெரிக்கா

அமைச்சர் சம்பிக்க குற்றச்சாட்டு

இலங்கையில் தலிபான்களை உருவாக்க அமெரிக்கா முயற்சிப்பதாக, அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்காவினால் ஊட்டமளிக்கப்பட்ட தலிபான்கள் பின்னர், நியூயோர்க்கின் இலக்குகள் மீதே தாக்குதல் நடத்தினர்.

அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசின் இலங்கையில் ஜிகாதி அமைப்புகளுக்கு ஊட்டமளித்து வருகிறார்.

இது இலங்கையின் பாதுகாப்புக்கு மட்டுமன்றி, அமெரிக்காவுக்கும், முழு உலகிற்கும் கூட

19 ஆம் பக்கம் பார்க்க

ஆடை விற்பனை நிலையம் பாணந்துறையில் தீக்கிரை


(கொழும்பு)

பாணந்துறை மருத்துவமனைக்கு அண்மையாக உள்ள முஸ்லிம்களுக்கு சொந்தமான நோலிமிட் ஆடைக்காட்சியறை நேற்று அதிகாலை தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் பற்றிய தீயை அணைக்க, 5 தீயணைப்பு வண்டிகள் முயற்சிகளை மேற்கொண்ட போதும், ஆடைக்காட்சியறை முற்றிலுமாக எரிந்து நாசமாகியது.

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்து வரும் நிலையில், பாணந்துறையில் ஆடைக் காட்சியறை தீக்கிரையாக்கப்பட்டுள்ளதால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் மற்றும், சிறப்பு



அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப படுத்தப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

வன்முறையைத் தூண்டியவர்கள் யார்? பொறுப்புக் கூறவேண்டும் இலங்கை

வலியுறுத்துகிறது அமெரிக்கா

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையென அமெரிக்கா மீளவும் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதுவர், சமந்தா பவர், இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் இடம்பெற்றுள்ள முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் மிகவும் கவலையளிக்கின்றன.

இந்த வன்முறைகளைத் தூண்டியவர்களைப் பொறுப்புக்கூற



வைக்க வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் கடமை.

19 ஆம் பக்கம் பார்க்க

கூரைமீது ஏறிவந்தவர்களே ஆடைக்காட்சியறைக்கு தீ வைப்பு

என்கிறார் மங்கள எம்.பி.

பாணந்துறையில் உள்ள நோலிமிட் ஆடைக் காட்சியறையின் கூரை மீது ஏறி வந்தவர்களே அந்த நிறுவனத்திற்கு தீயிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பொலிஸார் கூறுவது போல் மின் ஒழுக்கு காரணமாக நோலிமிட் நிறுவனத்தின் விற்பனை நிலையத்தில் தீ பரவவில்லை எனவும் இனந்தெரியாத நபர்கள் இந்த தீயை மூட்டியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் நிறுவனத்திற்கு பின்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் வன்முறையாளர்கள் தீயிட்டு கொளுத்தியுள்ளனர் எனவும்

19 ஆம் பக்கம் பார்க்க

அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு ஸ்ரீ அக்கினி ஞானவைரவர் திருக்கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

காலை 10 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும் அலங்கார உற்சவம் கும்பாபிஷேக தினமாகிய யூலை 3 ஆம் திகதி வியாழக்கிழமை 108 சங்காபிஷேகத்துடன் நிறைவுறும்.

தினசரி காலை 10 மணிக்கு அபிஷேகம் பகல் 10 மணிக்கு சுவாமி திருவீதியுலா பகல் 1 மணிக்கு மகேஸ்வர பூசை என்பன இடம்பெறும்.

இறுதிநாளான யூலை 3 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு அக்கினி வைரவர் கி பிரதட்சன ஊர்வலம் இடம்பெறும்.

ஆலய பிரதம குரு கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இவ் அலங்கார உற்சவம் இடம்பெறுகின்றது.

வருடாந்த மஹோற்சவம்

நுணாவில் மேற்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.45 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ளது.

இதில் மஞ்சத் திருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதியும், வேட்டைத் திருவிழா, 9 ஆம் திகதியும், சப்பறத் திருவிழா 10 ஆம் திகதியும், தேர்த்திருவிழா 11 ஆம் திகதி காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா 12 ஆம் திகதி சனி காலை 10 மணிக்கும் நடைபெற்று மறுநாள் பூங் காவனத் திருவிழாவுடன் பிற்பகல் நிறைவடையவுள்ளது. (11)

சங்காபிஷேக உற்சவம்

(சாவகச்சேரி)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி, இயக்கச்சி, மட்டுவில் கிருஷ்ணன் கோவில் மகாகும் பாபிஷேக தின சங்காபிஷேக உற்சவம் நாளை இடம்பெறுகின்றது.

உற்சவ குரு சிவஸ்ரீ க.நாகேஷ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். விழாவில் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் சர்வசாதகம் வழங்குகின்றார். விழாவிற்கான அருளுரையை யாழ்சின்மயாமிசன வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிஜி நிகழ்த்துவார்.

காலை 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி மாயவனுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று விசேட பூசையுடன் மகேஸ்வர பூசையும் இடம்பெறும் மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று மாயவன் எழுந்தருளி அருட்காட்சி கொடுப்பார். (இ)

விண்ணப்பங்கள் கோரல்

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் தமிழ்மொழி மூலம் விவாக பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வயது 30-60 இற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விவாகம் செய்தவராகவும் நிரந்தர முகவரியுடைய குறிப்பிடத்தக்க சொத்து உரிமையுள்ள வராகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பை பெற்றவராகவும் இருத்தல் அவசியமாகும்.

கல்வி மற்றும் ஏனைய தகைமைகளும் விண்ணப்பங்களையும் யாழ்.மாவட்ட செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜீலை மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(105)

ஆளுநர் செயலக ஏற்பாட்டில்

யாழில் பட்டம் விடும் விழா



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில் பட்டம் விடும் விழா நேற்று யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 60 பேர் இந்தப் பட்டம் விடும் நிகழ்வில் பங்குகொண்டு தமது பட்டங்களைப் பறக்க விட்டு காண்பித்தனர்.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக காலை 9 மணிக்கு பட்டம் கட்டுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை நிகழ்வு ஒன்று நடைபெற்றது. இதில் 30 வரையானவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர். தொடர்ந்து மாலை நிகழ்வாக பிற்பகல் 3 மணிக்கு பட்டம் விடும் நிகழ்வு ஆரம்பமாகியது.

இந்நிகழ்வுக்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி யாழ். மாநகரமுதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதி தயானந்தா ஆகியோர் அதிதியாகக் கலந்துகொண்டனர். பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் அதிதிகள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது. தேசியக்கொடியேற்றல் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து அதிதிகள் பட்டமொன்றைப் பறக்கவிட்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

மேலும் கொழும்பில் இருந்து வருகைதந்த பட்டம் கட்டும் நிகழ்வில் நிபுணத்துவம் பெற்றவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு பட்டம் விடுபவர்களின் ஆற்றல்களைக் கணிப்பிட்டு புள்ளியிட்டு பரிசுக்குரியவர்களைத் தெரிவு செய்து பரிசில்கள் வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் முதல் தடவையாக பட்டம் விடும் விழாவானது வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் நடாத்தப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் வடமராட்சியில் சுமார் 30 பேர் பட்டம் விடும் போட்டியில் கலந்து கொண்டனர்.

பாம்பு வடிவம், பறவை வடிவங்கள், கடல் கன்னிவடிவம் சதுரம் முக்கோணம் போன்ற பல்வேறு வடிவங்களில் பல் வேறு வர்ணங்களில் இந்தப் பட்டம் பறக்கவிடப்பட்டமை பார்ப்பதற்கு அழகாகவும் வியப்பாகவும் இருந்தது பெருமளவு பொதுமக்கள் பாடசாலை மாணவர்கள் இந் நிகழ்வைக கண்டுகளித்தனர். (பா)

சிறுமியுடன் குடும்பம் நடத்திய 45 வயது தந்தை கைது

செட்டிகுளம் பிரதேசத்துக் குட்பட்ட கன்னாட்டி கணேசபுரம்கிராமத்தில் 15 வயது சிறுமியுடன் ஒரு வருடகாலமாக குடும்பம் நடத்தி வந்த 45 வயது தந்தையை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது

கன்னாட்டி கணேசபுரம் கிராமத்தில் பாதிக்கப்பட்ட பிள்ளையின் தாய் கடந்த வருடம் குடும்பத்தின் வறுமை காரணமாக வேலை வாய்ப்புக்காக வெளிநாட்டுக்கு சென்றுள்ளார்

இந்நிலையில் தனது 14 வயது மகளை தனது 45 வயதான இரண்டாவது கணவனின் பொறுப்பில் பாதுகாப்புக்காக ஒப்படைத்துச் சென்றுள்ள நிலையில் சிறுமியுடன் ஒரு வருடகாலமாக அவர் குடும்பம் நடத்தி வந்துள்ளார். இதை அறிந்த பொலிசார் குற்றவாளியைக் கைது செய்துள்ளனர்

குறித்த சிறுமி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிறுமி தன் விருப்பத்தின்படியே இவ்வாறு நடைபெற்றதாகவும் தான் அவரையே திருமணம் செய்யப் போவதாகவும் தெரிவித்துள்ளார் (70)

இளைஞர்களின் அடாவடி; கரந்தன் மக்கள் அச்சத்தில்

(அச்சுவேலி)

நீர்வேலி கரந்தன் பகுதியில் இளைஞர்களின் அடாவடித்தனச் செயற்பாடுகள் தலைதூக்கியுள்ளதாக அப்பகுதி பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

கரந்தன் பகுதியில் மாலை வேளைகளில் ஒன்று கூடும் இளைஞர்கள் மது மயக்கத்தில் அப்பகுதியால் செல்வோரை தகாத வார்த்தையை பிரயோகித்து வீண்வம்புக்கு இழுப்பதால் என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாத நிலையில் தாம் போக்குவரத்தை மேற்கொண்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இப்பகுதியில் உள்ள வீடுகளின் கேற்றுக்களுக்கும் காலால் உதைத்து சேதப்படுத்துகின்றனர். மேலும் இவர்களை எதிர்த்து பேசினால் தமக்கு ஏதும் ஆபத்து ஏற்படும் என இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர்.

இக் கும்பலின் அடாவடியைத் தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்டோர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

சிறு விளம்பரங்கள்

கானி விற்பனைக்கு

அதிக பாதுகாப்பான இடத்திலுள்ள கூரைக்கு சீற்போட்ட புதிய வீடு விற்பனைக்குண்டு அரச ஊழியர், வங்கி ஊழியர் பென்சன் பெறுவோர் போன்ற நிரந்தர வருமானமுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். க.சீவரட்ணம் (சிவராதா) றிஜிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை சுதுமலை தெற்கு

(C/352)

□ □ □ □ □

வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை வருகை தரும் தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும், குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். தொ.பே-0710854068.

□ □ □ □ □

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000.00-35,000.00 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். தொ.பே-0775964299 (R/348)

□ □ □ □ □

டயானா பிளாஸ்ரிக்

நீசைக்கிள் (மீள் சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல்.06 கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 266
திகதி - 2014.06.20
வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து

02 08 12 40 H

பரிசுத் தொகை ரூபா. 21,651,660/- வெல்லப்படவில்லை

பரிசு வகை	பரிசுத் தொகை ரூ.	வெற்றியாளர்களின் எண்ணிக்கை	மொத்த பரிசுத் தொகை ரூ.
4 இலக்கங்களுக்கு	1,000,000/-	1	1,000,000/-
ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு	50,000/-	04	200,000/-
ஏதேனும் 3 இலக்கங்களுக்கு	1,000/-	206	206,000/-
ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு	1,000/-	361	361,000/-
ஏதேனும் 2 இலக்கங்களுக்கு	60/-	9405	564,300/-
ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு	40/-	4945	197,800/-
ஏதேனும் 1 இலக்கத்திற்கு	20/-	122628	2,452,560/-
ஆங்கில எழுத்திற்கு	20/-	17735	354,700/-
நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்தாததன் மூலம்	21,651,660/-	-	-
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை			5,336,360/-

எதிர்வரும் செவ்வாய்கிழமை சூப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 21,891,900/-

2014.06.24ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

web : www.dlb.lk

(C/3698) (C/3698)

வளலாய் அ.மி.த.க.பாடசாலையை மீள ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை

(அச்சுவேலி)

அச்சுவேலி, வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையினை மீள இயங்க வைப்பதற்கான விசேட கலந்துரையாடல் நடைபெற்று மூன்று மாதங்கள் கடந்து விட்ட நிலையில் அது சம்பந்தமான எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆரம்ப பாடசாலையாக முன்னர் இயங்கி வந்த இப் பாடசாலை கடந்த காலத்தில் ஏற்பட்ட போர் வன்முறைகளால் சேதமடைந்து இயங்காத நிலையில் சேதமடைந்து காணப்பட்டது.

எனினும் அப்பகுதி மக்கள் தமது பிள்ளைகளின் நன்மைகருதி விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பாடசாலை மீள இயங்க வைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் நடை பெற்ற கலந்துரையாடலின் போது பாடசாலையினை தற்காலிகமாக வளலாய் பொது நோக்கு மண்டபத்தில் ஆரம்பிப்பதெனத் தீர்மானிக்கப் பட்டது. அதற்கு அப்பகுதி பெற்றோர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் இணக்கம் தெரிவித்தனர். இருந்தும் காலம் கடந்து விட்ட நிலையில் இது தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என பிரதேச மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே பாடசாலையின் புனரமைப்பு வேலைகளை துரிதமாக முன்னெடுக்குமாறும் தற்காலிகமாக பாடசாலையினை பொது நோக்கு மண்டபத்தில் ஆரம்பிக்கவும் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

புனித ரம்ழானை முன்னிட்டு முஸ்லிம் மாணவர்களுக்கு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியாக்கல்லூரியில் இரண்டாம் தவணைக்கான பரீட்சை நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் 29 ஆம் திகதி புனித ரம்ழான் மாத நோன்பு ஆரம்பமாகவுள்ளதால் எதிர்வரும் 27 ஆம் திகதி முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளன. புனித ரம்ழான் மாதத்தில் ஒரு மாதம் பூராகவும் நோற்கும் வகையில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவது போன்று இவ்வருடமும் விடுமுறை வழங்கப்படுகின்றன. இம் மாதத்தில் றம்ழான் நோன்பை நோற்று திருக்குர் ஆன் ஓதி பொறுமையுடன் வாழ்வது அவசியமானதாகும் மாணவர்களும் ஆசிரியர்களும் நோன்பை நேற்கும் வகையில் எதிர்வரும் 27 ஆம் திகதி பாடசாலை விடுமுறையாகி ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி மீண்டும் மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென கல்லூரி அதிபர் தெரிவிக்கின்றார். (105)

இன்றைய நிகழ்வுகள்

பதவியேற்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் 2014/2015 ஆம் ஆண்டுக்கான உத்தியோகத்தர் பதவி ஏற்கும் வைபவம் இன்று மு.ப. 10.30 மணிக்கு "IIS CITY CAMPUS" 200, சிவன்பண்ணை வீதியில் நடை பெறவுள்ளது.

இவ்வைபவத்திற்கு பிரதமவிருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 B1 இரண்டாவது உப ஆளுநர் லயன்ஸ் கலாநிதி வி.தியாகராசா (MJF.JP) அவரது பாரியார் லயன்ஸ் ரன்ஜியும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் வெளியீட்டு விழா

(யாழ்.நிருபர்)

எழுத்தாளர் மொழிவாணன் எழுதிய "வாஸ்து உங்கள் தோஸ்து." நூல் வெளியீட்டு விழா இன்று மாலை 6 மணிக்கு கொழும்பு சுகததாஸ ஸ்போட்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

தொஸ்வரன் தலைமையில் நவோதய மக்கள் முன்னணித் தலைவர் எஸ்.கே.கிருஷ்ணா முன்னிலையில் நடைபெறும் இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரபாகணேஷன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், ஞாயிறு வீரகேசரி வாரவெளியீட்டின் பிரதம ஆசிரியர் ஆர்.பிரபாகரன், ஞாயிறு தினகரன் பிரதம ஆசிரியர் ரி.செந்தில் வேலவர், தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ.தனபால சிங்கம், ஞாயிறு தினக்குரல் பிரதம ஆசிரியர் பாரதிராஜநாயகம், நவமணி பிரதம ஆசிரியர் என்.எம்.அமீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

மாம்பழத்திருவிழா

(யாழ்.நிருபர்)

காரைநகர் களபூமி திக்கரைமுருகன் ஆலயத்தின் மாம்பழத்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. இன்று காலை 7 மணிக்கு விசேட ஞானாபிசேகமும் 9.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் மலர்களாலான அலங்காரத்துடன் வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான் பக்க வாத்தியத்துடன் பன்னிரு திருமுறை ஓதி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.


பிற்பகல் 4 மணிக்கு மாம்பழத்திருவிழாவும் 6 மணிக்கு பழனி முருகனுக்கு விசேட அபிசேகமும் இரவு 8 மணிக்கு செஞ்சொற்செல்வர் கலாநிதி சிவத்திரு ஆறுதிருமுருகனின் சைவ நெறி, தமிழ் நெறி, அறநெறி விசேட சொற்பொழிவும் இடம்பெறும். இரவு 9 மணிக்கு முருகப் பெருமானின் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். (10)

வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்.நிருபர்)

சித்தங்கேணி வட்டுகிழக்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சங்கத்தலைவி திருமதி.ம.றமணி தலைமையில் ஜனசக்தி சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.கையிலைநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு நடைபெறவுள்ளது. (10)



வெற்றியடைய வைச்சவையைக் கொண்டு பல்கலைக்கழகத்துக்கு ஒரு தும்புத்தடியைத் தன்னும் வாங்கியிருப்பினமா?

வடமலைதான் எழுதுவது...

சிலபேரை எந்த மாதிரியான கெட்டிக்காரராலும் திருத்தவே முடியாது எண்டு சொல்லுவினமல்லோ... அதை மாதிரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குள்ள இருக்கிற ஐஞ்சாறு வாத்திமாரையும் [சத்தியமாக இவை விரிவுரையாளர்களே இல்லை.] திருத்தவே ஏலாது.

ஏனெண்டால், இந்தப் பல்கலைக்கழகத்தை நாசமறுக்கிறதுக்கெண்டே இவையள் எப்ப பார்த்தாலும் ஏதோ ஒரு குழப்பத்தைச் செய்து கொண்டிருப்பினம்.

ஒண்டில் சும்மா இருக்கிற பெடியளைத் தூண்டி வில்லங்கமாக எதையாவது செய்ய வைப்பினம்.

இல்லையெண்டால், தாங்கள் ஏதாவது ஏடாகூடமாகச் செய்து துலைப்பினம்.

தாங்கள்தான் ஏதோ இனப்பற்றாளர்கள், விடுதலை விரும்பிகள் எண்ட கணக்கில அறிக்கை விடுவினம்.

ஆனால், பல்கலைக்கழகத்தின்ரை வளர்ச்சிக்கோ நன்மைக்கோ படிக்கிற பெடி பிள்ளையளின்ரை முன்னேற்றத்துக்கோ இவை ஒண்டையும் செய்யிறதில்லை.

ஆனா, வெளியில பார்த்தால் ஏதோ இவைதான் பென்னாம் பெரிய புரட்சியாளர்கள் எண்ட மாதிரியும் தியாகிகளைப் போலவும் போராளிகளைப் போலவும் தற்கொலைப் படைக்கே தயங்காத உயிர்க்கொடையாளிகள் எண்ட மாதிரியும் பீலா காட்டுவினம்.

என்ன செய்யிறது... இந்த மாதிரிப் பச்சைப் பொய்யர்களின்ரை காலமல்லோ... இது.

இந்த மாதிரியான பொய்யர்கள்தான் இப்ப எங்க பாத்தாலும் எல்லாத்துக்கும் கொடியேத்திக்கொண்டிருக்கினம்... இப்பிடிப் பச்சைப் பொய்யர்களுக்குத்தான் சனங்களும் தங்கட வாக்குகளை நல்லா அள்ளிப் போடுதுகள். இதால எங்க பார்த்தாலும் பொய்யர்களின் கொண்டாட்டம்தான்.

இப்ப பாருங்கோ, இந்தப் பொய்யர்களின்ரை விளையாட்டொண்டை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர விழாக்களுக்கோ கொண்டாட்டங்களுக்கோ இனிமேல் ஆரையும் அழைக்கிறதெண்டால், அது ஜனாதிபதியாக இருக்கோணும். இல்லையெண்டால், உயர்கல்வி அமைச்சராக இருக்கோணும். அதுவும் இல்லையெண்டால், கூடுதலான மக்களின்ரை ஆதரவைப் பெற்றவையாக இருக்கோணும் எண்டு ஒரு அறிவிப்பை இந்தப் "பச்சைப் பொய்கள்" சொல்லியிருக்கினம்.

இவை இப்பிடி ஒளிச்சு மறைச்சு என்னத்தைச் சொல்ல வருகினம் எண்டு உங்களுக்கு விளங்கியிருக்கும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்காரரைத்தான் இனிமேல் பல்கலைக்கழகத்தின்ரை எந்த நிகழ்ச்சிகளுக்கும் கூப்பிட வேணும் எண்டதை இப்படிச் சொல்லியிருக்கினம்.

இதை இவை வெளிப்படையாகவே சொல்லியிருக்கலாம். அப்பிடியே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையோ இல்லாட்டி அவற்றை ஆட்களையோ கூப்பிட வேண்டாம் எண்டும் வெளியாகச் சொல்லியிருக்கலாம்.

ஆனால், அப்பிடிச் சொல்லிறதுக்கு நெஞ்சில கொஞ்சமாவது தைரியம் வேணும், நேர்மைத் திராணி வேணும்.

ஏனெண்டால், இவைக்கு நல்லாய்த் தெரியும் தமிழ்க் கூட்டமைப்புக்காரர் இந்தப் பல்கலைக்கழகத்துக்காக ஒரு மசிரைக் கூடப் புடுங்கேல்லை எண்டதைப்பற்றி.

போனவருசம் கூட மருத்துவ பீடத்துக்கான விசேட சிகிச்சைப்பிரிவுக்கு முழு ஏற்பாட்டையும் செய்தது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாதான். இதுக்குக் காணியே இல்லாமல் என்ன செய்யிறது எண்டு இந்தப் பல்கலைக்கழகத்தின்ரை நிர்வாகம் தடுமாறிக்கொண்டிருக்கேக்க, மின்சாரச்சபைக்குச் சொந்தமான காணியை அவையோட பேசி இணக்கங்கண்டு, பல்கலைக்கழத்துக்கு அதை வாங்கிக் குடுத்ததும் டக்ளஸ் தேவானந்தாதான்.

இந்தப் பல்கலைக்கழகத்தின்ரை விவசாய பீடத்துக்கும் பொறியியற் பீடத்துக்கும் கிளிநொச்சியில 570 ஏக்கர் காணியை எடுத்துக் குடுத்து, அங்க பொறியியற் பீடத்தை ஆரம்பிச்சு வைச்சதும் அமைச்சர்தான். அங்க விவசாய பீடத்தைக் கொண்டு போங்கோ எண்டு சொல்லி அதை அங்கேயே அனுப்பி வைச்சதும் அவர்தான்.

வன்னியில போர் முழுஞ்சபிறகு, முகாமிலயிருந்த மாணவர்களை அரசாங்கத்தோட கதைச்சு வெளியில எடுத்துக் கொண்டு வந்து, படிக்கிறதுக்கான உதவிகளைச் செய்து விட்டதும் இந்த டக்ளஸ் தேவானந்தாதான்.

இப்பிடியே நாங்கள் சொல்லிக்கொண்டு போகலாம். இதெல்லாம் பொய்யோ புளுகோ இல்லை. நடந்த உண்மையான சங்கதியள்.

ஆனால், இந்த வாத்திமார் சொல்லுகிற கூடுதலான மக்களின் ஆதரவைப் பெற்ற ஆக்கள் இதில எதைச் செய்தவை. இல்லாட்டிக்கு இதுவரையில இந்தப் பல்கலைக்கழகத்துக்கு என்னத்தைச் செய்து கிழிச்சவை எண்டதை ஒருக்கால் சொல்ல வேணும். அதை நாலு சனம் அறியட்டும்.

இவ்வளவுக்கும் ஒவ்வொரு தேர்தல் வரேக்கயும் இந்த வாத்திமாரும் தண்ணியடிக்கிற கொஞ்சப் பெடியளுமாகச் சேர்ந்து [பெரும்பாலானவையள் இதில சேர்த்தி இல்லை] பல்கலைக்கழகத்தின்ரை பேராதரவை வழங்குறாம் எண்டு கூட்டமைப்புக்காரருக்குச் சார்பாகவே அறிக்கை விடுகிறவை. அதோட ராப்பகலாக ஊர் ஊராகத் திரிஞ்சு தேர்தல்வேலை வேற செய்யிறவை.

இப்பிடியெல்லாம் செய்து வெற்றியடைய வைச்சவையைக் கொண்டு பல்கலைக்கழகத்துக்காக ஒரு தும்புத்தடியை வாங்கியிருப்பினமா?

1974 இல் இந்தப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கேக்க இதை வேண்டாம் எண்டு உண்ணாவிரமிருந்த கோஸ்டியின்ரை வாரிசுகள்தானே இவை. அப்பிடியெண்டால் வேற எப்பிடிச் சிந்திப்பினம்?

சுரைக்கொட்டையைத் தாட்டால் பூசினியா முளைக்கும்?

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல். - டெஸ்கார்டஸ்

தினமுரசு
திணப்பதிப்பு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

யார் அந்தத் துரோகிகள்?

"வடக்கு மாகாணத்துக்குக் கிடைக்கவேண்டிய அதிகாரங்களையும் அபிவிருத்தி உதவிகளையும் யார் தடுக்கின்றனரோ அவர்கள் துரோகிகளே" என்று வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் திருவாய் மலர்ந்துள்ளார்.

தமிழ் சமூகத்திற்கு சேவையாற்றக் கூடியவர்களை, சமூகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லக் கூடியவர்களை, மக்கள் நிலை உயர உழைப்பவர்களை கண்டுபிடித்துக் கொள்கிறோமோ இல்லையோ துரோகிகளை மட்டும் காலத்துக்குக் காலம் புதிது புதிதாய்க் கண்டுபிடித்துக் கொண்டிருப்பதில்தான் நாம் பேர்பெற்றவர்களாயிற்றே!

கடந்த இரண்டரை தசாப்த காலமாக விடுதலைப் புலிகள் கோலோச்சிய காலத்தில் துரோகிகளாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலானோரே தற்சமயம் தமிழ் சமூகத்தின் துரோகிகளைக் கண்டுபிடித்து அறிவிப்பவர்களாக வந்திருக்கிறார்கள். இது நம் தமிழ்த் தேசிய அரசியலில் சகஜம்தான் என்பதால் நாம் புதிதாக ஆச்சரியப்பட ஒன்றுமில்லை!

கடந்த ஒரு வருட காலமாகத்தான் தமிழ்மக்களின் அரசியல் வாழ்வில் திடீர் கவனம் கொண்டிருக்கும் வட மாகாண முதலமைச்சருக்கு, யாரையாவது துரோகிகள் என்று அறிவித்துக் கொண்டிருப்பதுதான், சும்மா இருந்துகொண்டே தியாகி பேர்வாங்கி தேர்தல்களில் வென்றுகொள்வதற்கான வழி என்பது அதற்குள்ளாகவே தெரிந்துவிட்டது.

என்ன இருந்தாலும் முன்பு நீதியரசராக இருந்த புத்திமான் அல்லவா! அவருக்குத் தமிழ்த் தேசிய அரசியலின் சூட்சுமம் சட்டென்று விளங்கிவிட்டது.

உங்களை யாரும் துரோகி என்று சொல்லிவிடாமல் இருக்க வேண்டுமானால், நீங்கள் முந்திக்கொண்டு "துரோகிகள் தடுக்கிறார்கள்... துரோகிகள் ஒன்றும் செய்ய விடுகிறார்களில்லை... துரோகிகளால்தான் மக்களுக்குத் தீர்வு கிடைக்காமலிருக்கிறது..." என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதுமானது.

ஆனாலும் ஆனைக்கும் அடிசறுக்கும் என்பதுபோல, எந்தெந்தச் செய்திகளுக்கு அந்த வாய்ப்பாட்டை எடுத்துவிட வேண்டுமென்பதில் முதலமைச்சர் அவர்கள் சற்றுக் கவனக்குறைவாக இருந்துவிட்டார் என்றே தெரிகிறது.

என்ன இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பழந்தின்று கொட்டையைப் போட்ட தலைவர்கள் அளவுக்கு இவருக்கு அரசியல் அனுபவம் பத்தாது என்பது உண்மைதானே! முதலமைச்சரின் துரோகிகள் அறிவிப்போடு வந்திருக்கும் செய்தி இதுதான்:

"இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் வடக்கு மாகாண சபையின் காலதாமதம்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நிறுவனம், திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்திருந்த தனது பங்கினை விலக்கிக்கொண்டுள்ளது. இதன் பிரகாரம் சுமார் 5 ஆயிரத்து 232 மில்லியன் ரூபா நிதியைத் திரும்பப் பெறப்போவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதில் கால தாமதம் மற்றும் திட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளமை என்பவற்றை அடுத்தே நிதியை மீளப் பெற்றுக் கொள்வதற்கு அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 7 ஆயிரத்து 630 மில்லியனும், விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் 2 ஆயிரத்து 180 மில்லியனும், இலங்கை அரசு 2 ஆயிரத்து 838 மில்லியனும் வழங்கியிருந்தன. அவற்றுக்கு மேலாக பிரான்ஸைச் சேர்ந்த ஏ.எவ்.டி நிறுவனம் 5 ஆயிரத்து 232 மில்லியன் ரூபா வழங்கியிருந்தது. அந்த நிதியே திரும்பப் பெறப்பட்டுள்ளது."

பாரிய இரணைமடுக் குடிநீர்த் திட்டத்திற்கு கிடைத்த பெருந்தொகை வெளிநாட்டு நிதி, வடக்கு மாகாணசபை ஒரு தீர்மானம் எடுக்கமுடியாமல் காலத்தை இழுத்தடித்ததால், திரும்பிவிட்டது. "வடக்கு மாகாணத்திற்கு கிடைக்க வேண்டியவற்றைத் தடுப்ப வர்கள் துரோகிகளே" என்கிறார் முதலமைச்சர். என்ன சொல்ல? - ஆசிரியர்

புலிகளை வெற்றிகொண்ட அரசு முஸ்லிம்களை பாதுகாக்க தவறிவிட்டது

ஐ.தே.க எம்.பி. கண்டனம்

(கொழும்பு)

யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்ததாகக் கூறும் ஜனாதிபதியால் அளுத்கம பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்களை காப்பாற்ற முடியாமல் போனதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தெவரப் பெரும தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களின் போது, நாடாளுமன்ற உறுப்பினரான இவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

அளுத்கம, தர்காநகர் மற்றும் பேருவளை உள்ளிட்ட நகரங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடித்த வன்முறைகளைத் தொடர்ந்து பொலிஸ் ஊரடங்கு உத்தரவுக்கு மத்தியிலும், அண்டையில் உள்ள வெலிப்பென்ன நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகள் பல எரிக்கப்பட்டன. வீடுகளும் தாக்கப்பட்டன.

இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் குடும்பமொன்று மரண வீடொன்றுக்குச் செல்வதற்காக அளுத்கமவிலிருந்து வெலிப்பென்ன செல்லவேண்டியிருந்தது.

அந்தக் குடும்பத்தை பாதுகாப்பாக அழைத்துச்சென்றபோதே நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தெவரப்பெரும மீதும் வன்முறையாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

தன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பாலித்த தெவரப்பெரும பாராளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சனை எழுப்பியிருந்தார்.

வன்முறைகளில் ஈடுபட்டவர்களை பௌத்தர்கள் என்றோ சிங்களவர்கள் என்றோ சொல்லமுடியாது. ஞானசார என்கின்றவர் நடத்துகின்ற தனியான மதப்பிரிவின் வன்முறையாளர்கள் தான் இந்த தாக்குதல்களை நடத்தினார்கள். சரியென்றால் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியும் பதவி விலகவேண்டும் என்றார் பாலித்த தெவரப்பெரும.

முப்பது ஆண்டுகால யுத்தத்தை முடித்துவைத்த ஜனாதிபதியால் ஓரிரு கிலோமீற்றர் பரப்புக்குள் வாழும் மக்களைக் காப்பாற்ற முடியாமல் போனதற்காக ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்றார் அவர். காவல்துறையினர் சுமார் 500 பேர் வீதியில் நின்றுகொண்டிருக்க தம்மீது வன்முறையாளர்கள் தாக்குதல் நடத்தியதாக தெவரப்பெரும கூறினார்.

சின்னப் பிள்ளைகள் 5 பேர் என்னுடன் இருந்தார்கள். கைக்குழந்தைகளும் இருந்தார்கள். வயதான தாய்மாரும் கர்ப்பிணித் தாய்மார் இரண்டு பேரும் வாகனத்தில் இருந்தனர். நான் வாகனத்தை முடிந்தவரை வேகமாக ஓட்டிவந்தேன். சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு இரண்டு பக்கமும் இருந்து கொண்டு எங்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். பெற்றோல் போத்தல்கள், மணல் போத்தல்கள், கறகள். கம்புகளைக் கொண்டு தாக்கினார்கள் என்றார் ஐ.தே.க எம்.பி.

அளுத்கம வன்செயல்கள்; விசாரணைக்குழுக்கள் களத்தில்

அளுத்கம, பேருவளை மற்றும் வெலிபன்ன பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஐந்து விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களப் ஆகியவற்றின் விசாரணைக் குழுக்களும் இதில் அடங்குவதாக பொலிஸ ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிடுகின்றார்.

சம்பவம் இடம்பெற்ற பகுதிகளின் பாதுகாப்பிற்காக பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையை சேர்ந்த பத்தாயிரம் பேர் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அந்தப் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அஜித் ரோஹண சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணையொன்றை ஆரம்பித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர், கலாநிதி பிரதிபா மஹாநாமஹேவா தெரிவிக்கின்றார்

பண்டாரநாயக்கா கட்டிவளர்த்த சுதந்திரக்கட்சி அழிவுப் பாதையில்

சீறுகிறார் பொன்சேகா

பண்டாரநாயக்க குடும்பத்தினர் அர்ப்பணிப்புகளை மேற்கொண்டு கட்டியெழுப்பிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இன்றைய ஆட்சியாளர்களான மகிந்த ராஜபக்ஷவினர் அழித்து வருகின்றனர் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பதுளையில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

எத்தனை தேர்தல்களை நடத்தினாலும் அது நீதியான முறையில் நடத்தப்படாவிட்டால் அதில் பயனில்லை எனவும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்களை நடத்தும் போது சகல கட்சிகளும் சுதந்திரமாக ஊடகங்களை பயன்படுத்தி, பிரசாரங்களை மேற்கொள்ள இடமளிக்கப்பட வேண்டும். அரச ஊடகங்களை அரசாங்கம் அநீதியான முறையில் பயன்படுத்தி வருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழித்து வரும் இன்றைய ஆட்சியாளர்கள், பிரச்சினைகளை ஏற்படுத்தி அதிகாரத்தை தக்கவைக்க முயற்சித்து வருகின்றனர் எனவும் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார்.

துரத்துகிறது டெங்கு; அதிகதாக்கம் தெற்கில்

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 45 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

அத்துடன் 15 ஆயிரம் பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இம்மாதத்தின் இதுவரையான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 357 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 868 பேர் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான 5 ஆயிரத்து 648 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 368 பேரும் களுத்துறை மாவட்டத்தில் ஆயிரத்து 22 பேரும் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் கடந்த மே மாதத்திலேயே அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மூவாயிரத்து 988 பேர் கடந்த மாதத்தில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதுடன், கடந்த ஜனவரி மாதம் மூவாயிரத்து 605 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை மேல் மாகாணத்தில் இராணுவத்தினர் பொலிஸார் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன இணைந்து இரண்டாவது நாளாகவும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளனர்.

டெங்குக் காய்ச்சல் தொடர்பாக மக்களைத் தெளிவூட்டும் செயற்பாடு இதன்போது முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் பபா பலிஹவடன தெரிவித்தார்.

பிரச்சினையை வளர்த்ததும் இவர்களே! அரசியல் லாபம் தேடுவதும் இவர்களே!

பதின்மூன்றாவது திருத்தத்தில் மாகாண சபைக்கென ஒதுக்கப்பட்ட (37) முப்பத்தேழு விடயங்களில் ஒன்றுகூட இப்போது இல்லையா? யார் அவற்றைப் பறித்தது? மக்கள் நலனுக்காக மேற்கொள்ளப்பட்ட எந்த நடவடிக்கையை ஆளுநரும் பிரதம செயலாளரும் தடுத்தார்கள்? இந்த விபரங்களை முதலமைச்சர் வெளியிடுவாரா?

சங்கர சிவன்

அரசாங்கம் இன ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் பட்டியல் போட்டுக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள். தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப் படுகின்றன. சிங்களக் குடியேற்றம் இடம்பெறுகின்றது, பௌத்த மத விஸ்தரிப்பு, இராணுவப் பிரசன்னம் என்றெல்லாம் ஏராளம் குற்றச்சாட்டுகள். இது ஒன்றும் புதியதல்ல. தமிழரசுக் கட்சி முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை தவறாமல் ஒப்புவித்த குற்றச்சாட்டுப் பட்டியல்.

இவையொன்றும் நடக்கவில்லை என்று யாரும் செல்ல முடியாது. ஆறு தசாப்தங்களுக்கு மேலாக அடுத்தடுத்து இக்குற்றச் சாட்டுக்களை ஒப்புவித்த தலைவர்கள் இவற்றைத் தடுப்பதற்கு என்ன செய்தார்கள் என்பதே கேள்வி. ஒன்றும் செய்யவில்லை என்று சொல்ல முடியாது. நாடாளுமன்றத்தில் கனல் பறக்கப் பேசினார்கள். பத்திரிகைகளில் நீண்ட அறிக்கை களை வெளியிட்டார்கள். மேடைகளில் வீராவேசமாக முழங்கினார்கள். சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் சத்தியாக் கிரகங்களும் ஊர்வலங்களும் நடாத்தினார்கள். ஆனால், உருப் படியாக ஒன்றும் செய்யவில்லை. இன்றும் அதே கதைதான். இந்தப் பாணி அரசியல் அன்றும் பலன் தரவில்லை. இன்றும் பலன் தரவில்லை. இனியும் பலன் தரப்போவதில்லை.

அன்றிலிருந்து இன்று வரை மக்கள் நாளுக்கு நாள் புதுப் புதுப் பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக் கின்றார்கள். தலைவர்கள் சரியான வழியில் செல்லாததே இதற்குக் காரணம். தலைவர்களுக்கு ஒரு பாதிப்பும் இல்லை. பிரச்சினைகள் இருக்கும் வரை அவர்களின் பதவிக் கதிரைகளும் இருக்கும்.

பிரச்சினைக்குப் பொறுப்பானவர் களுடன் நேரடியான பேச்சு வார்த்தை, கிடைக்கும் அதிகாரங்கள் குறைவானவை யெனினும் அந்தத் தீர்வை ஏற்றுக்கொண்டு மேலதிக அதிகாரங்களுக்காக முயற்சித்தல், தீர்வில் கருத்தீடுபாடு என்பன பிரச்சினைகளின் தீர்வைப் பெறுவதற்கு முக்கியமானவை. பத்திரிகை அறிக்கை களும் வீர முழக்கப் பேச்சுகளும் தேர்தலில் வாக்குகளைப் பெற்றுத் தரலாமேயொழிய பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரக்கூடியவையல்ல.

ஏதாவதொரு தீர்வு முன்வைக்கப்படும் போது அதை ஏற்றுக்கொள்வதற்கு தயங்கக்கூடாது. ஏற்று நடை முறைப்படுத்திக்கொண்டு மேலதிக அதிகாரங்களுக்காகத் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கூட்டமொன்றில் கூறியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகமொன்றை நிறுவுவதற்கு அன்றைய அரசாங்கம் முயற்சிகள் மேற்கொண்டபோது தமிழரசுக் கட்சி அதைத் தீவிரமாக எதிர்த்தது. எதிர்ப்புக் கூட்டங்களும் உண்ணாவிரதங்களும் நடாத்தினார்கள். எங்களுக்குப்பல்கலைக் கழகம் வேண்டுமேயொழிய வளாகம் தேவையில்லை என்றார்கள். இவர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் வளாகத்தை நிறுவியது. இன்று அது முழுமையான பல்கலைக்கழகமாக வளர்ந்திருக்கின்றது. எல்லாப் பிரச்சினைகளிலும் இவ்வாறான அணுகுமுறையே ஆக்கபூர்வமானது.

இனப்பிரச்சினையே தமிழ் மக்களுக்கு அடிப்படையானது. இனப்பிரச்சினையின் தீர்வுக்கான பல சந்தர்ப்பங்கள் தமிழ்த் தலைமைக்குக் கிடைத்தன. ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தமிழ்த் தலைமை வேண்டுமென்றே கைநழுவவிட்டது. வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபை, சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம், 1965 இலும், 1972 இலும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் பிரதான சரத்துகள் எனக் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தமிழ்த் தலைமை சரியாகப் பயன் படுத்தியிருந்தால் பிற்காலத்தில் தமிழ் [illegible]களுக்கு ஏற்பட்ட இழப் [illegible]ளும் அழிவுகளும் ஏற்பட்டிருக்க மாட்டா. இன ஒழிப்பு என்று கூட்டமைப்புத் தலைவர்கள் சுட்டிக் காட்டுகின்ற பிரச்சினை கள் பெருமளவுக்குத் தீர்க்கப்பட்டிருக்கும். அன்று முதல் இன்று வரை தமிழ்த் தலைவர்கள் ஒரே பிரச்சினைகளைப் பற்றியே பேசிவருகின்றார்கள். காணி அபகரிப்பு பற்றியும் சிங்களக் குடியேற்றம் பற்றியும் பௌத்த மத விஸ்தரிப்பு பற்றியும் அன்றும் பேசினார்கள். இவற்றைப் பற்றி உணர்ச்சியூட்டும் வகையில் பேசிப் பேசி வாக்குகளைப் பெற்றுத் தங்கள் பதவி களைத் தக்கவைத்தார்களேயொழிய அவற்றின் தீர்வுக்கான சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. கிடைத்த சந்தர்ப்பங்களைச் சரியான முறையில் பயன்படுத்தியிருந்தால் இன்று இனப்பிரச்சினைகள் பற்றிப் பேசவேண்டிய நிலை வந்திருக்காது.

எந்தத் தீர்வை முன்வைத்தாலும் அதி காரம் போதாது என்று கூறி நிராகரிப்பது இவர்களுக்கு வழக்கமாகி விட்டது. உண்மையில் அதிகாரம் போதாது என்பதற்காக நிராகரித்தார்களா அல்லது வேறு நோக்கத்துக்காக நிராகரித்தார்களா என்பதையிட்டுத் தமிழ் மக்கள் மத்தியில் தெளிவு வேண்டும். ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை அதிகாரம் போதாது எனக் கூறி நிராகரித்தார்கள். அதே தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பல வருடங்களுக்குப் பின் கோரிக்கை விடுத்தார்கள். அந்தத் தீர்வுத் திட்டத்தை அதிகாரம் போதாது என்பதற்காக இவர்கள் நிராகரிக்கவில்லை என்பதும் வேறு ஏதோ நோக்கத்துக்காகவே நிராகரித்தார்கள் என்பதும் இதிலிருந்து விளங்குகின்றது. இந்தத் தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு வந்திருந்தால் இன்று இவர்கள் இன ஒழிப்பு என்று பேசுகின்ற எந்தப் பிரச்சினையும் இருந்திருக்காது. தமிழ்த் தலைமை தமிழ் மக்களின் நலனிலும் பார்க்க வேறு ஏதோ நலனில் கூடுதலான அக்கறை கொண்டிருக்கின்றது என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் பிர தான சரத்துக்களை நடைமுறைக்குக் கொண்டுவரக் கூடியதாகக் கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களையும் தமிழ்த் தலைவர்கள் சரியாகப் பயன்படுத்தி யிருந்தால் எல்லாப் பிரச்சினைகளும் எப்போதோ தீர்ந்திருக்கும். இடதுசாரி களுடன் சேர்ந்து செயற்படக் கூடாது என்பதற்காகவே அச்சந்தர்ப்பங்களைத் தமிழ்த் தலைவர்கள் நிராகரித்தார்கள். தமிழ் மக்களின் நலனிலும் பார்க்க இடதுசாரி எதிர்ப்பு மேலோங்கியிருந்தது. கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களின் நலனுக்குப் புறம்பான நோக்கத்துக்காக நிராகரித்ததாலேயே குடியேற்றம், காணி போன்ற பிரச்சினைகள் இன்று வரை தொடர்கின்றன. இப்பிரச்சினை களைக் காரணம் காட்டி அரசாங்கத் துக்கு எதிராக இன ஒழிப்புக் குற்றச் சாட்டைச் சுமத்தும்போது அதில் தமிழ்த் தலைமைக்கும் சம அளவில் பங்கு உண்டு என்பது கெட்டித்தனமாக மறைக்கப்படுகின்றது. ஆக்கபூர்வமான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத தன் மூலமும் கிடைத்த சந்தர்ப்பங்களை நிராகரித்ததன் மூலமும் பிரச்சினைகள் வளர்வதற்கு வழியமைத்த தமிழ்த் தலைவர்கள் எந்தக் குற்றமும் செய்யாதவர்களா?

தமிழ்த் தலைமை பழைய பாணி அரசியலை இன்னும் கைவிடத் தயா ராக இல்லை. இப்போதும் தேர்தலை இலக்கு வைத்து ஆர்ப்பாட்டங்களும் சத்தியாக்கிரகங்களும் செய்கின்றார் களேயொழியப் பிரச்சினையின் தீர்வை நோக்கிய செயற்பாடு இல்லை. அளவுகணக்கின்றி வாக்குறுதிகளை அள்ளிக்கொட்டி வடமாகாண சபையைக் கைப்பற்றியவர்கள் அதை முடக்குவதிலேயே கவனம் செலுத்துகின்றார்கள். தங்கள் செயலை நியாயப்படுத்துவதற்காக ஆதாரபூர்வமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள். மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லை என்று ஆளுநரும் பிரதம செயலாளரும் செயற்பாட்டுக்குத் தடையாக இருக்கின் றார்கள் என்றும் முதலமைச்சர் செல்லுமிடமெல்லாம் கூறுகின்றார். பதின்மூன்றாவது திருத்தத்தில் மாகாண சபைக்கென ஒதுக்கப்பட்ட (37) முப்பத்தேழு விடயங்களில் ஒன்றுகூட இப்போது இல்லையா? யார் அவற்றைப் பறித்தது? மக்கள் நலனுக்காக மேற்கொள்ளப்பட்ட எந்த நடவடிக்கையை ஆளுநரும் பிரதம செயலாளரும் தடுத்தார்கள்? இந்த விபரங்களை முதலமைச்சர் வெளி யிடுவாரா?

ஆக்கபூர்வமான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளாததன் மூலமும் கிடைத்த சந்தர்ப்பங்களை நிராகரித்ததன் மூலமும் பிரச்சினைகள் வளர்வதற்கு வழியமைத்த தமிழ்த் தலைவர்கள் எந்தக் குற்றமும் செய்யாதவர்களா?

மாகாண சபை விடயத்தில் பொய்கூறி மக்களை ஏமாற்றுவதைப் போலவே நாடாளுமன்றத் தெரிவுக் குழு விடயத் திலும் கூட்டமைப்பு நடந்து கொள்கின் றது. தெரிவுக் குழுவுக்குப் போனால் உள்ளதையும் இழக்க நேரிடும் என்று முதலமைச்சர் ஒரு கூட்டத்தில் பேசியிருக் கின்றார். பதின்மூன்றாவது திருத்தத்தை இழக்க நேரிடும் என்பதே அவர் சொல்ல வந்த விடயம். தெரிவுக்குழு எடுக்கும் எந்த முடிவும் நாடாளுமன்றத் தின் அங்கீகாரத்துடனேயே நடை முறைக்கு வர முடியும். பதின்மூன் றாவது திருத்தத்தில் எந்த மாற்றம் செய்வதாக இருந்தாலும் அரசியலமைப் புத் திருத்தம் அவசியம். அரசியலமைப் புத் திருத்தத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வேண்டும். பதின்மூன்றாவது திருத்தத் தில் மாற்றம் செய்வதற்கு மூன்றி லிரண்டு பெரும்பான்மை கிடைக்கா தென்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட விடயம். உண்மை நிலை இவ்வாறிருக்க முதலமைச்சர் மக்களின் காதில் பூச்சுற்றுகிறார்.

தெரிவுக் குழு காலத்தைக் கடத்துவதற் கான கண்துடைப்பு என்பது மற்றொரு குற்றச்சாட்டு. வெறும் ஊகத்தில் இக்குற்றச்சாட்டைக் கூறாமல் தெரிவுக் குழுவில் பங்குபற்றுங்கள். ஆறு மாதங் கள் தானே. எதுவும் நடக்கவில்லை யென்றால் உங்கள் குற்றச்சாட்டு ஆதாரபூர்வமானதாக இருக்கும். அப்போது அரசாங்கத்தை நீங்கள் அம்பலப்படுத்தலாம்.

இவர்களின் பிரச்சினை வேறு. தெரிவுக் குழுவுக்குப் போய் எதைச் சொல்வது? பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்பமாக ஏற்க முடியாது [illegible]ர்கள். அரசியல் தீர்வுக்காக நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவுக்குப் போய் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று எப்படிச் சொல்வது? இவர்களிடம் கைவசம் ஒரு தீர்வும் இல்லை. தீர்வுக் கான ஆலோசனைகளை மக்களிட மிருந்து இப்போது தான் கோருகின்றார் கள். இந்த நிலையில் தெரிவுக் குழுவுக்குப் போய் எந்தத் தீர்வை முன்வைத்துப் பேசுவது?

தலைவர்களுக்கு ஒரு பாதிப்பும் இல்லை. பிரச்சினைகள் இருக்கும் வரை அவர்களின் பதவிக் கதிரைகளும் இருக்கும்.





மனித உரிமை பேசும் சர்வதேசம் பச்சோந்தியாக செயற்படுகிறது

ஜனாதிபதி ஆக்ரோஷம்

மனித உரிமை பற்றிப் பேசிக்கொண்டு பச்சோந்திகளாக செயற்படும் சர்வதேசத்தின் செயற்பாடுகளில் நாம் அவதானத்துடன செயற்பட வேண்டியது அவசியமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சட்டங்களில் மட்டுமன்றி அனைத்திலும் அவர்கள் இருபக்கம் தலையாட்டும் பச்சோந்திகளாக செயற்பட்டு வருவதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி மனித உரிமை, இனநல்லிணக்க செயற்பாடுகளில் எம்மிடமிருந்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

நாட்டு மக்கள் நல்லிணக்கத்துடன் செயற்படுகையில் நம்மிடையே நல்லிணக்க மில்லாத சில அரசியல்வாதிகள் அரசியல் அதிகாரங்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் சர்வதேசத்திற்கு நாட்டைக் காட்டிக்கொடுத்து வருகின்றனர் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உள்நாட்டில் மக்கள், இனம், மதம் தொடர்பில் எதையும் பேசாத இத்தகைய அரசியல்வாதிகள் சர்வதேசமெங்கும் தவறான பிரசாரங்களை மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கண்டி போகம்பறை சிறைச்சாலையை அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பொறுப்பேற்கும் விசேட வைபவம் நேற்றுமுன்தினம் போகம்பறை முன்றலில் நடைபெற்றது.

அமைச்சர்கள், சந்திரசிறி கஜதீர, கெஹெலிய ரம்புக்வெல்ல உட்பட அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் துறைசார்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி:

போகம்பறை சிறைச்சாலையை அபிவிருத்திக்காக கையேற்கும் அதேவேளை இந்தச் சிறைச்சாலை பள்ளேகலைக்கு மாற்றப்படுகிறது. இது நூறு வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க சிறைச்சாலையாகும்.

அன்று எமது படையினர் இங்கிருந்தது போன்று எமது அரசியல் வாதிகளும் இந்தச் சிறைக் கூண்டுகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ள அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ போன்றோரும் இந்தச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

எனது அதிர்ஷ்டம் நான் இந்தச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை. மெகசீன் மற்றும் தெற்கிலுள்ள சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்தேன்.

சிறைச்சாலைகளை மூடிவிட்டு குற்றச் செயல்கள் இல்லாத நாட்டை உருவாக்குவதே எமது நோக்கம். சகல சிறைச்சாலைகளும் புனர்வாழ்வு நிலையங்களாக மாற்றப்படவேண்டும். அதுவே எமது எதிர்பார்ப்பு.

புலிகளையும் புலிகளின் தற்கொலையாளிகளையும் ஆயுதம்தரித்து மனித உயிர்களை அழித்தொழித்த புலிகளுக்கும எம்மால் புனர்வாழ்வளிக்க முடியுமானால், அவர்களை மீண்டும் சமூகத்தோடு இணைக்க முடியுமானால், சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கு புனர்வாழ்வளிப்பது எம்மால் முடியாத காரியமல்ல.

அநேகமாக நாம் சிறைச்சாலைகளைப் பார்க்கும்போது, சிறைச்சாலைகள் நீதிமன்றத்தின் தடுப்புக்காவல் தண்டனை பெற்றோரே பெருமளவில் உள்ளனர். வழக்கு விசாரணைக்கு செல்லும்போது அத்தகையோருக்கு 2 வாரம், மூன்றுவாரம் என சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது.

இவர்கள் சிறு சிறு குற்றம் செய்தவர்களே. நான் அண்மையில் கண்ட ஒரு உண்மை, தொலைபேசியொன்றை திருடியவர், காட்டுக்குள் பிரவேசித்தார் என்ற குற்றச்சாட்டில் அவர்களுக்கு சிறைதண்டனை, விதிக்கப்பட்டுள்ளது.

மரம் வெட்டியிருந்தாலும் பரவாயில்லை அத்துமீறி காட்டுப் பகுதிக்குள் பிரவேசித்தமைக்காக அவர் சிறைத்தண்டனையை அனுபவிக்கிறார்.

எனினும் அண்மைக் காலங்களில் மரக்குற்றிகள் திருடி ஏற்றிச்செல்லும் அநேக லொறிகளை பார்க்க முடிகிறது. இது தொடர்பில் நாம் சற்றுச் சிந்திக்க வேண்டியுள்ளது.

சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும் இது தொடர்பில் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியுள்ளது. சிறைச்சாலைகளை நிரப்புவது எமது நடவடிக்கையாக அமையக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளக இடப்பெயர்வுக்கு உசிதமான தீர்வு

ஐ.நா. அதிகாரிகள் பாராட்டு

வடக்கில் 2009 ஆம் ஆண்டு இடம் பெற்ற இடபபெயர்வு விடயத்தில் முன்னேற்றத்தை கண்டுள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

இதன்படி 2009 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த 573, 651 உள்ளக இடம் பெயர்ந்தோர் மிகவிரைவில் மீள்குடியேற்றப்பட்டதாக உயர்ஸ்தானிகரம் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை தமது அமைப்பு வெளிநாடுகளில் இருந்த இலங்கை அகதிகளில் 11400 பேர் சுயமாக நாடு திரும்புவதற்கு உதவியளித்ததாக உயர்ஸ்தானிகரம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ஏனைய நாடுகளில் அகதி அந்தஸ்து கோரும் பட்டியலில் இலங்கை 1547 இற்கு 291 என்ற குறைந்த எண்ணிக்கை அளவை கொண்டுள்ளது. அத்துடன் அமைப்பின் அறிக்கையில் முன்னர் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றின்படி நாடற்றவர்களாக இருந்த இந்திய வம்வாவளிகளுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட்டமையையும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.


ஊழல் புரியும் அமைச்சர்கள் தகவல் வெளியிடத் தயக்கம்

ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட அமைச்சர் பிரதியமைச்சர்களின் பெயர் விபரங்களை வெளியிட முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. 2005 ஆம் ஆண்டின் பின்னர் ஊழல் மோசடிக் குற்றம் சுமத்தப்பட்ட அமைச்சர்கள் மறறும் பிரதி அமைச்சர்களின் பெயர் விபரங்கள் வெளியிடமுடியாது என தெரிவித்துள்ளது. சட்ட பிரச்சினைகள் காரணமாக இவ்வாறு பெயர் விபரங்களை வெளியிட முடியாது என குறிப்பிட்டுள்ளது.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அமைச்சர் பிரதி அமைச்சர்களின் பெயர் விபரங்களை வெளியிடுமாறு ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரஷ ராஜகருணா கோரியிருந்தார். சட்டச் சிக்கல்கள் காணப்படுவதனால் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களின் பெயர் விபரங்களை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முடியாது என ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். நாடாளுமன்றின் சட்டத்தின் அடிப்படையில் தகவல்களை வெளியிடமுடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைக்கு தூபம் மத அமைப்புக்கள் மீது கண்டனம்

அமைச்சர் யாப்பா சீற்றம்



(கொழும்பு)

சில மதங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறும் சில அமைப்புக்கள் நாட்டில் வன்முறைகளைத் தூண்டி வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான குழுக்களால் நாட்டில் பல்வேறு தேவையற்ற வன்முறைகளை உருவாவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதவிவகாரங்களுக்கான பொலிஸ் பிரிவு களத்தில்

குவிகின்றன முறைப்பாடுகள்

(கொழும்பு)

மத விவகாரங்கள் தொடர்பான முறைபாடுகளை விசாரிக்கும் விசேட பொலிஸ் பிரிவிற்கு இதுவரை 52 முறைபாடுகள் கிடைத்துள்ளன. இந்த விசேட பொலிஸ் பிரிவு கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

தொடர்ந்தும் இந்த விசேட பொலிஸ் பிரிவை நடாத்திச் செல்ல எதிர்ப்பார்ப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

மத விவகாரங்கள் தொடர்பான முறைபாடுகளை விசாரிக்கும் விசேட பொலிஸ் குழுவிற்கு தொலைபேசி ஊடாகவோ அல்லது பக்ஸ் மூலமோ முறைபாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

0112 30 76 74 அல்லது 0112 30 66 94 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முறைபாடுகளை தெரிவிக்க முடியும்.

இதுதவிர 0112 30 66 88 மற்றும் 0112 30 74 06 ஆகிய பக்ஸ் இலக்கங்களுக்கும் மத விவகாரங்கள் தொடர்பான முறைபாடுகளை முன்வைக்க முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை ஐ.நா. அதிகாரிகளுடன் ஹக்கீம் பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஒஸ்கார் பெர்ணண்டஸ் டெரன்கோ, இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி சபினய் நந்தி மற்றும் தூதுக்குழுவினர் நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமை, கட்சியின் தாருஸ்ஸலாம் தலைமையகத்தில் நேற்று முன்தினம் சந்தித்து, நீண்டநேரம் கலந்துரையாடியுள்ளனர்.

ஏறத்தாழ ஒன்றேகால் மணி நேரம், இச்சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு அமைச்சர் ஹக்கீம் கூறுகையில்,


அண்மையில் அளுத்கம, தர்கா நகர், பேருவளை, சீனன் கோட்டை மற்றும் அண்டியுள்ள பிரதேசங்களில் நடைபெற்ற இனவாத வன்செயல்களின் பின்னணியில் அமைந்த பல விடயங்களைத் தெரிவித்திருக்கிறேன்.

மக்களை ஆத்திரமூட்டி, வன்செயல்களைத் தூண்டிய இனவாத அமைப்புகளின் செயற்பாடுகளை பொறுத்தவரை அவற்றை மேற்கொண்டோருக் கெதிராக குறிப்பாக பொலிஸாரும், அரசாங்கமும் உரிய நடவடிககை எடுக்கத் தவறியமையை பற்றி சுட்டிக்காட்டி, இவ்வாறான வன்செயல் புரிவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயக்கம் காட்டும் பின்புலம் பற்றி விளக்கம் அளித்தேன். மற்ற சமூகங்களை இழிவுபடுத்தி மோசமான வார்த்தை பிரயோகங்களை கையாண்டு, வெறுக்கத்தக்க பேச்சுகளை பேசுவோரை தண்டனைக்குரிய குற்றத்தின்கீழ் கைது செய்வது தொடர்பில் ஏற்கனவே தண்டனைச் சட்டக் கோவையில் திருத்தங்களை கொண்டு வருவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சரவை தீர்மானம் மேற்கொண்டிருக்கிறது.

ஆனால் இன்னும் சட்டமாக்கப்படவில்லை என்ற குறைபாடு நிவர்த்திக்கப் படவேண்டும் என்பதை கூறியதோடு மட்டுமல்லாமல், பயங்கரவாத தடைச்சட்டத்திலும் இதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே இருக்கின்ற பின்னணியில், அரசு சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் இன்று குறைந்து வருகின்ற அரசாங்கத்தின் மீதான நம்பகத்தன்மையை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு 38 ஆலோசகர்கள் ஜே.வி.பி. போர்க்கொடி தூக்குகிறது

(கொழும்பு)




ஜனாதிபதியின் ஆலோசகர்களுக்காக 41 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதியின் ஆலோசகர்களுக்காக அரசாங்கம் இந்தப் பணத்தை செலவிட்டுள்ளது.


38 ஜனாதிபதியின் ஆலோசகர்களுக்காக அரசாங்கம் 41 மில்லியன் ரூபா பணத்தை செலவிட்டுள்ளதாக நாடாளுமன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன இதனை அறிவித்துள்ளார். ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பணியாளர்களுக்காகவும் அரசாங்கம் பாரியளவில் பணத்தை செலவிட்டு வருவதாக அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி ஆலோசகர்களுக்காக பெருந்தொகைப் பணத்தை செலவிடுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.





அச்சுவேலி வருணன் அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய மணவாளக்கோல விழா அண்மையில் நடைபெற்ற போது வீரபத்திரருக்கு பூசை வழிபாடுகள் இடம்பெறுவதையும் வீரபத்திரப் பெருமான் வீதியுலாவருவதையும் காணலாம். (01)

அபிவிருத்திக்கான கதவுகளை எந்நேரமும் திறந்து வைத்திருக்கிறோம்

கே.வி.குகேந்திரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மக்களுக்கான அபிவிருத்தி பணியில் நாம் இதுவரை எந்த வொரு தவறுகளையும் செய்ய வில்லை அதுமட்டுமன்றி நாட்டின் அபிவிருத்திக்கான கதவு களை எந்நேரமும் திறந்து வைத திருக்கிறோம் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பா ளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி. கேந்திரன் தெரிவித்தார்.

கடந்த கால யுத்தத்தின் கார ணமாக முற்றாக அழிந்து போன அரியாலை ஈச்சங்காடு கொட்டுக்கிணற்று மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் மற்றும் அந்த ஆலயத்துக்குச் செல்லும் வீதி ஆகியவற்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி யுதவியுடன் புனரமைக்கப்பட்ட தற்கு நன்றி கூறும் முகமாகவும் ஆலய பரிபாலன சபையின ரால் ஒழுங்கு செய்யப்பட்டி ருந்த நிகழ்வு ஆலய பரிபாலன சபைத் தலைவர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற் றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சரின் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) மற்றும் நல் லூர் பிரதேச அமைப்பாளர் ரவீந்திரதாசன், பிரதேசசபை உறுப்பினர் ஸ்ரீகணேசா ஆகியோர் அப்பகுதி முக்கியஸ்தர்களால் பொன்னாடை போர்த்திக் கௌர விக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கருத்துக் கூறிய ஒருங்கிணைப்பாளர் - மக்களுக்கான அபிவிருத்தி பணியில் நாம் இதுவரை எந்த வொரு தவறுகளையும் செய் திருக்கவில்லை. அரசிடம் இருந்து எதை எல்லாம் பெற்றுக் கொள்ள லாமோ அவற்றையெல்லாம் மக்களுக்காக வழங்கி வருகின் றோம். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டும் தான் குடா நாட்டின் அபிவிருத்திக்கான கதவுகளை எந்நேரமும் திறந்து வைத்திருக்கிறார்.

இவ் ஆலயத்துக்கு மின் சாரம் மட்டுமல்லாது அனைத்து தேவைகளையும் அமைச்ச ரூடாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கின்றேன் என்றார்.

இந் நிகழ்வில் அப்பகுதி கிராம உத்தியோகத்தர் மற்றும் ஆலய அர்ச்சகர், ஆலய நிர் வாகத்தினர் மற்றும் அப்பகுதி மக்கள் பலரும் கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது.

புகைத்தலுக்கெதிரான விழிப்புணர்வு பருத்தித்துறையில் முன்னெடுப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச சமூர்த்தி சமூக அபி விருத்தி மன்றம் சர்வதேச புகைத்தல், மது எதிர்ப்பு தினத்தையொட்டி பருத்தித்துறை பிரதேச செய லர் ஆர்.ரீ.ஜெயசீலன் தலைமையில் புகைத்தல் மது எதிர்ப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தைப் பருத் தித்துறை நகரில் அண்மையில் நடாத்தியது.

பருத்தித்துறை பிரதேச செயலகமுன்றலில் ஆரம்பமான இப் புகைத்தல், மது எதிர்ப்பு ஊர்வ லம் பருத்தித்துறை நகரத்தினூடாகச் சென்றது.

"மகிழ்ச்சியான வாழ்வே மனிதனுக்குத்தேவை"

"புகைத்தல், மது பாவனை மகிழ்ச்சியான வாழ்வை அழிக்கும்"

"உயிரைக் கொல்லும் மதுபாவனை புகைத் தல்களை அடியோடு ஒழிப்போம்"

என்ற சுலோகங்களுடனும் கோஷங்களை எழுப்பிக் கொண்டும் ஊர்வலத்தினர் சென்றனர். வாகனமொன்றில் சிகரட்டின் மாதிரி உருவ மொன்று பெரியளவில் தயாரிக்கப்பட்டு ஊர்வல மாகக் கொண்டு செல்லப்பட்டது.

ஊர்வலத்தில் பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத் தர்கள், சமூர்த்திப் பயனாளிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர் பருத்தித்துறை துறைமுகத்திற்குச் செல்லும் நகர வீதிச்சந்தியில்



வைத்து வாகனத்தில் காட்சியாகக் கொண்டு வரப்பட்ட சிகரட்டின் மாதிரி உருவம் பிரதேச செயலாளரால் தீ மூட்டி எரித்துச்சாம்பலாக்கப் பட்டது. (01)

கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தால் மாணவர் களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 4 மணிக்கு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய அரங்கில் கழகத்தின் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

கனடாவைச் சேர்ந்த கைதடி நலன்விரும்பி ஒருவர் இந்தக் கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளார்.

கைதடியிலுள்ள வளர்மதி சனசமூக நிலையம், நவசனசமூக நிலையம், கைதடி தெற்கு சனசமூக நிலையம், சரஸ்வதி சனசமூக நிலையம், செல்வா சனசமூக நிலையம், நாவற்குழி சனசமூக நிலையம், உதயதாரகை சனசமூக நிலையம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் இந்தக் கற்றல் உபகரண நன்கொடையைப் பெறவுள்ளனர். (90)

முரசின் இன்றைய பலன்



[22.06.2014 ஞாயிற்றுக்கிழமை]

ஹய வருஷம் ஆனி மாதம் 08 ஆம் திகதி.
தசமி/சித்தம்.
அஸ்வினி நட்சத்திரம் பி.இ 01.15 வரை. பின் பரணி.
இராகு காலம் 04.24 - 05.54 வரை. சுபநேரம் 08.54 -10.24 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

மேடம்	அரசுத்துறையினர்மேலதிகாரிகளுடன் அனுசரித்துப்போவது நன்மை கிட்டும். நோயின் காரணமாக பணி யினின்றும் ஓய்வுபெறல்.
ரிஷபம்	உறவினர் வகையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் பாதிப்புக்கள் கிடையாது. தொழிலில் ஏற்பட்டிருந்த பின் னடைவு இல்லாமல் போய்விடும்.
மிதுனம்	முரண்படும் நபருடன் கனிவாகப்பேசி ரகளை ஏற்படாது செய்துவிடல். நீண்டநாள் இழுபட்டுக் கொண்டிருந்த பிரச் சினை நீங்குதல்.
கடகம்	உங்களைத்தவறாக நினைத்துக்கொண்டிருந்தவர்களின் மனம் மாறிவிடல். பொறுப்பின்றிக் கொடுத்த கடனால் துன்பப்படல்.
சிம்மம்	சகஊழியர்களைத்தட்டிக் கொடுத்து அனுசரித்துப் போவதால் பணிச்சுமை நீங்குதல். பரீட்சை முடிவு சாதகமாக இருந்ததி னால் பதவிமுன்னேற்றமும் சம்பள அதிகரிப்பும் ஏற்படல்.
கன்னி	பழைய சம்பவங்களை நினைத்து ஆனந்தமடைதல். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதில் குறுக்கீடுகள் தலையிட்டு மனதிற்கு வேதனை தருதல்.
துலாம்	வாடகை அதிகரித்ததால் வேறு இடத்தில் வசிக்க முற்படல். காலாவதியான திகதியை மறைத்து விற்கமுற்பட்ட தினால் தண்டனை பெறல்.
விருச்சிகம்	புதிய முயற்சியை தொடங்கும நிலைப்பாட்டை ஒத்திவைத்தல். பெற்ற கடன் கட்ட ஒரு பகுதியை விற்கமுற்படல்.
தனுசு	பிள்ளைகளின் நலனைக் கருத்தில் கொண்டதால் ஏற்பட்ட அவமானத்தை திற்குள் அமுக்கிவிடல.
மகரம்	பிரச்சினை எழுமுன் சுலபமாக பேசி சமாளிக்க முற்பட்டதால துயர்விலகுதல். பொருட்களின் விலை பற்றி காட்சிப்படுத்தா மையினால் தண்டம் பெறும் நிலை ஏற்படல்.
கும்பம்	ஆராயாமல் விவாகம் நிறைவேற்ற முயன்றவேளை உண்மை வெளிப்பட்டதால் கவலை கொள்ளல்.
மீனம்	சொந்த நிலத்தில் பிறர் குடியிருப்பதைக் கண்டு ரகளை ஏற்படல்.

உலகக் கிண்ண கால்பந்தாட்டத் திருவிழா



ஈகுவடோர் அசத்தல் வெற்றி

(குரிடிபா)

ஹோண்ட்ரொஸ் அணிக்கு எதிரான உலக கோப்பை தொடரின் லீக் போட்டியில் ஈகுவடோர் அணி வெற்றி பெற்றது.

20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்ட போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது.. இதன் இ பிரிவு லீக் போட்டி இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 3.30 மணிக்கு நடைபெற்றது. இதில் ஈகுவடோர், ஹோண்ட்ரொஸ் அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியின் 31ஆவது நிமிடத்தில் ஹோண்ட்ரொஸ் வீரர் கஸ்லி முதல் கோல் அடித்தார். இதற்கு ஈகுவடோர் அணியின் வோலன்சியா (34ஆவது நிமிடம்) உடனடியாக பதிலடி கொடுத்தார். இதன் மூலம் முதல் பாதியின் முடிவில், போட்டி 1-1 என சமநிலை வகித்தது. பின் விறுவிறுப்பாக நடைபெற்ற இரண்டாவது பாதியின் 65ஆவது நிமிடத்தில் ஈகுவ டோர் அணியின் வோல்சியா ஒரு கோல் அடித்தார். இதற்கு கடைசிவரை போராடிய ஹோண்ட்ரொஸ் அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை. இறுதியில் ஈகுவடோர் அணி 2-1 என்ற கோல் கணக் கில் ஹோண்ட்ரொஸ் அணியை வீழ்த்தியது.

சுவிஸ்சர்லாந்தை பந்தாடிய பிரான்ஸ்



(சால்வேடர்)

சுவிஸ்சர்லாந்து அணிக்கு எதிரான உலக கோப்பை தொடரின் லீக் போட்டியில் பிரான்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.

இ பிரிவுக்கான போட்டி இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு 12.30 மணிக்கு நடைபெற்றது. இதில் பிரான்ஸ், சுவிஸ்சர்லாந்து அணிகள் மோதின.

ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பிரான்ஸ் அணிக்கு போட்டியின் 17ஆவது நிமிடத்தில் கிரோர்ட் முதல் கோல் அடித்தார். இந்த அதிர்ச்சியிலிருந்து சுவிஸ்சர்லாந்து வீரர்கள் மீள்வதற்குள் மின்னல் வேகத்தில் செயற்பட்ட மற்றொரு பிரான்ஸ் வீரர் மாடுடி அடுத்த நிமிடத்திலேயே (18ஆவது நிமிடம்) இரண்டாவது கோல் அடித்து அசத்தினார். .தொடர்ந்து அசத்திய பிரான்ஸ் அணிக்கு வொல் பியூனா (40ஆவது நிமிடம்) மூன்றாவது கோல் அடித்தார். முதல் பாதியில் சுவிஸ்சர்லாந்து அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை.

பின் விறுவிறுப்பாக நடைபெற்ற இரண்டாவது பாதியிலும் ஆதிக்கத்தை தொடர்ந்த பிரான்ஸ் அணிக்கு பென்சிமா (67ஆவது நிமிடம்), சிசோ-கோ (73ஆவது நிமிடம்) ஆகியோர் இரண்டு கோல் அடித்து வலுவான முன்னிலை அளித்தனர்.

கடைசிவரை போராடிய சுவிஸ்சர்லாந்து அணிக்கு ஜிமாயிலி (81ஆவது நிமிடம்), ஜாகா (87ஆவது நிமிடம்) ஆகியோர் இரண்டு கோல் மட்டும் அடித்து ஆறுதல் அளித்தனர்.

ஆட்டநேர முடிவில், பிரான்ஸ் அணி 5-2 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

நடிகையின் தாராளம் 16 மணி நேரம் சிலியின் வெற்றியால் உல்லாசம்



தன் நாட்டுப்பற்றை நிரூபிக்க ஒவ்வொருவரும் ஏதேதோ செய்யும் போது இங்கு ஒரு நடிகை செய்திருப்பது கொடுமையான விடயம் தான். உலகக்கோப்பை கால்பந்து லீக் போட்டியில் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் சிலி வெற்றி பெற்றால் டுவிட்டரில் தன்னை பின்தொடர்ந்த அனைவருடனும் செக்ஸ் உறவு வைத்துக்கொள்ளத் தயார் என்று அதிரடி அறிவிப்பு ஒன்றை சிலி நாட்டு நடிகை மர்லென் டோல் வெளியிட்டார். அதேபோல் சிலி வெற்றி பெற்றதால் தன்னை டுவிட்டரில் தொடர்புகொண்டவர்களை வீட்டிற்கு வரவழைத்து உல்லாசமாக இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து இவர் தன் டுவிட்டரில் 12 மணி நேரம் நான் முடிவு செய்து வைத்திருந்தேன், ஆனால் கூடுதலாக 1 கோல் அடித்ததால் 16 மணி நேரமாக தொடர்ந்தது என்று தெரிவித்துள்ளார். இதனைக் கேள்விப்பட்ட சிலி நாட்டு இளசுகள் கவலையடைந்துள்ளனர். இந்த விடயம் தங்களுக்குத் தெரிந்திருந்தால் தாங்களும் டுவிட்டரில் நடிகையைப் பின் தொடர்ந்திருப்போம் என்றும் சிலி அணி அடுத்த போட்டிகளிலும் வெற்றிபெற்றால் நடிகையின் இந்தத் தாராளம் தொடருமா என அவர்கள் ஏக்கத்தில் மூழ்கியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்றைய ஆட்டம்



பெல்ஜியம் எதிர் ரஷ்யா
இலங்கை இரவு 9.30

தென் கொரியா எதிர் அல்ஜீரியா
இலங்கை நள்ளிரவு 12.30

அமெரிக்கா எதிர் போர்த்துகல்
இலங்கை அதிகாலை 3.30

தொடரிலிருந்து வெளியேற்றம் இங்கிலாந்து ஊடகங்கள் பாய்ச்சல்

(லண்டன்)

தங்கள் அணி பிரமாதமாகவோ அல்லது மோசமாகவோ செயற்பட்டால் அதனை முதலில் சுட்டிக்காட்டுவது அந்நாட்டு பத்திரிகைகள்தான். இங் கிலாந்து அணியின் மோசமான செயற்பாட்டை பிரிட்டன் பத்திரிகைகள் விமர்சிப்பது ஓய்ந்தபாடில்லை.

பலமான, சவால் அளிக்கும் எதிரணியாக இருந்தால் அப்போது ஏற்படும் நெருக்கடியை இங்கிலாந்து வீரர்களால் சமாளிக்க முடியாது என்று அந்நாட்டு பத்திரிகைகள் விமர்சித்துள்ளன.

இங்கிலாந்து அணியின் தற்காப்பு ஆட்டம் மிகவும் பலவீனம். அதனால், ஆட்டத்தில் ஏற்படும் நெருக்கடியை அந்த அணியினால் சமாளிக்க முடிய வில்லை என்று டெய்லி மெய்ல் பத்திரிகை விமர்சித்துள்ளது. போதிய திட்ட மிடல் இல்லை. வீரர்கள் பயந்து விட்டனர். இங்கிலாந்து வெற்றி பெறும் என்று யாரும் உறுதியாகக் கூற முடியாது. கோஸ்டா ரிகா அணிக்கு எதிரான ஆட்டத்தில் கூட இங்கிலாந்து மீது 5 நிமிடம் கூட நம்பிக்கை வைக்க முடியாது என்று மற்றொரு பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

சன் பத்திரிகையில், உருகுவேயின் சௌரஸ் இங்கிலாந்து அணியை பழுதடைய வைத்து விட்டார். ஆயினும் ஆட்டத்தின் பெரும்பகுதி இங்கிலாந்து தடுமாறிய வண்ணமே இருந்தது. கிடைத்த வாய்ப்பை வீண டித்தனர். பந்தைத் தடுக்கவும் மறந்தனர் என்று வசைமாறி பொழிந்துள்ளது.

த கார்டியன் பத்திரிகையில், 4 ஆண்டு திட்டமிடலுக்குப் பின், உலகக் கோப்பைத் தொடரின் மீது உணர்வு ரீதியிலான எதிர்பார்ப்பு எழுவது பொது வானது. ஆனால், இங்கிலாந்தின் கனவு 5 மோசமான நாட்களில் சிதைந்து விட்டது. என்று தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து கப்டன் ஜெரார்டின் 2 பெரிய தவறினால், நாடு அதிக விலை கொடுக்க வேண்டியதாயிற்று என்று த டைம்ஸ் பதிவு செய்துள்ளது.

களத்திற்கு வெளியில்....

நான் விளையாடி ஆட்டங்களில் இங்கிலாந்து அணிக் கெதிரான இந்த ஆட்டம்தான் சிறந்தது. இந்த நேரம், எனது வாழ்வின் மறக்க முடியாத தருணமாகும். சில நாட்களுக்கு முன்புவரை, இதுபோன்ற ஆட்டத்தை வெளிப்படுத்த முடி யாது என்றே நான் கருதியிருந்தேன். இத்தொடர் ஆரம் பிக்கும் முன்பு, என்னைப் பார்த்து சிரித்த இங்கிலாந்துக் காரர்களுக்கு எனது கோலை அர்ப்பணிக்கிறேன். இது எனக்கு நல்ல நேரம். இப்போது அவர்கள் (பிரிட்டன்வாசிகள்) என்னைப் பற்றி என்ன நினைக்கின்றனர் என்பதை அறிய ஆவலுடன் உள்ளேன்.

லூயிஸ் சௌரஸ் (உருகுவே வீரர்)

சௌரஸ் அற்புதமான வீரர். காயம் காரணமாக கடந்த 5 வாரங்களில் சௌரஸ் விளையாட முடியவில்லை. ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால், அவர் கட்டாயமாக வீல் சேரில் வெளியேற வேண்டும் என்று உரு குவேயில் கூறப்படுவது உண்டு. ஆனால், அதற்கு மாறாக சௌரஸ் எழுந்து நடந்தார். அதனால்தான் அவரால் இன்று விளையாட முடிந்தது. அணி வீரர்கள் அவரை நேசிக்கின்ற னர். எங்களுக்கு அவர் விலைமதிக்க முடியாத வீரர். அவர் எங்களுடன் இருப்பதை பெருமையாகக் கருதுகிறோம். காயத்திலிருந்து அவரை மீட்ட மருத்துவக்குழுவினருக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம். காயத்திலிருந்து அவர் மீண்டிருந்ததால், சரியாக விளையாட முடியவில்லை என்றால் வருத்தப்பட வேண்டாம் என்று கூறியிருந்தேன்.

உருகுவே பயிற்சியாளர் (ஆஸ்கர் டபரெஸ்)

தோல்விகளினால் நான் மிகவும் ஏமாற்றம் அடைந்தேன். ஆனால், அதற்காக பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகு வேண்டும் என்று கருதவில்லை. உருகுவேயின் முதல் கோலை சமன்செய்ய நாங்கள் கடுமையாகப் போராடினோம். அதற்குப் பலனும் கிடைத்தது. ஆட்டத்தை எப்படியாவது சமநிலை செய்து விடுவோம் என்று கருதினேன். ஆனால், சௌரஸின் நம்பமுடியாத கோலால் நாங்கள் தோற்று விட் டோம். இந்த நேரத்தில் என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. ஆட்டத்தின் பெரும்பகுதி சௌரஸை நாங்கள் கட்டுப்படுத்தினோம். ஆனால், எங்கள் கப்டன் ஜெரார்ட் செய்த தவறினால், அந்த அணிக்கு 2ஆவது கோல் கிடைத்தது.

ரொய் ஹொட்ஜன் (இங்கிலாந்து பயிற்சியாளர்)

நான் உணர்ச்சிவசப்படக் கூடியவன். எனது வாழ்வில் பல மறக்க முடியாத தருணங்களை எதிர்கொண்டுள்ளேன். 2004ஆம் ஆண்டு எனது தந்தை இறந்ததையும் நான் பட்ட கஷ்டங்களையும் நினைத்துப் பார்த்தேன். தேசிய அணிக்காக விளையாடுவேன் என்று நினைத்துக் கூட பார்த்ததில்லை. இதை நினைக்கும்போது அழுதுவிட்டேன். அழுகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று முயன்றேன். ஆனால், முடியவில்லை.

டீ செரி (ஐவரி கோஸ்ட் நடுகள வீரர்)

விளையாட்டுச் செய்திகள்

தாச்சி இறுதி தாவடியில் இன்று

(தாவடி)

தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் நடாத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் ஆலடி சிந்து அணியும் மயிலிட்டி வள்ளுவர் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வில் இரசிகர்கள், நலன் விரும்பிகள், ஆர்வலர்களைக் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (48)

மாகாணத்தில் ஜொலித்த மாதகல் சென். ஜோசப் வீராங்கனைகள் கௌரவிப்பு





(மாதகல்)

தேசிய மட்ட கால்பந்தாட்டத் தொடரில் மூன்றாவது முறையாக தகுதி பெற்றுள்ள மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி நேற்று முன்தினம் பாடசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணப் பாடசாலைகளின் பெண்களுக்கான மாகாண மட்ட கால்பந்துப் போட்டியில் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி மூன்றாமிடத்தைப் பிடித்தது. இதன் மூலம் கடந்த மூன்று வருடங்களாக தேசிய மட்டப் போட்டிக்கு சென். ஜோசப் மகாவித்தியாலய அணி தகுதிபெற்றுள்ளது. இதனைக் கௌரவிக்கும் வகையில் நேற்று முன்தினம் பாடசாலைச் சமூகத்தினர் வீராங்கனைகளுக்கு பதக்கம் அணிவித்து பூச்செண்டு கொடுத்து கௌரவித்தனர். மாதகல் சந்தியிலிருந்து பான்ட் வாத்திய இசையுடன் வீராங்கனைகள் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஜேம்ஸ் பங்குராசு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோசலை குணபாலசிங்கம், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப் பாளர் சிவானந்தராஜா, மாதகல் பங்கு அருட்தந்தை கனீசியஸ் ராஜ், வடமாகாண அதிபர் சங்கத் தலைவர் சிவனேஸ்வரன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், பிரதேச இளைஞர் கழக சம்மேளன ஊடகத் துறைச் செயலாளர் F.X.D..கூரே பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஜெராட், ஞானம் அறக் கட்டளை அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரைகள் வழங்கினர். (48)

கரப்பந்தாட்டத்தில் யாழ். மாவட்டம் சம்பியன்



(கிளிநொச்சி)

வடக்கு மாகாண அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் இரு பிரிவுகளிலும் யாழ் மாவட்ட அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடாத்திய மாகாண அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்குகொண்டன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும் முல்லைத்தீவு மாவட்ட அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் செயற்பட்டன. இறுதியில் யாழ். மாவட்ட அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)

ஹென்றீசியன் பிறீமியர் லீக் இளவாலையில் ஆரம்பம்

(இளவாலை)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் இளவாலை யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் ஹென்றீசியன் பிறீமியர் லீக் மாபெரும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்று முதல் இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 64 இற்கும் மேற்பட்ட முன்னணி அணிகள் பங்குகொள்கின்ற இச்சுற்றுப் போட்டி விலகல் முறையில் நடைபெறவுள்ளது.

எட்டுக் குழுக்களாக அணிகள் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் முதல் இடத்தைப் பிடிக்கும் அணி சூப்பர் -8 சுற்றுக்கு முன்னேறும். சுப்பர் - 8 சுற்று லீக் முறையில் நடைபெறவுள்ளது. முக்கியமான போட்டிகள் மின்னொளியிலும் நடாத்தப்படவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இன்றைய தினம் நான்கு போட்டிகள் நடைபெறவுள்ளன. பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் எதிர் மாவத்தை, அல்வாய் மனோகரா எதிர் அராலி ஜேம்ஸ், கலை ஒளி எதிர் நவஜீவன், இமையாணன் மத்திய எதிர் றோபல் ஆகிய அணிகள் ஒன்றையொன்று எதிர்த்து மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

இலங்கை முதல் இனிங்ஸ் 257

(லீட்ஸ்)

இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி இங்கிலாந்தின் லீட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்கக்கார 79, சண்டிமல் 45, மத்தியூஸ் 26, கருணாரட்ன 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புளுங்கெற் ஐந்து, ஸ்ரூவெர்ட் புரொட் மூன்று, அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை விக்கெட் இழப்பின்றி 36 ஓட்டங்களைப் பெற்றது.

இலகுவாக வென்றது மே.தீவுகள்

(ஸ்போட் ஒவ் ஸ்பெயின்)

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு மேற்கிந்தியத்தீவுகளின் ஸ்போட் ஒவ் ஸ்பெயினில் நிறைவடைந்தது.

இரண்டாவது இனிங்ஸிற்காக எட்டு விக்கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றவேளை இறுதி நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த நியூசிலாந்து அணி வைட்லிங், கிரைக் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தினால் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. ஒன்பதாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 99 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. இறுதியில் நியூசிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 331 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வைட்லிங் ஆட்டமிழக்காது 66, கிரைக் 67 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரோச் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 93 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி கிறிஸ் கெய்லின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி விக்கெட் இழப்பின்றி 95 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் கெய்ல் 46 பந்துகளை எதிர்கொண்டு ஆறு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 80 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சமப்படுத்தியுள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக சதம் விளாசிய பிளைக்வூட் தெரிவு செய்யப்பட்டார்.

முக்கொம்பனில் விரைவில் கரப்பந்து, மென்பந்து கிரிக்கெட்

(முக்கொம்பன்)

முக்கொம்பன் சின்ன பல்லவராயன்கட்டு செவ்வானம் விளையாட்டுக்கழகம் கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கரப்பந்து மற்றும் மென்பந்து கிரிக்கெட் தொடரை நடாத்தவுள்ளது.

இப்போட்டித் தொடரில் பங்குகொள்ளவுள்ள அணிகளை எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் இப்போட்டித் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொள்ளும் அணிக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரேசில் பறக்கிறார் புடின்

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியின் இறுதியாட்டத்தைக் காண்பதற்காக அடுத்த மாதம் பிரேசில் செல்கிறார். உலகக் கோப்பை பரிசளிப்பு விழாவிலும் அவர் பங்கேற்கிறார் என தகவல் வெளியாகியுள்ளது.

2018 உலகக் கோப்பை கால்பந்து போட்டியை ரஷ்யா நடாத்தவுள்ளது. பிரேசிலில் நடைபெறும் உலகக் கோப்பை பரிசளிப்பு விழாவின்போது, 2018 உலகக் கோப்பை நடத்துவதற்கான பொறுப்பை விளாடிமிர் புடினிடம் பிரேசில் அதிபர் தில்மா ரௌசப் வழங்குவார் என செய்தி வெளியாகியுள்ளது. ஆனால் இது தொடர்பாக ரஷ்ய அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார்.

இலங்கையின் மாகாணசபைகளை மக்களுக்குப் பயனுடையவைகளாக ஆக்குவதற்கு ஏதாவது வழியுண்டா!

3



- வரதராஜப்பெருமாள்

இலங்கையின் அரசியல் யாப்பின 13ஆவது திருத்த விதிகளின்படி,

1. "மாகாண சபைகளுக்கான நிறைவேற்று அதிகாரம் ஆளுநருக்கே வழங்கப்பட்டுள்ளது",

2. "மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு முதலமைச்சர்களாகவும் அமைச்சர்களாகவும் இருப்பவர்கள் வெறுமனே ஆளுநருக்கான ஆலோசகர்கள் மட்டுமே",

3. தென்னிலங்கையிலுள்ள மாகாண சபைகள் அனைத்திலும் மத்திய அரசாங்கக் கட்சி ஆட்களே முதலமைச்சராகவும் அமைச்சர்களாகவும் இருப்பதனால் அங்கெல்லாம் ஆளுநர்கள் அவர்கள் சொற்படி நடந்து கொள்கிறார்கள். மாறாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் அமைச்சர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பதாலேயே ஆளுநர் ஆலோசனைகளைக் கேட்காமல் தனது இஷ்டப்படி நடந்து கொள்கிறார்"

என்றெல்லாம் பொதுவாகக் கூறப்படுகிறது. சட்டங்கள் பற்றித் தெரியாதவர்களும். அல்லது அரசியல் யாப்பு பற்றி அரைகுறையாகப் புரிந்து கொள்ளுபவர்களும் அவ்வாறு கூறுவது வேறுவிடயம்.

ஆனால் சட்டமேதைகளான திரு சம்பந்தர், திரு விக்கினேஸ்வரன், திரு சுமந்திரன் மற்றும் அவர்களின் சட்ட ஆலோசகர்களும் மாகாண அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரங்கள் தொடர்பான அரசியல் யாப்பு விதிகளை அவ்வாறாக அர்த்தப்படும் வகையாகத்தான் புரிந்து கொள்கிறார்களா?

> இந்தத் தொடரினூடாக பல விடயங்களை உங்களுடன் பகிர்வதன் மூலம் நான் தேடுவது என்னவென்றால் இப்போதுள்ள அரசியற் சூழ்நிலையில் இலங்கையில் ஒரு பாரிய மாற்றங்களைக் கொண்ட ஒரு புதிய அரசியல் யாப்பு உருவாக்குவதற்கான நிலைமையை யாராலாவது காண முடிகிறதா என்ற கேள்விக்கான விடையையே.

என்பது தான் இங்குள்ள பிரதானமான கேள்வியாகும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் மாகாண சபையின் பெரும்பான்மையானவர்களின் ஆதரவைக் கொண்டிருக்கின்ற வரையில்,

1. மாகாண அமைச்சரவையின் ஆலோசனையை மீறி ஆளுநர் எதுவும் செய்ய முடியாது, அத்துடன்

2. மாகாண அமைச்சரவையின் ஆலோசனை இல்லாமல் ஆளுநர் எதனையும் செய்யக் கூடாது

என்று அர்த்தம் கொள்வதுதானே அரசியல் யாப்பு விதிகள் தொடர்பான சரியான அர்த்தம் என்று கொள்வதில் என்ன தவறு உள்ளது என்பதுவே எனது கேள்வியாகும்.

கொழும்பு மத்திய அரசாங்கம் தனக்கு வசதியாக அரசியல் யாப்பின் எந்த விதி பற்றியும் எந்தவிதமான விளக்கத்தையும் கொண்டிருக்கலாம். ஆனால் அதுவே சட்டமாக முடியாது.

கொழும்பு மத்திய அரசாங்கத்தவரின் கட்டளைகளுக்கு உட்பட்டதாக ஆயுதப்படைகளும் பொலிஸும் இருக்கலாம் அதற்காக ஜனாதிபதியும் மத்திய அமைச்சர்களும் தாங்கள் விரும்பியபடி எதையும் செய்யக் கூடிய சண்டியர்கள் என்ற மனோபாவத்தில் செயற்படக்கூடாது. அந்த நடைமுறை சட்டப்படியான ஒன்றாகக் கருதமுடியாது.

இங்கு ஆளுநருக்கே அனைத்து அதிகாரங்களும் என மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்றே வைத்துக் கொள்வோம். அப்படித்தான் இருந்தாலும் அதன்படி மாகாண சபையும் மாகாண அமைச்சரவையும் ஏற்கத்தான் வேண்டுமா என்பதுவும் எனக்குப் புரியாத கேள்வியாக உள்ளது.

அரசர் காலத்திற்தான் அமைச்சர்கள் வெறும் ஆலோசகர்கள். அரசன் அந்த அமைச்சர்களின் ஆலோசனையை ஏற்கலாம் அல்லது ஏற்காமல் விடலாம்.

இலங்கையின் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் மாகாண சபைகளின் ஆளுநருக்கும் அடிப்படையான வேறுபாடு உண்டு.

இலங்கையிலுள்ள மத்திய அரச அமைப்பு முறை பிரெஞ்சு அரசமைப்பு முறையை ஒத்ததாக ஜே.ஆர். ஜெயவர்த்தனா உருவாக்கினார். ஆனால் இங்கு மாகாண சபைகள் ஆங்கில பாராளுமன்ற ஜனநாயக பாரம்பரியத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை.

இக்கடிதத் தொடரை வாசித்த சிலர் என்னிடம் பின்வரும் கேள்விகளை எழுப்புகின்றனர்:-

1. இலங்கை அரசியல் யாப்பின் 13ஆவது திருத்த ஏற்பாடுகள் தமிழர்களுக்கு பயனுடையது மற்றும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக அமைகின்றது என்று நீங்கள் கருதுகிறீர்களா?

2. இந்தப் 13ஆவது திருத்தம் பயனற்றது என்றுதானே நீங்கள் ஒருதலைப்பட்சமாக ஈழப் பிரகடனம் செய்தீர்கள்?

3. இலங்கையில் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு முறை இருக்கும் வரை எந்தவொரு அதிகாரப் பகிர்வும் மாகாண சபைகளை சுயாட்சியுடைய வைகளாக இயங்குவதற்கு அனுமதிக்குமா?

4. இலங்கையின் அரசியல் யாப்பு ஒற்றையாட்சி முறையைக் கொண்டிருக்கிற வரை மாகாண சபைகள் எந்த வகையிலும் சுயாட்சி உடையவையாகச் செயற்பட முடியாது என்று சொல்லித் தானே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா மாற்று அரசியல் யாப்புத் திட்டத்தை முன் வைத்தார்? அப்படித்தானே சட்டப் பேராசிரியரும் இப்போதைய வெளிநாட்டு அமைச்சரும், முன்னாள் அரசியல் யாப்பு அமைச்சருமான கௌரவ பீரிஸ் அவர்கள் சந்திரிகா ஆட்சிக்காலத்தில் பல அறிக்கைகளை விட்டார், பல விளக்கவுரைக் கூட்டங்களை நடத்தினார்?

5. 13ஆவது திருத்தம் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் போதியதல்ல என்பதாற்தானே 2002 இற்கும் 2004ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பிரதமராக இருந்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா வெளிநாடுகளின் முன்னால் ஒரு சமஷ்டி அரசியல் முறையை ஆக்குவதற்கு ஒப்புக் கொண்டார்?

6. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூட புலிகள் இருந்த காலத்தில் 13ஆவது திருத்தத்துக்கும் அதிகமாக அதிகாரங்களைத் தமிழர்களுக்குத் தருவேன் என்றுதானே கூறினார்?

7. இந்தியாவும் மற்றும் உலக நாடுகளும் 13ஆவது திருத்த ஏற்பாடுகள் போதியதல்ல என்பதால் தானே 13ஆவது திருத்தத்தை உடியாக முழுமையாக நிறைவேற்றுவதோடு 13ஆவது திருத்தத்துக்கும் மேலதிமாக அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு இலங்கை அரசாங்கம் பகிர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றன?

நண்பர்களே! தோழர்களே!

மேலே தொகுத்தடுக்கியுள்ள கேள்விகள் பிழையானவை என்றோ அல்லது அந்தக் கேள்விகளினூடாக கூறப்பட்டுள்ள கருத்துக்கள் தவறானவை என்றோ அல்லது இந்தக் கேள்விகளுக்கு பதில் காண்பது அர்த்தமற்றதென்றோ அல்லது இந்தக் கேள்விகளுக்கு பதில் கூறுவது எனது வேலையில்லையென்றோ நான் கூறவரவில்லை. அவற்றுக்குரிய நேரடியான பதில்களை வேறு சந்தர்ப்பங்களில் கூற முயற்சிப்பேன். அதேவேளை இந்தத் தொடரிலுள்ள எனது முன்னைய கடிதங்களில் ஆங்காங்கே அவற்றுக்கான பதில்களை நேரடியாகவோ மறை முகமாகவோ ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன் என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உண்மையில், இந்தத் தொடரினூடாக பல விடயங்களை உங்களுடன் பகிர்வதன் மூலம் நான் தேடுவது என்னவென்றால் இப்போதுள்ள அரசியற் சூழ்நிலையில் இலங்கையில் ஒரு பாரிய மாற்றங்களைக் கொண்ட ஒரு புதிய அரசியல் யாப்பு உருவாக்குவதற்கான நிலைமையை யாராலாவது காண முடிகிறதா என்ற கேள்விக்கான விடையையே.

(தொடரும்)

பிற்பகல் இரண்டு மணிக்கு அமிர்தசரஸை விட்டுக் கிளம்பிய சிறப்பு ரயில் 8மணி நேரம் கழித்து லாஹூரின் முகல்புரா நிலையத்தை வந்தடைந்தது. வரும் வழியில் பலர் கொல்லப்பட்டனர்; தாக்கப்பட்டோர் அதற்கும் மேல்; கணக்கற்றோர் காணாமல் போயினர்.

அடுத்த நாள் காலை பத்து மணிக்குத்தான் சிராஜ்தீனுக்கு உணர்வு திரும்பியது.

வெற்றுத் தரையில் கிடந்தான். சுற்றிலும் ஆடவர் பெண்டிர் மற்றும் குழந்தைகளின் வேதனைக் கூக்குரல். அவனுக்கு எதுவும் புரிபடவில்லை.

புழுதி படர்ந்த வானத்தைப் பார்த்தபடி அசைவற்றுக் கிடந்தான். அங்கு நிலவிய குழப்பமும் இரைச்சலும் அவன் புலன்களை எட்டியதாகத் தெரியவில்லை. கிழவன் பலத்த யோசனையில் ஆழ்ந்திருக்கிறான் என்று பிறர் நினைத்திருக்கலாம். நிலவரம் அதுவல்ல. அவன் அதிர்ச்சியில் உறைந்திருக்கிறான் - அதல பாதாளத்தில் தொங்கிக்கொண்டு இருப்பவனைப் போல.

அலை பாயும் விழிகளில் சூரிய ஒளி பட்ட அதிர்ச்சி அவனை நனவுலகுக்குக் கொண்டுவந்தது. சமீபத்திய நிகழ்வுகள் அவன் மனத்திரையில் படபடவென நிழலாடின. கட்டவிழ்ந்த வன்முறை - தீ வைப்பு - ஓட்டம் - ரயில் நிலையம் - இரவு - சகினா. சட்டென்று எழுந்து, அகதி முகாமில் இலக்கின்றி அலைந்து குழம்பி நிற்கும் கும்பலிடையே தன் தேடுதலைத் துவங்கினான்.

"சகினா" "சகினா" என்று தன் மகளின் பெயரைக் கூவி அழைத்துக்கொண்டு பல மணி நேரம் இங்குமங்கும் அலைந்தான். அவள் எங்கேயும் தென்படவில்லை.

தொலைந்துபோன மகன்களை, மகள்களை, மனைவிகளை, பெற்றோரைத் தேடி அலையும் மனிதக் கும்பல் - ஒரு குழப்பமான சூழல் அங்கே நிலவியது. இறுதியில் சிராஜ்தீன் தன் தேடலைக் கைவிட்டான். கும்பலை விட்டு வெளியேறி தனியே அமர்ந்து சிந்தித்து தெளிவடைய முயற்சித்தான் - எந்த இடத்தில் கடைசியாக மகளையும் மனைவியையும் பிரிந்தேன்? சட்டென்று அந்த காட்சி நினைவுக்கு வந்து நிலைபெற்றது - அங்கே கோரமாக வயிறு கிழிக்கப்பட்டு அவன் மனைவி இறந்து கிடக்கிறாள்.

சகினாவின் அம்மா இறந்துவிட்டாள் என்பது நிஜம். அவன் கண்ணெதிரே நிகழ்ந்தது அந்த சாவு. "என்னை இங்கேயே விட்டுவிடு. இவளுடன் எங்கேயாவது தப்பிப் போய்விடு" -அவன் மனைவி சொன்ன கடைசி வார்த்தைகள்.

இருவரும் ஓட ஆரம்பித்தார்கள். ஓடுகையில் நழுவித் தரையில் விழுந்த சகினாவின் துப்பட்டாவை எடுக்கக் குனிந்தபோது "அப்பா, அது கிடக்கட்டும் விட்டுட்டு வாங்க" என்று அவள் சொன்னதும் நினைவுக்கு வந்தது. ஆனாலும் எடுத்து வைத்தேனே - எதுவோ திணிக்கப்பட்டு பாக்கெட் நிரம்பியிருந்ததை உணர முடிந்தது. அது ஒரு நீளமான துணி, ஆம், சகினாவின் துப்பட்டா தான். ஆனால் சகினா எங்கே போயிருப்பாள்?

பிற விவரங்கள் புலப்படவில்லை. ரயில் நிலையம் வரை அவள் அவனுடன் வந்தாளா? அவனோடு ரயில் பெட்டியில் ஏறினாளா? கலகக்காரர்கள் ரயிலை நிறுத்திய போது, அவர்களால் தூக்கிச் செல்லப்பட்டாளா?

எல்லாமே கேள்விகள்? பதில்கள் தான் இல்லை. அழ வேண்டும் போல் இருந்தது. ஆனால் கண்ணீர் வரவில்லை. அவளைத் தேட பிறர் உதவி தேவை என்று உணர்ந்தான்.

சில நாட்களுக்குப் பின்னர், அதற்கு வழி பிறந்தது. ஆயுதம் ஏந்திய எட்டு இளம் வயதினரைக் கண்டான். அவர்கள் ஒரு மினி லாரியும் வைத்திருந்தார்கள். இந்திய எல்லையில் காத்திருக்கும் பெண்களையும் குழந்தைகளையும்

சிறுவர் உரிமை



செல்வி. மயூரி.சகாதேவன்
மெய்யியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

உரிமை என்பது இயற்கையின் கொடை. அதாவது ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான சூழ்நிலைகளை ஒழுங்கான முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இதற்காக சில விதிமுறைகளை உருவாக்கி அனுபவிப்பதே உரிமை ஆகும்.

மனிதன் வாழ்வதற்கு அதாவது நலன் பாதுகாக்கப்பட்டால் தான் அவனது வாழ்வு சிறக்கும். அதற்காக அவனது நலனையும் பிறர் நலனையும் பாதுகாக்கின்ற சக்தி தான் உரிமை என்கிறார் அரிஸ்ரோட்டில்.

உரிமை என்பது மனிதன் கௌரவமாகவும், சமத்துவத்துடனும் வாழ வேண்டும் என்பதனை வலியுறுத்துவது தான். வயது வேறுபாடின்றி அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என்பது தான் உரிமையின் தாற்பரியம் ஆகும்.

சிறுவர்களின் பாதுகாப்பிற்காகவும் அவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்வினை வழங்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டதே சிறுவர் உரிமை ஆகும்.

சிறுவர்களது உடல், உள ஆளுமை விருத்திக்கு நிலைகளமான சிறுபிராயத்தை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை 1954 இல் சிறுவர் உரிமை பிரகடனத்தை வெளியிட்டது.

- பாதுகாப்பாக உயிர் வாழ்வதற்கான உரிமை
- வாழ்வதற்கு உரியவாறு முன்னேறுவதற்கான உரிமை
- தனித்துவ அடையாளங்களைப் பெற்றிருக்கும் உரிமை. (உ-ம்: தனக்கென ஒரு பெயரை பெறுதல், இனம் ஒன்றை பெற்றுக்கொள்ளல்)
- பெற்றோருடன் வாழும் உரிமை
- கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை
- சுதந்திரமாக தான் விரும்பியதை சிந்திக்கும் உரிமை
- சமூக உறவுகளை மேம்படுத்துவதற்காக சங்கங்கள், அமைப்புக்களை ஸ்தாபிக்கும் உரிமை
- தமது தனித்துவத்தை பேணும் உரிமை
- தகவல் திரட்டும் உரிமை
- துன்புறுத்தல்களில் இருந்து நீங்கி இருக்கும் உரிமை
- பெற்றோரை இழந்த போது தனக்கென ஒரு பாதுகாப்பையும் ஆதரவையும் பெற்றுக் கொள்ளும் உரிமை
- வலது குறைந்தவர்களாக இருந்தாலும் தனக்குரிய உரிமைகளோடு வாழும் உரிமை
- போஷாக்கு சுகாதாரங்களை பெற்றுக்கொள்ளும் உரிமை
- நாட்டில் நடைமுறையில் உள்ள சமூக நன்மைகளை பெற்றுக்கொள்ளும் உரிமை
- கல்வி உரிமை
- கலாசாரத்தை பேணுவதற்கும் மதத்தை பின்பற்றுவதற்குமான உரிமை
- விளையாட்டு, மகிழ்ச்சி, கலாசார நடவடிக்கை, பொழுது போக்குகளில் ஈடுபடும் உரிமை
- மற்றவர்களின் சுரண்டல்களில் இருந்து பாதுகாப்பு பெறும் உரிமை

போன்றவை சிறுவர் உரிமைகளாக காணப்படுகின்றன.

சிறுவர் உரிமை ஏன் அவசியம்?

- மனிதனது வளர்ச்சிப்படிகளில் சிறுவர் பருவத்தில் ஏற்படும் மாற்றங்கள் எண்ணிலடங்காதவை. அவ்வளர்ச்சியை சரியாக அமைத்துக் கொள்வதற்கு பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய சிறுவர் உரிமைகள் அவசியமாகும்.
- சிறந்த நற்பிரஜைகளாகவும் சிறந்த கல்விமான்களாகவும் அவர்களை உருவாக்குவதற்கு அவசியம் ஆகிறது.
- எதிர்காலத்தில் வன்முறையற்றவர்களாக உருவாக்குவதற்கு,
- கௌரவமான வாழ்க்கையை வழங்குவவதற்கு,
- சிறுவர்களிடத்தில் பாகுபாடின்றி சமத்துவப்பிணைப்பை வளர்ப்பதற்கு,
- எதிர்காலத்தில் அவர்கள் பாகுபாடற்ற ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இச் சிறுவர் உரிமை அவசியமாகும்.

சிறுவர் உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்களை நோக்கினால்...

- பிள்ளை கருவில் உருவான போது கருக்கலைப்பு செய்தல்
- பிள்ளைகளை பிச்சை எடுக்க வைத்தல்.
- பாலியல் தொழில்களில் ஈடுபடுத்தல்.
- போதைப் பொருள் கடத்தல் விற்பனைக்கு ஈடுபடுத்தல்.
- பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தல்.
- பிள்ளைகளை விற்றல் கடத்தல்களை மேற்கொள்ளல்.
- துன்புறுத்தல்.
- பிள்ளைகளுக்கு போஷாக்கு வழங்காது இருத்தல்.

போன்ற செயற்பாடுகள் சிறுவர் உரிமைகள் பறிக்கப்படும் சந்தர்ப்பங்களாக அமைகின்றன.

இவ்வாறான சிறுவர் உரிமைகள் பறிக்கப்படுவதால்...

- அவர்கள் எதிர்காலத்தில் மனித பண்புகள் அற்றவர்களாக மாறக்கூடிய நிலை ஏற்படும்
- வன்முறையில் ஈடுபடுபவர்களாகவும் எதிர்காலத்தில் குற்றம் புரிகின்ற குற்றவாளிகளாகவும் மாறுவார்கள்
- சிறுவர்களுக்கு கிடைக்க வேண்டிய கல்வி உரிமை பறிக்கப்படும் போது நாட்டின் அபிவிருத்தியில் பாதிப்பு ஏற்படும்.
- சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தும் போது அவர்கள் உடல், உள ரீதியில் பாதிக்கப்பட்டவர்களாக மாறுவார்கள்.
- துன்புறுத்தி, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அன்பையும் அரவணைப்பையும் வழங்காத போது அவர்கள் எதிர்காலத்தில் மனிதாபிமானம் அற்றவர்களாக வக்கிர எண்ணம் கொண்டவர்களாக மாறிவிடும் நிலை ஏற்படும்.

இவ்வாறான பாதிப்புக்களை தவிர்ப்பதற்காகவும் சிறுவர்களின் பாதுகாப்பு நலன் என்பதையும் கருத்திற்கொண்டு சிறுவர் பாதுகாப்பு, பெண்கள் வலுவூட்டல் அமைச்சு, சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலகம், மாகாண நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை நிலையம், மாவட்ட அலுவலகம் போன்ற சில அரச அமைப்புக்களும் unicef போன்ற அரச சார்பற்ற அமைப்புக்களும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறான அமைப்புக்களுடன் இணைந்து சமூகத்தில் உள்ளவர்கள் சிறுவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை வழங்குவதன் மூலம் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து அவர்களை விடுவித்து அவர்களிற்கு என ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை வழங்க முடியும்.

மீட்பு

[சிறுகதை]



பாகிஸ்தானுக்கு கொண்டு வந்து உறவினர்களுடன் சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாகச் சொன்னார்கள்.

அவர்களிடம் தன் மகளின் விவரங்களைச் சொன்னான் - "சிவப்பு நிறம், நல்ல அழகி; என்னைப் போலிருக்கமாட்டாள்; அவள் அம்மாவைக் கொண்டிருப்பாள்; வயது பதினாழு, பெரிய கண்கள், கருங்கூந்தல்; இடது கன்னத்தில் ஒரு மச்சம். என் மகளைக் கண்டுபிடித்தால் இறைவன் உங்களை ஆசிர்வதிப்பார்".

"உங்கள் மகள் உயிரோடிருந்தால் கட்டாயம் கொண்டு வந்து சேர்ப்போம்" என்று அவனுக்கு உறுதியளித்தார்கள் இளைஞர்கள்.

தளரா முயற்சியுடன், உயிரைப் பணயம் வைத்து, அமிர்தசரசுக்கு வாகனத்தில் சென்று பல பெண்டிரையும் குழந்தைகளையும் மீட்டு அகதி முகாமுக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். ஆனால் சகினாவை மீட்க முடியவில்லை.

அடுத்த ட்ரிப்பில், சாலைப் பக்கம் ஒரு பெண்ணைக் கண்டார்கள். அவர்களைக் கண்டு அவள் பயந்து ஓட ஆரம்பித்தாள். ட்ரக்கை நிறுத்திக் கீழே குதித்து அனைவரும் அவள் பின்னே ஓடினார்கள். வயற்காட்டில் பிடிபட்டாள். அழகி, இடது கன்னத்தில் மச்சம். அவர்களில் ஒருவன் "பயப்படாதே. உன் பெயர் சகினாவா?" என்றான். அதைக் கேட்டு அவள் முகம் வெளுத்தது. தாங்கள் யார் என்று அவர்கள் சொன்ன பிறகே தான் சிராஜ்தீன் மகள் சகினா என்று ஒப்புக்கொண்டாள்.

இளைஞர்கள் அவளுக்கு அன்பு காட்டினார்கள். உணவும் பாலும் கொடுத்து ட்ரக்கில் ஏற்றிக் கொண்டார்கள். அவர்களில் ஒருவன் தன்னுடைய ஜாக்கெட்டை கொடுத்து போர்த்திக்கொள்ளச் சொன்னான். கைகளால் மார்பை மறைத்து கலவரமடைந்த நிலையில் அவள் நின்றதைக் கண்டு மனமிரங்கி - துப்பட்டா இல்லாதது கண்ணியக்குறைவென்ற உணர்வோடு அவதியுற்றாள் என்பது தெளிவாகத் தெரிந்தது.

நாட்கள் விரைந்து ஓடிக்கொண்டிருந்தன. சிராஜ்தீனுக்கு மகளைப் பற்றிய செய்தி ஏதும் கிடைக்கவில்லை. அகதி முகாம் ஒவ்வொன்றிற்கும் ஓடிச்சென்று அவளைத் தேடிவருவதிலேயே முழு நேரத்தையும் செலவழித்தான். தன் மகளைத் தேடிக்கொண்டிருக்கும் இளைஞர்களின் முயற்சி வெற்றியடைய ஒவ்வொரு இரவிலும் பிரார்த்தித்தான். அவர்கள் சொன்ன "உன் மகள் உயிரோடிருந்தால், கட்டாயம் கண்டு பிடித்து விடுவோம்" என்ற வார்த்தைகள் அவன் காதுகளில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருந்தது.

பின்னொரு நாள் முகாமில் அவர்கள் தென்பட்டார்கள், அவர்களின் ட்ரக் புறப்படத் தயார் நிலையில் இருந்தது அப்போது. அவர்களில் ஒருவனைப் பார்த்து உரத்த குரலில் "மகனே, என் மகள் சகினாவைக் கண்டுபிடித்து விட்டாயா?" என்று கேட்டான்,

"கண்டுபிடிக்கப்போவது நிச்சயம்" என்று அனைவரும் ஒரே குரலில் பதிலளித்தார்கள்.

அவன் மீண்டும் அவர்களுக்காக பிரார்த்தித்தான். அது அவனுக்குத நிம்மதியளித்தது.

அன்று மாலை முகாம் பரபரப்புடன் காணப்பட்டது. ரயில் பாதையருகில் உணர்விழந்து கிடந்த இளம் பெண்ணின் உடலை நான்கு பேர் தூக்கி வருவதைக் கண்டான். முகாமின் மருத்துவ மனைக்கு உடலை எடுத்துச் சென்ற அவர்களைப் பின்தொடர்ந்தான்.

கொஞ்ச நேரம் மருத்துவமனைக்கு வெளியில் நின்றான். பின்னர் ஒரு அறைக்குள் நுழைந்தான். தூக்குப் படுக்கையில் யாரோ படுத்திருக்கக் கண்டான்.

மின் விளக்கு போடப்பட்டதால் அறையில் வெளிச்சம் பரவ, அங்கே படுத்திருந்தவளின் இடது கன்னத்தில் மச்சம் தெரிந்தது. சிராஜ்தீன், "சகினா" என்று அழுது ஓலமிட்டான். மின் விளக்கைப் போட்டு விட்டு அறைக்குள் வந்த மருத்துவர் சிராஜ்தீனை உற்றுப் பார்த்தார்.

"நான் இவளுடைய தந்தை" என்ற வார்த்தைகள் உளறலாக வெளிவந்தது.

மருத்துவர் படுத்திருந்த உடலின் நாடி பிடித்து பார்த்தார். பின் கூட்டுவிரலால் ஜன்னலைக் காட்டி "அதைத் திற" என்று சிராஜ்தீனிடம் சொன்னார்.

தூக்குப் படுக்கையில் மயக்க நிலையில் கிடந்த இளம் பெண் கொஞ்சம் லேசாக அசைந்தாள். கண்களைத் திறவாமல் உடுத்தியிருந்த சல்வாரின் நாடா வைத் தடவி முடிச்சை உணர்ந்தாள். பொறுத்துக்கொள்ள முடியாத மந்த கதியில் நாடாவின் முடிச்சை அவிழ்த்து ஆடையைக் கீழே இழுத்து விட்ட பின் தொடைகளை அகல விரித்தாள்.

"என் மகள் உயிரோடிருக்கிறாள்" என்று சிராஜ்தீன் மகிழ்ச்சியோடு கத்தினான்.

பெண்ணின் நிலை உணர்ந்த அதிர்ச்சியில் மருத்துவருக்கு "குப்" என வியர்த்தது.

- சாதத் ஹஸன் மண்டோ -

மீண்டும் இந்தத் தேசத்தை அழிவுப்பாதைக்குள் இட்டுச்செல்ல முயல வேண்டாம்!

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 2014.06.18ம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து



2009 இல் இந்த சபையில் வைத்து அழிவு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக அதன் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் நன்றி தெரிவித்து உரையாற்றிருந்தார். அந்த உரையை நாடாளுமன்ற பதிவேடான ஹன்சாட் அறிக்கையில் இன்றும் பார்க்கலாம். இதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாமே நன்றி தெரிவித்து பேசிய அதே யுத்தம் குறித்து சர்வதேச விசாரணை தேவை என்று இன்று வாதாடுவது வெட்கம் கெட்ட செயல் என்றே கூற வேண்டும். தமிழ் பேசும் மக்களை ஏமாற்றும் அவர்களின் சந்தர்ப்பவாத அரசியலையே இது எடுத்துக் காட்டுகிறது.

எமது தேசத்தை எரித்து சுடுகாடாக்கும், எமது மக்களிடம் இருந்து சொந்த நிலங்களை யுத்தம் பறித்தெடுக்கும். அகதிகளாக எமது மக்களை அலைய வைக்கும். அழிவு யுத்தம் எமது மக்களை நடுத்தெருவிற்கு கொண்டு வந்து நிறுத்தும்...

இவைகளை அன்றைய சூழலில் அரசியல் துணிச்சலோடும் தொலை தூர நோக்கோடும் கூறி வந்திருக்கின்றேன்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவான 13ஆவது திருத்தச் சட்டமே எமது அரசியல் தீர்வின் இலக்கை நோக்கிச் செல்லும் தொடக்கப்புள்ளி என்று நாம் வலியுறுத்தியபோது,..

அதை ஏற்க மறுத்தவர்கள் யுத்தமும் அதன் அவலங்களும் இங்கு தொடர்ந்தும் நடக்கவே வழி வகுத்தார்கள். அழிவு யுத்தம் நடக்க துணை போனார்கள்.

இன்று அவர்களே யுத்தக்குற்றம் குறித்தும், சர்வதேச விசாரணை தேவை என்றும் அரசியல் நாடகம் போடுவது நியாயமா என்று நான் கேட்கின்றேன்.

அன்று இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டவர்களில் சிலர் அதை துஷ்பிரயோகம் செய்து, தாமே வன்முறை நடத்தி, யுத்தக்குற்றங்கள் புரிந்து விட்டு,

பின்னர், அவர்களே யுத்தக்குற்றம் நடந்தன என்றும், சர்வதேச விசாரணைகள் தேவை என்றும் இன்று பேசுவது நியாயமா என்று கேட்கின்றேன்.

அழிவு யுத்தம் எமது மக்களை தொடர்ந்தும் பலிகொள்ளக்கூடாது என்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச புலிகள் பேச்சுவார்த்தையை நாம் வரவேற்றிருந்தோம்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா புலிகள் பேச்சு வார்த்தையை நாம் வரவேற்றிருந்தோம்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகள் பேச்சு வார்த்தையை நாம் வரவேற்றிருந்தோம்.

இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புலிகள் பேச்சு வார்த்தையை நாம் வரவேற்றிருந்தோம்.

நோர்வே, ஜப்பான், தாய்லாந்து, சுவிஸ் என்று எல்லா நாடுகளிலும் புலிகளுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை நாம் வரவேற்றிருந்தோம்.

ஆனாலும், அந்த அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் யாவும் சரிவரப் பயன்படுத்தப்படாமல் தமிழ் பேசும் தரப்புக்களாலேயே முறித்துக்கொள்ளப்பட்ட போது அதை கண் மூடி, வாய் பொத்தி, எதுவும் பேசாமால் ஏற்றுக்கொண்டவர்கள்,..

இன்று யுத்தக்குற்றம் குறித்தும் சர்வதேச விசாரணை குறித்தும் பேசுவது நியாயமா என்று கேட்கின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் கொண்டு வந்த தீர்வு நகலை எதிர்க்கட்சிகளோடு சேர்ந்து. இதே நாடாளுமன்றத்தில் எரித்தழித்த சுயலாப தமிழ் தலைமைகள் இன்று அரசியல் தீர்வு இல்லை என்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள்.

இதனால் என்ன கிடைத்தது?....

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் போன்றவர்களுக்கு

குண்டு துளைக்காத வாகனம்.

தமிழ் பேசும் மக்களுக்கு குண்டு மழை பொழியும் கொடுந்துயரங்கள்.

சுரேஷ் பிறேமச்சந்திரன் அவர்களுக்கு மீன் பிடி அமைச்சின் ஆலோசகர் பதவியும், சுளை சுளையாக அரசாங்கத்தின் மாதக் கைக்கூலியும்,...

சுதந்திரம் கேட்ட மக்களுக்கு சோறு கூட பெற்றுக்கொடுக்காத சோகச்சுமைகளும்,..

இதுவரை கிடைத்த சந்தர்ப்பங்களை சுயலாப தமிழ்த் தலைமைகள் சரிவரப் பயன்படுத்தியிருந்தால் இங்கு யுத்தம் நீடித்து சென்றிருக்காது.

நாம் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வந்துள்ள 13ஆவது திருத்தச்சட்டத்திற்கே வந்து இன்று மாகாண சபையை ஏற்றுக் கொண்டவர்கள் அதை அன்றே ஏற்று வந்திருந்தால்,

இத்தனை அவலங்களும், அழிவுகளும் நடந்திருக்காது,..

அவலங்களும் அழிவுகளும் நடப்பதற்கான யுத்த சூழலை தாமே உருவாக்கி விட்டு,..

இன்று யுத்தக்குற்றம் என்றும், சர்வதேச விசாரணை என்றும் கோருவது வெறும் பகல்வேச அரசியல் நாடகமே.

எங்கள் பெண் கவிஞர் ஒருவர் சொன்னது போல்,

சித்திரவதை முகாமுக்கு பொறுப்பாக இருந்தவன் குழந்தை பெறும் மனைவிக்காக அழுகிறான்,...

என்பது போல், இவர்கள் இன்று வடித்துக்கொண்டிருப்பதெல்லாம் வெறும் நீலிக்கண்ணீர் மட்டுமே.

2009 இல் இந்தச் சபையில் வைத்து அழிவு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷி அவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக அதன் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் நன்றி தெரிவித்து உரையாற்றிருந்தார்.

அந்த உரையை நாடாளுமன்ற பதிவேடான ஹன்சாட் அறிக்கையில் இன்றும் பார்க்கலாம்.

இதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாமே நன்றி தெரிவித்து பேசிய அதே யுத்தம் குறித்து சர்வதேச விசாரணை தேவை என்று இன்று வாதாடுவது வெட்கம் கெட்ட செயல் என்றே கூற வேண்டும்.

தமிழ் பேசும் மக்களை ஏமாற்றும் அவர்களின் சந்தர்ப்பவாத அரசியலையே இது எடுத்துக்காட்டுகிறது.

சில வெளியுலக நாடுகள் எமது மக்களை அழிவுகள் வரமுன்னரும் காக்க வரவில்லை, அழிவுகள் வந்த போதும் காக்க வந்திருக்கவில்லை,

இன்று எல்லாம் முடிந்த பின்னர் மட்டும் சர்வதேச விசாரணை என்ற போர்வையில் இங்கு மூக்கை நுழைப்பதை நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்?

இதன் மூலம் இங்கு இனமுரண்பாட்டுச் சூழலை மேலும் வளர்க்க முடியுமே தவிர, எமது மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு கண்டு விடமுடியாது.

அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும் என்பது போல் எமது பிரச்சினையை நாமேதான் பேசித்தீர்க்க முடியும்.

அண்ணன் தம்பிக்குள் இருந்த சிறு பிரச்சினைகளை வெளியார் மூல மாகத் தீர்த்துவிடலாம் என்ற தப்பான எண்ணம் இந்த நாட்டின் கடந்தகால தூரநோக்கற்ற அரசியல் தலைமைகளிடமும், தமிழ்த் தேசியத் தலைமைகளிடமும் இருந்ததன் விளைவையே இன்று இந்தத் தீவின் அனைத்து மக்களும் அனுபவித்து ஓய்ந்துள்ளோம்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஜேர்மன் தேசத்தின் மீதும், ஜப்பான் மீதும் தாக்குதல்களை நடத்தின. ஜேர்மன் தேசத்திலும், ஜப்பான் தேசத்திலும் அழிவுகள் நடந்தன. இலட்சக்கணக்கான மக்கள் பலியெடுக்கப்பட்டார்கள்.

ஆனாலும், யுத்தம் முடிந்த பின்னர் ஜேர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் புதிதாகத் தோன்றிய அரசுகள் யுத்தத்தில் ஈடுபட்டமைக்கான தமது தரப்பு அரசியல் தலைமையின் தவறுகளையும் ஏற்றுக்கொண்டே அதே அமெரிக்காவோடு கைகுலுக்கினார்கள்.

அவ்வாறு பகை மறந்து கைகுலுக்கியதால் மட்டுமே இன்று ஜேர்மனியும், ஜப்பானும் உலகத்திலேயே சிறந்து விளங்கும் நாடுகளாக தோற்றம் பெற்றிருக்கின்றன.

தமிழ் பேசும் மக்களின் சார்பாக நான் அரசாங்கத்தின் உறவுக்குக் கரம் கொடுக்கின்றேன். அதே வேளை எமது மக்களின் உரிமைக்குக் குரல் கொடுத்து நிற்கின்றேன்.

நாங்கள் சமாதானப் புறாக்களை இங்கு பறக்க விட்டிருக்கின்றோம். அதன் கழுத்தை நெரிக்க இங்கு யாரும் வரவேண்டாம்.

எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள நாமே உறுதியுடன் உழைப்போம்.

எமது மக்களின் துயரக்கதைகள் யாவும் இந்தத் தலைமுறையோடு மட்டும் முடிந்து போகட்டும்.

அடுத்த தலைமுறைக்கு நாம் வழங்கப்போவது அரசியல் தீர்வின்றி வாழும் துயரங்களும் அல்ல,...

அடுத்தவனிடம் கையேந்தி நிற்கும் அவலங்களும் அல்ல,...

எங்கிருந்தோ வந்து மீட்பவர்கள் என்று ஏமாற்றும் நிலை மாற்றி இங்கிருந்து நாமே படைக்கும் புதிய வரலாற்றை இந்த தலைமுறைக்கே நாம் வழங்க வேண்டும்.

மீண்டும், மீண்டும் இனப்பகை மூட்டி, அதிலேயே தமது அரசியலை நடாத்திப் பழகிவிட்ட தமிழ்த் தேசியத் தலைமைகள், புலம்பெயர் தேசத்து மக்களின் டொலர்களுக்கு வாலாட்டிக்கொண்டு மீண்டும் இந்தத் தேசத்தை அழிவுப்பாதைக்குள் இட்டுச்செல்ல முயலாமல், போருக்குப் பிந்திய ஜப்பான், ஜேர்மன் தேசங்கள் தம்மைக் கட்டியெழுப்பிய வரலாறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, ஒரு தேசமாக இலங்கைத் தீவைக் கட்டிக்காத்து, அதற்குள் தமிழர் உரிமைகளை வென்றெடுக்கும் சாத்தியமான அரசியல் அணுகுமுறையைக் கடைப்பிடிக்க முன்வரவேண்டும்.

எமது நிலத்தில், மக்கள் பலத்தில் நாமே மாற்றங்களை உருவாக்குவோம்.

தமிழ் பேசும் மக்களுக்கு இறுதித் தீர்வு கிடைக்காத வரை எங்கள் பயணம் நிற்காது.

நாம் செல்லும் பயணம் வெல்லும்.

எங்கே வெடி குண்டுச் சத்தங்கள் கேட்கின்றனவோ, எங்கே உள்நாட்டு குழப்பங்களும், கலவரங்களும், யுத்தங்களும் நிகழ்கின்றனவோ, அல்லது தேவையான இடங்களில் தாமே திட்டமிட்டு குழப்பங்களை உருவாக்கியும்,

அங்கெல்லாம் தலையை நீட்டி, தமது வல்லாதிக்கத்தை நிலை நாட்டவே சில வெளியுலக நாடுகள் காத்திருக்கின்றன.

இன, சமூக மக்களுக்கிடையிலான மோதல்களை தூண்டிவிட்டவர்கள் எவராக இருப்பினும் அவர்கள் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்படுவார்கள் என்றும்,

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களும், இழப்பீடுகளும் விரைவாக வழங்கப்படும் என்றும் நான் நம்புகின்றேன்.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பார்கள்.

கூத்தாடிகள் உள்நாட்டிலும் இருப்பார்கள், வெளியுலகிலும் இருப்பார்கள்.

எமது நாட்டில் இன, சமூக முரண்பாடுகள் தொடர்ந்தும் நீடித்துச் செல்ல வேண்டும் என்பதே அவர்களது அடங்காத ஆசையாகும். அதற்கு இடமளிக்கக் கூடாது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் வரை நானும் ஒரு சுதந்திரப் போராட்ட விடுதலை இயக்கத்தை களத்தில் நின்று வழிநடத்தி சென்றவன்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இங்கு யுத்தம் நிறுத்தப்பட்டு,

பெற்றுக்கொண்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசியல் இலக்கு நோக்கி வளர்த்தெடுக்க வேண்டும் என்பதையே வலியுறுத்தியிருந்தேன்.

உரிமைப் போராட்டம் என்பது வேறு, எதையும் பெற முடியாத அழிவு யுத்தம் என்பது வேறு. இதையே நான் திரும்பத் திரும்பக் கூறி வந்திருக்கின்றேன்.

யுத்தம் கொடியது. அது எமது மக்களைக் கொன்றே பலியெடுக்கும்.

உங்களில் அக்கறை கொண்டவர்களின் கைகளை பலப்படுத்த வேண்டும்

வலி.கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவர்



பணம் சம்பாதிப்பதில் அக்கறையுள்ளவர்களை இனங்கண்டு புத்திசாதுரியமாக உங்கள் மீது அக்கறையாக செயற்படுபவர்களின் கைகளைப் பலப்படுத்த வேண்டும் என வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளருமான ஐங்கரன் தெரிவித்தார்.

இருபாலை கிழக்கு, வசந்தபுரம் பகுதி மக்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடலொன்று விக்னேஸ்வரா சனசமூக நிலையத் தலைவர் சின்னத்தம்பி சண்முகராசா தலைமையில் இடம் பெற்றது.இக்கலந்துரையாடலில் உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச இணைப் பாளருமான ஐங்கரன் மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், மலசலகூடம், வீட்டுத் திட்டம், மின்சார வசதிகள் இல் லாமல் மக்கள் மிகவும் கஷ் டமான் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் இதைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பதவி, வாகனம் என தங்க ளுடைய சுயலாப அரசியலைத் தான் எதிர்பார்த்து செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

அன்று நீங்கள் விட்ட தவறு அவர்களுடைய பொய்யான வாக்குறுதிகளை நம்பி அவர் களிற்கு வாக்களித்ததன் பயனே இன்று அவர்கள் பணம் சம்பா திப்பதில் அக்கறையாக இருக் கின்றார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு இனிவருங் காலங்களில் ஆவது நீங்கள் உங்கள் மீது அக்கறையாக செயற்பட்டு உங்களுடைய தேவை களை நிறைவேற்றி தருபவர் களை இனங்கண்டு அவர்களின் கரங்களைப் பலப்படுத்த வேண் டும் எனத்தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மக் கள் சபை உறுப்பினர்களான நாகன் அப்புத்துரை, செல்லத் துரை சுரேந்திரகுமார், இராசேந் திரம் செல்வமலர் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

ஆக்கங்கள் கோரல்

நெடுந்தீவு பிரதேச செயலக கலாசார பேரவையால் நடாத் தப்படவுள்ள கலாசார விழாவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள கலாச்சார செய்தி மடலுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

ஆக்கங்களை அனுப்புவோர் இதுவரை பிரசுரமாகாத தமது சொந்த படைப்பான நெடுந்தீவு பிரதேசம் சார்ந்த பிரதிபலிப் புடையதான கட்டுரை, கவிதை, சிறுகதை, பாடல்கள் செய்தித் துளிகள், விடுகதைகள், குறுங்க விதைகள் போன்ற ஆக்கங் களை எதிர்வரும் யூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தலை வர் கலாசார பேரவை பிரதேச செயலகம், நெடுந்தீவு என்ற முக வரிக்கு அனுப்பிவைக்கலாம்.

உத்தியோகத்தர் தெரிவு

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழக 2014,2015 இற்கான உத்தியோ கத்தர் தெரிவு இன்று ஞாயிற் றுக்கிழமை மாலை 6மணிக்கு கரவெட்டி பிரதேச சபை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

லயன்ஸ் ஜி.எஸ். தங்கராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். மாவட்ட கவர்னர் லயன் வைத்தியகலாநிதி வி. தியாகராஜா, திருமதி தியாக ராஜா ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

தொடர்ந்து மாவட்ட செய லாளர் லயன் பி. உதயசூரியன், மாவட்டபொருளாளர் வி. ஆர். ரஞ்சன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள் ளவுள்ளனர். (109)

கண்காட்சி நிகழ்வுகள்

உடுவில் மகளிர் கல்லூரி தனது 190 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கடந்த புதன்கிழமை ஆரம்பமாகிய கண்காட்சியானது நேற்று முன்தினம் நிறைவடைந்தது. இக்கண் காட்சியில் பாடசாலையின் வரலாறு விஞ்ஞானத்துறை ஊடகத் துறை சங்கீதத்துறை சித்திரத்துறை கணிதத்துறை சித்தமருத்து வம் புவியியல் வரலாறு மனையியல் வர்த்தகத்துறை தமிழ்த்துறை விளையாட்டுத்துறை நடனத்துறை தகவல் தொழில்நுட்பம் ஆரம்பப் பிரிவு ஆகிய துறைகளில் கண்காட்சியானது நடைபெற்று வருகின்றது.

மாணவர்களது ஆக்கங்களினை தாங்கிய வகையில் காணப் படுகின்ற இக்கண்காட்சியானது பாடசாலை மட்டத்தினைப் பொறுத் தவரையில் மிகவும் பயனுள்ளதாகவும் சிறப்பானதாகவும் காணப் படுகின்றது.

ஊடகத்துறையினை சேர்ந்த மாணவர்கள் பயனுள்ள வகையில் பரிட்சார்தமான வகையில் தொழில்நுட்ப கையாளு கையுடன் கூடியவகையில் நேர்காணல் போன்ற செயற்பாடுகளினை மேற்கொள்வதுடன் பழைய கமராக்கள் மற்றும் பயனுள்ள வகையிலான காட்சிப்படுத்தல்களினை மேற்கொண்டுள்ளனர்

விளையாட்டுதுறையினர் பாடச்சாலையினது விளையாட்டு துறையினது சாதனைகளினை காட்சிப்படுத்தும் வகையில் வெளிப்படுத்தியுள்ளனர். மாணவர்களது படைப்புக்களான சித்தி ரங்கள் அழகுணர்ச்சியுடன் காத்திரமானவையாக காணப்படு கின்றன.இவ்வகையில் ஒவ்வொரு துறையும் பயனுள்ளவகையில் காத்திரமானவகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பான விடயமாகும். இக்கண்காட்சியினை இது வரை சுமார் ஏழு ஆயிரத் திற்கு மேற்பட்டவர்கள் கண்டுகளித்ததாக பாடசாலை சமூகத்தி னர் தெரிவித்துள்ளனர் (63)



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் உயர்தர மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் வைப வம் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதமவிருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் மலேசிய பொறியியலாளருமான த.உபேந்திரன் கலந்து சிறப்பித்ததைக்காணலாம். (48)

பதிவிறக்கப் பெட்டகம்

பேஸ்புக்கால் நிறைய நேரம் விரயமாவதாக அடிக்கடி புகார கூறுகிறவர்களை பார்க்கிறேன். இவர்கள் பேஸ்புக் இல்லாவிட்டால் இந்த நேரத்தை எப்படி செலவழிப்பார்கள்? செவ்வாய்க்கு ராக்கெட் அனுப்ப ஆராய்ச்சி செய்வார்களா? இல்லை சும்மா உட்கார்ந்து மோட்டுவளை பார்த்து யோசித்து அல்லது வீட்டு வேலைகள் செய்து அல்லது முச்சந்தியில் நின்று வேடிக்கை பார்த்து வீணடிப்பார்கள். அப்போதெல்லாம் நமக்கு நேரம் வீணாவதாக தோன்றுவதில்லை.

எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார். 24 மணிநேரமும் சும்மா இருப்பவர். அவர் "நான் 18 மணிநேரமும் பேஸ்புக்கில் இருக்கிறேன். ஒரு பைத்தியம் போல் அங்கேயே கிடக்கிறேன்" என வருந்தினார். பேஸ்புக் இல்லாவிட்டால் அவர் 18 மணி நேரத்தை ஒன்றும் செய்யாமல் தான் கழிக்கப் போகிறார் பிறகென்ன பிரச்சினை? வேறுபாடு?

நம்முடைய அசலான வருத்தம் பேஸ்புக் நம் சும்மா இருக் கும் பொழுதை களவாடி ஆக்கிரமிக்கிறது என்பது தான். பேஸ்புக்கில் படிப்பது, பொதுப்பிரச்சினைகளை விவாதிப்பது, நண்பர்களை உருவாக்குவது எல்லாம் முக்கியம் தான் என் றாலும் சும்மா இருப்பது நம் மன ஆரோக்கியத்துக்கும், படைப் பூக்கத்துக்கும் அதை விட முக்கியமானது.

சும்மா இருக்கையில் மனம் காலியாக இருக்கிறது. அப் போது நீங்கள் வீட்டில் ஒரு பொருளை துடைத்தோ, காய்கறி நறுக்கியோ, ஆற்றில் நீராடியபடியோ, வெட்டியாய் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டோ, சாலையில் போகிறவர் களை வேடிக்கை பார்த்துக் கொண்டோ இருக்கலாம். அப் போது உங்கள் மனம் எதிலும் ஈடுபடாமல் ஒய்வாக ஒரு முக் கிய வேலையை செய்கிறது. உங்கள் பிரக்ஞையின்றி அது சிந்திக்கிறது. வாழ்க்கையை புரிந்து கொள்கிறது. அதற் கேற்றபடி புது கருத்துக்களை உருவாக்குகிறது.

கொஞ்ச நேரம் தினமும் சும்மா இருப்பது நம் மனதை புத் துணர்ச்சியோடு படைப்பூக்கத்தோடு இருக்க வைக்கிறது. எப்போதும் எதையாவது செய்து கொண்டும் சொல்லிக் கொண்டும் இருக்கும்படி நம்மை வலியுறுத்துகிற இன்றைய கலாச்சாரம் சும்மா இருக்க வேண்டிய அந்த பொன்னான பொழுதுகளை பறிக்கிறது.

இன்று எல்லோரிடமும் சொல்ல ஆயிரம் கருத்துக்கள் உள்ளன; ஆனால் புதுமையான புதுக் கருத்து என்று ஒன்று யாரிடமும் இல்லை. கடல் நடுவே தாகத்தோடு தவிப்பது போன் றது இது. பேஸ்புக் தான் இந்த பண்பாட்டின் உச்சநிலை. சும்மா இருப்பது பற்றி குற்றவுணர்வு கொள்ள வைக்கிறது அது. ஒன்றும் கருத்து இல்லாவிட்டால் ஒரு லைக்காவது போட்டு விட்டுப் போ என்கிறது.

கராத்தேயில் காற்றில் குத்துவது எனும் எளிய ஆரம்ப நிலை பயிற்சி உண்டு. கையை லகுவாக தளர்வாக வைத் திருக்க வேண்டும். குத்துப் படுகிற அந்த இறுதி நொடி வரை முறுக்கேறவே கூடாது. ஒருவரை தள்ளி விடுவது போன்று தான் நல்ல குத்து என்பது இருக்க வேண்டும் என்பர். ஒரு வரை அடிக்கும் போது அடி விழுகிற அந்த நொடி வரை அடிப் பதாக நினைக்கக் கூடாது. இல்லாவிட்டால் உங்கள் கை தான் வலிக்கும். செங்கல் உடைக்கும் பயிற்சியும் இதன் நீட்சிதான். செங்கல்லை உடைப்பதாக நினைத்து வெட்டி னால் கை தான் உடையும்.

இதில் வாழ்க்கையின் அடிப்படை பாடம் ஒன்று உள்ளது. உணர்ச்சிவசப்பட வேண்டிய அந்த இறுதி நொடி வரை நீங் கள் உணர்ச்சிவசப்படவே கூடாது. உங்கள் குழந்தையை கண்டிப்பதாகட்டும், மனைவியை திட்டுவதாகட்டும், ஒரு கண் டனத்துக்கு பதில் சொல்லுவதாகட்டும் அந்த தருணம் வரை மனம் காலியாக இருக்க வேண்டும். தேநீர் ஊற்றுவதன் முன்பான இறுதி நொடி வரை கோப்பை காலியாக இருக்க வேண்டும். ஆனால் பேஸ்புக்கில் நம் கோப்பை நிறைந்து வழிந்தபடி இருக்கிறது. – அபிலாஷ் சந்திரன்

உலகம் ஏன் இவ்வளவு மோசமாக இருக்கிறது
என்று யாராவது சித்தனிடம் கேட்டால்
அவன் சொல்கிறான்
இதைவிடவும் மோசமாக இருக்கும் அதைப் பார்க்க
நீயும் நானும் இருக்க மாட்டோம். – தபசி

கையில் சுத்தியல் தான் இருந்தால் பார்ப்பதெல்லாம் ஆணி போல்தான் இருக்கும். – யாரோ

முஸ்லிம் வர்த்தகர்களை புறக்கணிக்க வேண்டிவரலாம்

இப்படிச் சொன்னதில் தவறு இல்லை ஞானசார தேரர் விடாப்பிடி

(கொழும்பு)


அளுத்கம பிரதேசத்தில் கடந்த ஞாயிறன்று வெடித்த முஸ்லிம்களுக்கு எதிரான வன் முறைகளைத் தூண்டியதாக பௌத்த கடும்போக்கு அமைப் பான பொதுபலசேனா மீது ஆளும்கட்சி எதிர்க்கட்சி அரசி யல் தலைவர்கள் குற்றம் சாட் டியுள்ளனர்.

அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்த மதவாதக் கருத்துக் களே வன்முறைகளைத் தூண் டியதாகவும் அவரது பேரணியை அதிகாரிகள் தடுக்காமல் விட் டமை தவறு என்றும் விமர்சனங் கள் வெளியாகியிருந்தன.

இந்தச் சூழ்நிலையில், ஞான சார தேரரிடம் கேள்வி எழுப் பியபோது,

"இந்த நாட்டில் கடும்போக்கு தீவிரவாத, அடிப்படை வாத, இனவாத குழுக்கள் இயங்கு கின்றன என்பதை சுட்டிக்காட் டும் எங்களை இனவாதி என் றால் பரவாயில்லை. எங்களை இனவாதி என்றே வைத்துக் கொள்ளுங்கள் என்று தான் நான் கூறினேன்" என்றார் ஞான சார தேரர்.

"இந்த தீவிரவாதக் குழுக் கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காவிட்டால், ஜனநாயக வழிமுறையில் முஸ்லிம் வியா பார நிலையங்களை புறக் கணிக்குமாறு மக்களைக் கேட்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்று தான் கூறினேன். அப்படி



மக்கள் புறக்கணித்தால் பேரு வளை மற்றும் அளுத்கமையில் உள்ள கடைகளுக்கு அதோ கதிதான் என்றும் நாங்கள் கூறினோம்" என்றும் கூறினார் அவர்.


தான் கூறிய கருத்தை, முஸ்லிம் கடைகளைத் தாக்கும் படி கூறியதாக அர்த்தம் கொள் ளக்கூடாது என்றும் ஞானசார தேரர் கூறினார்.

முன்னதாக அளுத்கமையில் பௌத்த பிக்கு ஒருவர் தாக்கப் பட்டதாக வெளியான சம்ப வத்தை தொடர்ந்து இரண்டு சமூகங்களுக்கும் இடையே மோதல் வெடிக்கும் சூழ்நிலை நிலவியதாகவும், அதனைத் தடுக்கும் விதத்தில் பௌத்த மக்களுக்கு தெளிவூட்டும் வித மாகவே நகரில் பெரிய அள வில் கூட்டம் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் ஞானசார தேரர் கூறினார்.

இரண்டு சமூகங்களுக்கும் இடையில் பிரச்சினை வெடிக் கும் என்ற நிலை இருந்தால், அந்தக் கூட்டத்தை நடாத்தி மேலும் மோதலை வளர்க்கா மல், தனிப்பட்ட ரீதியில் சமூகத் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்தியிருக்க லாம் அல்லவா என்று வினவிய போது,

"நீங்கள் சொல்லுகின்ற எல்லாப் பேச்சுவார்த்தைகளும் நடந்துதான் இருந்தன. பள்ளி வாசல்களில் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் முஸ்லிம் இளைஞர்கள் கூடியிருந்தமை பற்றி பௌத்த அமைப்புகள் மீது விரல் நீட்டும் எவரும் பேசு வதில்லையே. அதுபற்றி யாரும் பேசுவதில்லை. எங்கள் மீது மட்டும் குற்றம் சாட்டவேண்டாம்" என்றார் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலா ளர் கலபொடஅத்தே ஞானசார தேரர்.

தொடர்பாடல் செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

மனநலம் குன்றிய பிள்ளை களுக்கான தொடர்பாடல் விருத் தியை மேம்படுத்தும் நோக்கத் துடன் "ஆட்டிசம்" தொடர்பாடல செயலமர்வு நேற்று நடைபெற் றது.

யாழ்.பிராந்திய சுகாதார பணி மனையின் ஏற்பாட்டில் யாழ்.பொது நூலகத்தில் நேற்று காலை 9 மணிமுதல் நடைபெற் றது.

இச் செயலமர்வின் வளவா ளராக "ஆட்டிசம்" தொடர்பா டல் முறையின் செயற்பாட்டாளர். றிழிகா முத்தையா கலந்து கொண்டு கருத்துக்களை வழங் கினார். "ஆட்டிசம்" தொடர்பாடல் முறைமையினை பெற்றோர்க ளுக்கு வழங்கி அதன் மூலம் பெற்றோர்கள் தமது மனநலம் குன்றிய பிள்ளைகளின் தொடர் பாடல் முறைமை மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற் காக ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

இச் செயலமர்வில் யாழ். போதனாவைத்தியசாலை மன நல வைத்தியர் சிவயோகன் மற்றும் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பெற்றோர் கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (25)

தலை போனாலும் "ஸபூர்" பேணுங்கள்

அஸ்வர்.எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

பேருவளை மற்றும் தர்கா நகர் பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நஷ்டஈட்டை பெற்றுக்கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். எனவே, முஸ்லிம் மக்களை அமைதியாக இருக்கு மாறு ஊடகத்துறை அமைச்சின் பேர்வை எம்பியான அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரும்பாடுபட்டே முப்பது வருட யுத்தத்தை ஜனாதிபதி முடிவு கொண்டு வந்தார். இவ்வாறு பெறப்பட்ட அமைதியை இழக்க எவரும் விரும்பமாட்டார்கள். நாட்டின் அபிவிருத்திக்கு அமை தியே மிக முக்கியமாகும். எனவே அனைவரும் அமைதியை பேண வேண்டும்.

குறுகிய அரசியல் லாபத்துக்காக ஒரு சில இயக்கங்கள் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சிக்கின்றனர். எனவே இவற்றுக்கெல்லாம் ஏமாறாது எமது பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளமையினால், நாட்டின் நலன் கருதியும் நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் முஸ்லிம்களின் நலன் கருதியும் அனைவரும் "ஸபூர்" எனும் பொறுமை பேணுவோம் எனவும் அல்ஹாஜ் அஸ்வர் மேலும் தெரிவித்தார். நாட்டில் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் உல மாக்களுக்கும் முக்கிய பங்குண்டு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அளுத்கம வன்முறைகளால் முஸ்லிம்களுக்கு அதிக இழப்பு

நாடாளுமன்றில் நீண்ட பட்டியல்

அளுத்கம வன்செயல் கார ணமாக 8 பேர் பலி, 170 பேர் காயம், 580 கோடி பெறுமதி யான சொத்து இழப்பு, 150 வீடு கள் அழிப்பு, 2450 பேர் இடம் பெயர்வு, 17 பள்ளிவாசல்கள் மீது தாக்குதல், 1000 பேர் தொழில் வாய்ப்பு இழப்பு, 272 கால்நடைகள் கொலை, 86 கொள் ளைச் சம்பவங்கள். இவ்வாறு நேற்றுமுன்தினம் நாடாளு மன் றத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யான மொஹ மட் அஸ்லம் தகவல் வெளியிட் டார்.

நேற்று முன்தினம் நாடாளு மன்றத்தில் தகவல் வெளியிட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யான மொஹமட் அஸ் லம் மேற்படி சம்ப வத்தை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஏற்பட்டுள்ள அழி வுகளுக்கும் இழப்புகளுக்கும் அரசாங்கம் நஷ்ட ஈட்டினை வழங்க வேண்டு மென்றும் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் 2013 ஆம் ஆண்டுக் கான நிதி திட்டமிடல் அமைச் சின் அறிக்கை தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்ட தக வல்களையும் கண்டனத்தை யும் வெளியிட்டார்.

அஸ்லம் எம்.பி. இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அளுத்கமையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவம் தொடர் பில் நாம் எமது கவலையை தெரிவித்துக்கொள்கின்றோம். இந்தச் சம்பவமானது கண்டனத் துக்குரியதாகும்.

சமாதானத்தை பாதுகாக்கும் பொலிஸார் உரிய வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தி யிருந்தார்களேயானால் இத்த கைய அழிவுகளும் இழப்புக்க ளும் ஏற்படாத வண்ணம் பாது காத்திருக்க முடியும். ஆனால் அங்கு அவ்வாறு இடம்பெற வில்லை.

இச் சம்பவத்தில் தமிழர் ஒரு வர் உட்பட நான்கு பேர் படு கொலை செய்யப்பட்ட அதே வேளை மேலும் நான்கு பேர் சம்பவம் தொடர்பான அதிர்ச் சியால் மாரடைத்து மரணமா கினர். இதன்படி இந்தச் சம்ப வத்தில் எட்டு பேர் உயிரிழந்தி ருக்கின்றனர். அது மாத்திரமல் லாது 170 பேர் காயமடைந் துள்ளனர்.

150 வீடுகள், கடைகள் மற் றும் 17 பள்ளிவாசல்கள் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன. 370 குடும் பங்களைச் சேர்ந்த 2450 பேர் இடம்பெயர்ந்து அகதிகளா யுள்ளனர்.

அத்துடன் இந்தச் சம்பவத் தால் 580 கோடி ரூபா பெறுமதி யான சொத்துக்களுக்கு அழிவு ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள வர்த்தக நிலை யங்கள் அழிவுக்குள்ளாக்கப் பட்டுள்ளதால் சுமார் ஆயிரம் பேர் வரை தொழில் வாய்ப்பு களை இழந்திருக்கின்றனர். பாட சாலை மாணவர்கள் தமது அனைத்து உடைமை களையும் அது மாத்திரமன்றி 272 கால் நடைகள் கொல்லப்பட்டுள்ளதுடன் இங்கு 86 கொள்ளைச் சம்பங் களும் நடந்தேறியுள்ளன.

தர்கா நகரை கொண்டுள்ள நான் அங்குள்ள சிங்கள மக் களை நன்கு அறிவேன். அவர் களுடன் முஸ்லீம்கள் சகஜ கவே வாழ்ந்து வருகின்றனர். எனி னும் சம்பவ தினத்தன்று புறப்ப குதிகளில். இருந்து வந்த வர்க ளாலேயே இந்த அசம்பாவித சம்பவங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

ஆகவே இதனை நாம் மிக வும் வன்மையாக கண்டிக்கின் றோம். அத்துடன் இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய வகையிலான நடவடிக்கை யினை மேற்கொள்ள வேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு அதிகாரசபைக்கு வங்குரோத்து நிலை இல்லை

அமைச்சர் தினேஷ் பெருமிதம்

(கொழும்பு)

வீடமைப்பு அதிகாரசபை கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை 1051 மில்லியன் ரூபா லாபம் பெற்றுள்ளது என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்- வீடமைப்பு அதிகாரசபை எதிர்வரும் 2015 ஆம் ஆண்டில் இவ்வருமானத்தை 1538 மில் லியன் ரூபாவாகவும் 2016 ஆம் ஆண்டில் 1709 மில்லியன் ரூபாவாகவும் அதிகரிக்கச் செய்ய எதிர்பார்த்துள்ளது.

தற்போது நிலையான வைப்பாக 100 மில்லியன் ரூபா நிதியுடன் மொத்தமாக 80917 மில்லியன் ரூபா உள்ளது. இவ்வதி காரசபையில் சேவைப்பற்றாக்குறை காணப்படவில்லையென்று அவர் தெரிவித்தார்.

புத்தகக்கண்காட்சி



உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகத்தில் புதிய புத்தகங்களின் கண்காட்சி நேற்று நடைபெற்றது. இக்கண் காட்சிக் கூடத்தினை யாழ்.மாநகர சபையின் பிரதம கணக்காளர் புஸ்பநாதன் லோகேந்திரன் திறந்து வைத்தார்.

இக்கண்காட்சிக் கூடத்தினை பாலர் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெரியோர்கள் பார்வையிட்டனர். நேற்று ஆரம்பிக்கப்பட்ட இக் கண்காட்சி ஒருவாரத்திற்கு நடைபெறவுள்ளமையும் குறிப் பிடத்தக்கது. (25)

37. ஒரு நோயாளி தினமும் காலை, மத்தியானம், இரவு வேளைகளில் 2 மருந்து வில்லைகள் வீதம் உட்கொள்வார். 84 மருந்து வில்லைகள் அடங்கிய பைக்கெற் ஒன்று இவருக்கு எத்தனை நாளுக்கு போதும்?

.....

38. மாணவன் ஒருவன் பாடசாலைக்குச் செல்வதற்கு காலை 6.40இற்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு 50 நிமிடங்களின் பின் பாடசாலையை அடைந்தான். அவன் பாடசாலையை அடைந்த நேரம் யாது?

.....

39. 1 Kg கத்தரிக்காயின் விலை ரூ 60.00 ஆகும். 2Kg 250g நிறையுள்ள கத்தரிக்காய் வாங்குவதற்கு எவ்வளவு பணத்தைச் செலுத்த வேண்டும்?

.....

40. 714 பால்ரின்கள் 7 பெட்டிகளில் சமனாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஒரு பெட்டியில் எத்தனை பால்ரின்கள் உள்ளன?

.....

41. ஒரு பாடசாலைக்கு முன்னால் உள்ள வீதியில் வலப்பக்கத்திற்கும் இடப்பக்கத்திற்கும் ஒரு மணித்தியாலத்திற்குச் சென்ற வாகனங்கள் பற்றி மாணவர் குழுவொன்று சேகரித்த தகவல்கள் அட்டவணையில் காணப்படுகின்றது.

வாகன வகை	சென்ற வாகனங்களின் எண்ணிக்கை	
	வலப்பக்கத்திற்கு	இடப்பக்கத்திற்கு
முச்சக்கர வண்டி	55	40
கார்	50	32
பேருந்து	35	25
லொறி	25	28

1. பாடசலையைக் கடந்து சென்ற முச்சக்கர வண்டிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

2. இடப்பக்கத்திற்குச் சென்ற வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

3. இடப்பக்கத்தைப் பார்க்கிலும் கூடுதலாக வலப்பக்கத்திற்குச் சென்ற வாகனங்களின் எண்ணிக்கை யாது?

.....

4. வலப்பக்கத்திற்கச் சென்ற லொறிகளின் எண்ணிக்கைக்குச் சமனாக இடப்பக்கத்திற்குச் சென்ற வாகனம் யாது?

.....

5. வலப்பக்கத்திற்கச் சென்ற வாகனங்களின் எண்ணிக்கையைக் காட்டும் நிரல் வரைபை வரைக.(நிரல்களை நிழற்றுக.)

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி



கல்வி முரசு

(கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான வினாத்தாளின் தொடர்ச்சி...)

06. பின்வரும் கருத்தை தமிழில் எழுதுக.

I) Be careful ..... II) Hands up.....

III) Thank you .....

07. பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் கருத்தைத் தமிழில் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.



ඔබගේ ස(ப்)පසුව(ப்)ப கொஹெமத?

.....



හොඳින්(ந்)தின் இன்னவா?

.....

08 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

08. வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் காய்
(1) கத்தரிக்காய் (2) பாகற்காய் (3) வெண்டிக்காய் (4) வட்டுக்கத்தரிக்காய்

09. ஒருவருடைய காலில் துருப்பிடித்த ஆணி குத்தினால் அவருக்குத் தாமதமின்றிக் குடிக்கக் கொடுப்பதற்கு தகுந்த மருந்து
(1) கொத்தமல்ல (2) மரமஞ்சள் (3) வில்வம்பூ (4)ஆவரம்பூ


10. இலங்கைக்கே உரித்தான பிராணி அல்லாதது
(1) தீக்கோழி (2) இலங்கை நாகணவாய் (3) நாய் (4) சிவப்புக்கழுத்துத் தவளை

11. இலங்கைகு மட்டும் உரித்தான தாவரம்
(1) தென்னை (2) பனை (3) கத்தரி (4) தொரணை

12. விமானத்தில் செல்லும் ஒருவருக்கு வானவில்
(1) அரை வட்டமாகத் தெரியும் (2) முழு வட்டமாகத் தெரியும்
(3) முக்கால் வட்டமாகத் தெரியும் (4) தலைகீழாகத் தெரியும்

13. மின்சாரம் தாக்கினால் உடனடியாகச் செய்ய வேண்டியது
(1) தாக்கியவரைத் தொடுதல் (2) நின்ற இடத்தில் அசையாது நின்று கத்துதல்
(3) மின்சாரத்தை உடனடியாகத் துண்டித்தல் (4) செயலற்று செய்வதறியாது நிற்றல்

14. காட்டப்பட்ட நட்சத்திரக் கோலத்தை குறிக்கும் பெயர்
(1) பெருங்கரடி (2) வேட்டைக்காரன்
(3) கார்த்திகை (4) கன்னி



15. சீல மீன் எனப்படுவது
(1) கடற்பசு (2) கடற்குதிரை (3) நீர்யானை (4) திமிங்கலம்

16. உடலாரோக்கியச் செயற்பாடுகளின்போது இறுதியில் செய்யப்படுவது
(1) ஆரம்ப அப்பியாசம் (2) பிராணிகள் போலச்செய்தல்
(3) உபகரணங்களுடன் செய்யும் செற்பாடு (4) உடலைத் தளர்த்தும் செயற்பாடு

17. பின்வரும் பொருள்களிடையே பித்தளைப் பாத்திரங்களைத் துப்பரவாக்கி மினுக்குவதற்கு மிகப்பொருத்தமானது.
(1) பழப்புளி (2) தேங்காய்ப்பூ (3) தேயிலைச் சக்கை (4) சுட்ட உமி

18. மீனவர் சிறு மீன்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்த உபகரணத்திற்கு வழங்கப்படும் பெயர்
(1) நாம்புவ (2) கரைவலை (3) அத்தாங்கு (4) மடி

19. இலங்கையின் அரச இலட்சனையில் காணப்படும் பகுதிகள்
(1) நிறைகலசம், நெற்கதிர், தர்மச்சக்கரம் (2) நிறைகலசம், நெற்கதிர், அரசஇலை
(3) சூரியசந்திரர், தர்மச்சக்கரம், சங்கு (4) நெற்கதிர், நிறைகலசம், சங்கு


20. தேசப்படத்தில் மலைகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம்
(1) நீலம் (2) ஊதா (3) கறுப்பு (4) கபிலம்

21. அபய வாவியை கட்டிவித்த அரசன்
(1) மகாசேனன் (2) பண்டு காபயன் (3) தாதுசேனன் (4) துட்டகைமுனு


22. அயடின் குறைபாட்டால் ஏற்படும் நோய்
(1) தொண்டைக்கரப்பான் (2) நீரிழிவு (3) கண்டமாலை (4) யானைக்கால்

23. பூச்சிகளை பிடித்து உண்ணும் தாவரத் தொகுதி
(1) கெண்டி, கிளிச்சாடி, துரோசீரா, யூற்றிக்குலோரியா
(2) கிளிச்சாடி, கெண்டி, மலைவேம்பு, அந்தூரியம்
(3) வாழை, கிளிச்சாடி, யூற்றிக்குலோரியா, தென்னை
(4) துரோசீரா, யூற்றிக்குலோரியா, அந்தூரியம்

24. தெறியோட்டைத் தைப்பதற்குப் பயன்படுத்தப்படும் தையல்




25. உலர் மின்கலத்தைப் பயன்படுத்தி இரு மின்குமிழ்களை ஒரே தடவையில் ஒளிரச் செய்வதற்கு மூன்று கம்பித்துண்டுகள் தொடுக்கப்படும் விதத்தைப் பின்வரும் வரிப்படத்தில் வரைந்து காடுக.




26. பித்தளைத் தகட்டிற்கு அருகில் காந்தத்துண்டினைக் கொண்டு செல்லும் போது
(1) பித்தளைத் தகட்டை நோக்கி காந்தத்துண்டு இழுக்கப்படும்
(2) பித்தளைத் தகட்டிலிருந்து காந்தத்துண்டு தள்ளப்படும்
(3) பித்தளைத் தகட்டிற்கும், காந்தத்துண்டுக்கும் இடையில் மாற்றம் எதுவும் ஏற்படாது
(4) ஒரு முனை கவரப்படும் அதேவேளை அடுத்த முனை தள்ளப்படும்

27. எரிந்து கொண்டிருக்கும் மெழுகுவர்த்திகள் கண்ணாடிப் பாத்திரங்களால் மூடப்பட்டுள்ளதை உருக்கம் காட்டுகின்றன. இங்கு இறுதியாக அணையும் மெழுகுவர்த்தி எது.


(1) (2) (3) (4)

28. பின்வரும் கருவிகளிடையே ஆணியை இறுக்கவும், சுழற்றவும் பயன்படுத்தத்தக்க மிகப் பொருத்தமான உபகரணம்.


(1) (2) (3) (4)

பின்வரும் அடைப்புக்குள் சில தாவரங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

சாத்தாவாரி, முடிதும்பை, மிளகு, ஆவரசு, வெற்றிலை, தூதுவளை, கோரை, மொசுமொசுக்கை

ஒவ்வொரு உருவுக்கும் பொருத்தமான பெயரைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.


29. ..... 30. ..... 31. ..... 32. .....


கீழே உள்ள அடைப்பிற்குள் சில பறவைகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

பெங்குயின், வாத்து, தீக்கோழி, பருந்து, மைனா, வான்கோழி, வல்லூறு, மரங்கொத்தி

பறவையின் பெயரைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


33. ..... 34. ..... 35. ..... 36. .....

வடமாகாண இணைந்த சேவை சாரதிகளுக்கு நியமனம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் வடமாகாணத்தில் இணைந்த சேவை தரம் III சாரதிகளுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முற்பகல் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வழங்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திற்கு ஆறு பேரும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மூவரும் வவுனியா மாவட்டத்திற்கு ஒருவருமாக மொத்தம் பத்துப்போருக்கு இவ்வாறு நியமனக் கடிதங்கள் வழங்கப் பட்டுள்ளது.


எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து இவர்களுக்கான நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாண சாரதி ஆட்சேர்ப்பிற்கான முறையான போட்டிப் பரீட்சையின் மூலம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று நீங்கள் தெரிவாகியதன் அடிப்படையில் உங்களுக்கு இந் நியமனம் வழங்கப்படுகிறது.

இதன்மூலம் உங்களுக்கு நிரந்தர அரசு நியமனம் கிடைப்பதுடன், எதிர்காலத்தில் ஓய்வூதியத்தையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் இதன்மூலம் உங்கள் வாழ்கை ஒளிமயமான தாக அமையும் என்று நம்புவதாகவும் ஆளுநர் தெரிவித்தார். இந் நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் வடமாகாண ஆளுநர் செயலக உத்தியோகத தர்களும் கலந்து கொண்டனர். (25)(பா)

நீர்க்குழாயில் வெடிப்பு வீணாகிப்போகும் குடிநீர்



யாழ். பிரதான வீதி இரண்டாம் குறுக்குத்தெருச்சந்தியில் நீர் விநியோகக் குழாய்ப்பகுதியில் நீர்க்கசிவு ஏற்பட்டு நீர் வெளியேறி வருவதாகவும், பின்னர் நீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டதும் அந்தப் பகுதியில் வெளியேறிய நீர் அப்படியே வற்றி வருவதுமாக காணப்படுகின்றது.

இதன் காரணமாக நீர் விநியோகக் குழாயினூடாக அசுத்த நீர் கலந்துவிடக்கூடிய ஏது நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதியில் குடிநீர் பெறும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட நீர் விநியோகப் பகுதியினர் நீர்விநியோகக் குழாயில் ஏற்பட்டுள்ள பாதிப்பை சரிசெய்து தரும்படி அப்பகுதி மக்கள் கோரிக்கை விட்டுள்ளனர்.

தினமும் காலையிலும் பிற்பகலும் இவ்வாறு நீர் விநியோகம் நடைபெறும்போது இந்தப்பகுதியில் நீர் பெருகி நிற்கும்போது நாய்கள் காகங்கள் தாகம் தீர்த்துக்கொள்வதற்காக இதில் நிற்கின்றன. பின்னர் நீர்விநியோகம் இடைநிறுத்தப்பட்ட பின்னர் வற்றிவிடுவதாகவும் இதனால் குழாய் நீர் அசுத்தமாக வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (பா)

கோவில் பசுவையும் கன்றையும் திருடியவர்களுக்கு விளக்கமறியல்

.அச்சுவேலி தீத்தாங்குளம் பிள்ளையார் கோவில் முன்றலில் கட்டப்பட்டிருந்த கோவில் பசுவையும் அதன் கன்றினையும் திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நால் வரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் ஜோய் மகிழ்மகாதேவா நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குறித்த நபர்கள் பசு மாட்டினை பிறிதொரு நபரிற்கு விற்பனை செய்துள்ளதுடன், அதன் கன்றினை இறைச்சியாக்கா வெட்டியுள்ளனர்.

பசு மாட்டினையும் அதன் கன்றினையும் காணவில்லையென ஆலயக் குருக்களினால் கடந்த வியாழக்கிழமை அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

கோவில் முன்றலில் கடந்த புதன்கிழமை கட்டப்பட்டிருந்த மேற்படி பசுவும், கன்றும் கடந்த வியாழக்கிழமை காலை வந்து பார்த்த போது காணாமற்போயிருந்ததாக குருக்கள் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நால்வரும் அச்சுவேலி இடைக்காட்டுப் பகுதியில் வைத்து கடந்த வியாழக்கிழமை மாலை அச்சுவேலிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோதே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.

அலங்கார உற்சவம்

யாழ். திருவண்ணை நகர் அருள்மிகு ஸ்ரீ அங்குசபா பிள்ளையார் (கீரிப் பிள்ளையார்) ஆலய அலங்கார உற்சவம் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

ஸ்நபனாபிஷேகமும், மூலவிநாயகருக்கு விசேட பூஜையும், சொற்பொழிவும், வசந்த மண்டபப் பூஜையும் சுவாமி உள்வீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறவுள்ளன.

இறுதி நாளான வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அபிஷேகமும், 10.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

அன்று மாலை நித்திய பூஜையும் வசந்தமண்டப பூஜையும் திருவூஞ்சலும் இடம்பெற்று விநாயகர் வெளிவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன. (105)

கர்ப்பிணித் தாய்மாருக்கு அறிவூட்டும் செயலமர்வு

தருமபுரம் சுகாதார வைத்திய திகாரி பிரிவின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை தருமபுரம் பகுதியினைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அறிவூட்டும் செயலமர்வு தருமபுரம் சுகாதார வைத்தியதிகாரி பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதற்கான அனுசரணையினை கிளிநொச்சி மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் வழங்கியிருந்தனர்.

கர்ப்பிணித் தாய்மாருக்கு அறிவூட்டும் கருத்துக்களை சுகாதார வைத்தியதிகாரி எஸ்.சுவேந்திரன், கிளிநொச்சி மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் இ.செந்தூரன் ஆகியோர் வழங்கினார்கள்.

இதன்போது, குழந்தைகளினை ஆரோக்கியமாகப் பெற்றெடுத்தல், குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் எவ்வாறு எந்தக் காலப்பகுதிக்குள் ஏற்றப்படுதல் வேண்டும் மற்றும் தடுப்பூசிகள் ஏற்றப்படாமல் விட்டால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டப்பட்டது. மேலும், குழந்தைகளின் நிறைகளைச் சரியாகப் பேணுதல், போசாக்குள்ள குழந்தைகளாக வளர்த்தல் போன்றவற்றிற்கு தாய்மாரினால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள், மற்றும் அதற்கு அரசாங்கத்தினால் மேற்கொளளப்படும் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டன.

சிறப்பாக நடைபெற்ற திருமுறைப்பண் இசைமாலை




உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானின் பெரும்புகழ் கூறும் திருமுறை சி.டி வெளியீடு யாழ் பலாலி வீதி, இந்து பேரவை மண்டபத்தில் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பண்ணிசை வேந்தர் கலாநிதி நா.வி.மு.நவரத்தினம் மற்றும் இசைக்குயில் செல்வி ந.தனசொரூபி ஆகியோர் பாடிய இனிய திருமுறைப் பாடல்கள் அடங்கிய சி.டி.க்கள் இவ்விழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

தித்திக்கும் தேனமுதம் போன்ற தெய்வீகத் திருமுறைக்கான இசைமாலை சி.டி.வெளியீட்டு விழாவுக்கு இந்து சமயப் பேரவையின் கௌரவ செயலாளர் சி.சக்திக்கிரீவன் தலைமை வகிக்க முதன்மை விருந்தினராகப் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தம்பதிகள் வருகை தந்து சிறப்பித்திருந்தனர்.

இசைத்தமிழ் வேந்தர், தெய்வத்தமிழ் இசைப் பேரறிஞர் கலாநிதி நா.வி.மு.நவரத்தினம் தம்முடைய இனிய குரலில் நாயன்மார் நமக்களித்த தேவாரத் திருமுறைப் பாக்களையெல்லாம் பொருள் விளங்கப்பாடியிருக்கின்றார்.

ஒவ்வொரு பாடலும் கேட்கக்கேட்க மிகவும் சந்தோஷத்தை அளிக்கின்றது.



திருமுறைப்பண் இசைமாலை

அவரது குரலுக்கு இன்னும் மெருகூட்டிய வயலின் இசையை உ.ராதாகிருஷ்ணனும் வெங்கடேஸ்வர சர்மாவும் வழங்கியிருந்தனர். சி.மகேந்திரன் மிருதங்கம் வாசிக்க, ஜோண்கவாஸ் ஆர்மோனியம் வாசிக்க, இனிய இன்னிசை காதுகளில் தேனாறு பாய்ந்தது போலிருந்தது. அதுமாத்திரமன்றி ஸ்ரீரங்கம் வி.கணபதி வயலின் வாசித்திருக்கின்றார். இந்தியக் கலைஞர் ஜி.நாகராஜன் மிருதங்கம் வாசித்துள்ளனர்.

மேலும் கானாமிர்த இசைக்குயில் செல்வி.தனசொரூபியின் பாட்டுக்கு இசைக்கலைமாணி கோபிதாஸ் வயலின் வாசிக்க கலைஞர் சி.துரைராஜா மிருதங்கம் இசைக்க, ந.சதீஸ்குமார் முகர்சிங் வாசிக்க செவிக்கினிய கீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திருமுறைப் பண் இசைமாலை தேவாரத்திலுள்ள நுணுக்கமான தெய்வீக கருத்துக்களைத் துல்லியமாகவும், தெளிவாகவும் விளக்கி நிற்பது இதன் சிறப்பம்சமாகும். இதனைப் பாடிய தனசொரூபிக்கு "இசைக்குயில்" பட்டம் வழங்கியுள்ளமை மிகப்பொருத்தமானது என்பதை இந்த சி.டி வெளிப்படுத்தி நிற்கின்றது.

அருமையான இசையமைப்புடன் தெளிவான மெட்டமைப்பில் பண்ணிசையின் பண்பு மாறாமல் இனிமையாகப் பாடியிருக்கும் செல்வியைப் பாராட்டாது இருக்கமுடியாது.

மொத்தத்தில் நல்ல இனிமையான பக்தி ததும்பும் இந்தச் சீ.டிக்கள் வெளிவந்ததையிட்டுத் தமிழ்கூறும் நல்லுலகம் பெருமைகொள்ளவேண்டும். நம் நாட்டிலுளள சைவமக்கள் வாழும் பகுதிகளில் இந்தச் சி.டிக்கள் கட்டாயம் இருக்க வேண்டும், நிச்சயமாக ஒலிக்க வேண்டும்.

தெய்வத் தமிழ்ச்சுடர்
இராசையா சிறிதரன்

தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலுக்கு 50 ஆயிரம் ஈராக் படையினர் குவிப்பு



(பாக்தாத்)

தீவிரவாதிகள் பிடியில் இருக்கும் ஈராக் நகரங்களை மீட்க 50 ஆயிரம் இராணுவ வீரரகள் குவிக்கப்பட்டுத் தாக்குதலுக்கு தயாராகவுள்ளனர்.

சன்னி பிரிவு தீவிரவாதிகள் ஷியாப்பிரிவு அரசின் மீது தாக்குதல் நடாத்தி வருகின்றனர். 'ஐ.எஸ். ஐ.எஸ்.' என்ற அமைப்பை ஏற்படுத்தி இராணுவத்துக்கு எதிராக அதிரடித் தாக்குதல்களை நடாத்துகின்றனர்.

ஈராக்கின் முக்கிய பெரிய நகரங்களான மொசூல், திக்ரித், கிர்குக், பலூஜா உள்ளிட்ட வற்றை கைப்பற்றி தங்கள் கட் டுப்பாட்டில் வைத்துள்ளனர். தலைநகர் பாக்தாத்தை நோக்கி முன்னேறி வருகின்றனர்.

எனவே, தீவிரவாதிகளின் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்காக ஈராக்குக்கு உதவ அமெரிக்க முன் வந்துள்ளது. தீவிரவாதிகளின் மீது வான் வழித்தாக்குதலுக்கு தயார் நிலையில் உள்ளது. அங்குள்ள அமெரிக்கர்கள் மற்றும் தூதரகத்தை காக்க கூடுதல் இராணுவ வீரர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

ஈராக் இராணுவம் தீவிரவாதிகளை தாக்கி முறியடிக்க தேவையான உத்திகள் மற்றும் யோசனைகளை வழங்க 300 ஆலோசகர்களை அதிபர் ஒபாமா அனுப்பியுள்ளார்.

ஒருவார கால போர்நிறுத்தத்தை அறிவித்தது உக்ரைன் அரசு



ஒரு வார கால போர் நிறுத் தத்தை உக்ரைன் அரசுஅறிவித் துள்ளது.

இந்த அவகாசமானது அந் தப் பகுதிக்கான அமைதித் திட் டத்தை செயற்படுத்தக்கூடிய கால அவகாசத்தைத் தனக்குத் தரும் என்று ஜனாதிபதி பெட்ரோ போரோஷேங்கோ தெரிவித் துள்ளார். இருப்பினும் போரா ளிகள் தாக்கினால் இரா ணுவம் தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறி னார். தங்களின் மாநிலப் பிரதேசத்தைக் காத்துக்கொள்ள தாங்கள் எந்தவித முயற்சியிலும் ஈடுபடுவோம் என்று அவர் தனது இணையதளத் தகவலில் தெரிவித்துள்ளார்.

3 மாநிலங்களின் முதல்வர்களை மாற்றுவதற்கு காங்கிரஸ் முடிவு

(புதுடில்லி)

மகாராஷ்டிரா அசாம் மற் றும் அரியானா மாநிலங்களின் முதல்வர்களை மாற்ற, காங் கிரஸ் மேலிடம் முடிவு செய் துள்ளது.

சமீபத்தில் நடந்த லோக்சபா தேர்தலில், காங்கிரஸ் படு தோல்வியைச் சந்தித்தது. அத னால் கட்சி அமைப்புக்களை மாற்றி அமைக்கும் பணியில், காங்கிரஸ் மேலிடம் ஈடுபட்டுள் ளது. முதல்கட்டமாக சில மாநில அமைப்புக்களை கலைக்க உத் தரவிட்டது. இதன் தொடர்ச்சி யாக மகாராஷ்டிரா அசாம் மற் றும் அரியானா மாநில முதல் வர்களை மாற்ற முடிவு செய்துள ளது.

இது தொடர்பாக, காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்க அசாம் முதல்வர் தருண் கோகோயை மாற்ற வேண்டும் என, இரண்டு ஆண்டுகளாக, அவரின் அதி ருப்தியாளர்கள் போர்க்கொடி தூக்கி வருகின்றனர். இருப்பி னும் கட்சி மேலிடம் அதை கண்டு கொள்ளவில்லை. சமீபத்தில் நடந்த லோக்சபா தேர்தலில், அசாமில் மொத்தமுள்ள, 14 லோக்சபா தொகுதிகளில் மூன்று இடங்களில் மட்டுமே காங்கிறஸ் வெற்றி பெற்றது. இது முதல்வரை மாற்ற வேண் டும் என்ற கோரிக்கையை, மேலும் வலுவடையச் செய்துள்ளது. அதனால், தருண் கோகோய் விரைவில் மாற்றப்படுவார். அதே போல், அரியானாவில் காங்கி ரஸ் ஆளும் கட்சியாக இருந் தும், லோக்சபா தேர்தலில், ஒரு இடத்தை மட்டுமே பிடித்தது. அதனால் முதல்வர் பூபிந்தர் சிங் ஹூடாவை மாற்ற வேண்டும் என கட்சிக்குள் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. முதல்வர் ஹூடாவுக்கு எதிரான குழுவுக்கு ஆதரவாக முன் னாள் மத்திய அமைச்சர் குமாரி செல்ஜாவும் செயல்பட்டு வருகி றார். அதனால் நிச்சயம் ஹூடா வின் பதவி பறிக்கப்படலாம். அவருக்குப் பதிலாக புதியவர் ஒருவர் முதல்வராக நியமிக் கப்படலாம்.மகாராஷ்டிராவில் முதல்வர் பிருதிவிராஜ் சவான் தலைமையிலான, காங்கிரஸ் - தேசியவாத காங்கிரஸ் கூட் டணி அரசுள்ளது. இதில் காங் கிரஸ் கட்சியினர் மற்றும் சவா னின் எதிர்ப்பாளர்கள் மட்டு மின்றி, தேசியவாத காங்கிரசும் சவானை மாற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது. இந்த ஆண்டு இறுதியில் மகாராஷ் டிரா மாநிலத்தில் சட்டசபைத்தேர் தல் நடைபெறவுள்ளதால் அதற குள் முதல்வரை மாற்றினால் மட்டுமே கூட்டணிக்கு வெற் வாய்ப்புருவாகும் என நம் பப்படுகிறது.தேசியவாத காங்கி ரஸ் தலைவரான சரத்பவார், சமீ பத்தில் காங்கிரஸ் மூத்த தலை வர் அந்தோணி மற்றும் அகமது படேல் ஆகியோரை சந்தித்து, முதல்வர் மாற்றம் தொடர்பாக விவா தித்துள்ளார். அத்துடன் மகா ராஷ்டிரா ஆளும் காங்கிரஸ் கூட டணி எம்.எல்.ஏ.க்கள் பலரும், முதல்வர் சவானை மாற்ற வேண டும் என, வலியுறுத்தி வருகின்ற னர். அதனால், இந்த மூன்று மாநிலங்களிலும், முதல்வர் களை மாற்ற, காங்கிரஸ் மேலி டம் தீர்மானித்துள்ளது. அத்து டன், கட்சியின் மாநிலத் தலை மையிலும் மாற்றங்கள் நிகழ லாம். என காங்கிரஸ் வட்ட ரங்கள் தெரிவித்தன.

ஊட்டியில் ஆச்சிரமம் நடாத்த இடம்தேடும் நித்தியானந்தா



நித்தியானந்தா, ஆச்சிரமம் நடாத்துவதற்கான இடத்தை தெரிவு செய்வதற்காக ஊட்டி சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

நித்தியானந்தா கர்நாடக மாநிலத்தில் தனது ஆச்சிர மத்தை நடாத்தி வருகிறார்.

இந்நிலையில், அவர் தனது சீடர்களுடன் ஊட்டி சென்றுள் ளார் ஊட்டி சேரிங்கிராஸ் அருகே நீலகிரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாஸ்டர் மாதனின் சகோதரர், மகன் தீபக் போஜ ராஜ் வீட்டில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் அவர் கலந்து கொண டுள்ளார்.

மேலும், இந்தப் பூஜையில் மாஸ்டர் மாதன் அ.தி.மு.க முன் னாள் மாவட்ட செயலாளர் பால நந்தகுமார், நஞ்சநாடு போஜ கவுடர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டுள்ளனர்.

நித்தியானந்தா ஊட்டி அருகே குளிச்சோலை செல்லும் பகு தியில் ஒரு ஆச்சிரமம் அமைக்க உள்ளதாகவும், இதற்கான இடத்தை தெரிவு செய்வதற் காக ஊட்டிக்குச்சென்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகச் செய்திகள்

"அரசு உங்கள் வீட்டு வாசலில்" ராஜஸ்தான் முதல்வரின் புதிய திட்டம்

ராஜஸ்தானில், சர்கார் ஆப்கே துவார் - அரசு உங்கள் வீட்டு வாசலில் என்ற புதிய திட்டத்தைச் செயற்படுத்தி யுள்ள மாநில முதல்வர் வசுந் தரா ராஜே தன் அமைச்சரவை சகாக்களுடன் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மக்களை நேரில் சந்தித்து அவர் களின் குறைகளைக் கேட்டறிந்து வருகிறார்.


ராஜஸ்தானில் முதல்வர் வசுந் தரா ராஜே தலைமையிலான பா.ஜ., ஆட்சி உள்ளது. முதல் வர் வசுந்தரா மக்கள் நலத் திட் டங்களை முனைப்புடன் செயல் படுத்தி வருகிறார். குறைந்த விலையில் குடிநீர் வழங்குதல் மக்களை நேரில் சென்று குறை களை கேட்டறிதல், அமைச்சர்க ளின் செயற்பாட்டை கண்கா ணித்தல் போன்ற முக்கிய பணி களில் தீவிரம் காட்டி வரும் வசுந்தரா சர்கார் ஆப்கே துவார் என்ற புதிய திட்டத்தை நடை



முறைபடுத்தியுள்ளார். அரசு உங்கள் வீட்டு வாசலில் என பொருள்படும் இத்திட்டத்தின் படி மாநில தலைநகரில் மட் டுமின்றி, ஒவ்வொரு மாவட்டத் திலும் அமைச்சரவை கூட்டப் பட்டு முக்கிய பிரச்சினைகள் பற்றி விவாதிக்கப்படும். இதன் மூலம் முதல்வர் அமைச்சர்கள் அதிகாரிகள் உள்ளிட்ட உயர் பதவிகளில் உள்ளவர்களை ஏழை எளிய மக்களும் எளிதில் சந்தித்து தங்கள் குறைகளை நேரடியாகக் கூற முடியும். கடும் வெயிலால் வாடும் பிகானெர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இத்திட்டம் செயற்படுத்தப் பட்டது. மாநில கால்நடை பல் கலையில் நடைபெற்ற அமைச் சரவைக் கூட்டத்தில் முதல்வர் உட்பட அனைத்து அமைச்சர்க ளும் பங்கேற்றனர். இது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இதுகுறித்து முதல்வர் ராஜே கூறியதாவது:இத்திட்டம் வெறும் கண்துடைப்பு அல்ல. அவ்வாறு இருந்தால் வெயி லால் வாடும் பிகானெரில் இதை செயல்படுத்த வேண்டிய அவ சியம் இல்லை. ராஜஸ்தான் அமைச்சர்கள் ஏ.சி. அறைகளில் மட்டும் அமர்வதில்லை சாதா ரண மக்களோடு மக்களாகவும் வாழப் பழகியவர்கள் என்பது இதன் மூலம் நிரூபிக்கப்பட் டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மக்களின் குறைகள் கேட்ட றியப்பட்டு, உடனுக்குடன் தீர்வு காணப்படும்.

பெற்ற தாயைக் காணும் ஆசையால் விமானச் சக்கரத்தில் பயணித்த சிறுவன்



அமெரிக்காவை சேர்ந்த 15 வயது சிறுவன் தன் தாயை காண வேண்டும் என்பதற்காக விமானச் சக்கரத்தில் சுமார் ஐந்தரை மணிநேரம் பயணம் செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் கலிபோனியா மாகாணத்தில் வசித்து வந்த யாஹயா அப்டி என்ற 15 வயது சிறுவன் தனது தந்தையும், சித்தியும் சேர்ந்து கொடுமைப்படுத்தியதால் அவர்களிடமிருந்து தப்பித்து ஹவாயில் அகதியாக உள்ள தன் தாயை பார்க்க முடிவு செய்திருந்தார்.

ஆனால் இவரிடம் பயணச்சீட்டு வாங்க பணம் இல்லாத தால், நண்பர்களின் அறிவுரையின் படி, கலிபோனியாவில் உள்ள விமான நிலையத்தில் நுழைந்து, விமானத்தின் சக்கரம் உள்ளே இழுக்கப்படும் பகுதியில் ஒழிந்து கொண்டுள்ளார்.

எவ்வித பாதுகாப்பு உபகரணமும் இன்றி சக்கரம் இருக்கும் பகுதியில் சுமார் 35,000 அடி உயரத்தில் பறந்த விமானத்தில் தொடர்ந்து ஐந்தரை மணிநேரம் பயணம் செய்த இந்தச் சிறுவன், சிறுகாயமும்மின்றி தரையிரங்கியது ஆச்சரியத்தை ஏற்படுத் தியுள்ளது.

கைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இலகு வங்கிக் கடன் வசதி



வங்கிகள் ஊடாக இலகு கடன்களைப் பெற்று உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்கி அதனூடாக தொழிற்துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே கடன் வழங்கும் திட்டத்தின் நோக்கமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்ற சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் தலைவர்களையும், தொழில் முயற்சியாளர்களையும் ஊக்குவிக்கும் திட்டம் - 111 நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூர் உற்பத்திகளை வளர்த்தெடுப்பது, அவற்றை ஊக்கப்படுத்தி, விரிவுபடுத்தி அதனூடாகத் துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வங்கிகள் ஊடாக தொழில் முயற்சியாளர்களுக்குக் கடன் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தொழிற்துறை நடவடிக்கைகளை மட்டுமல்லாது, நவீன தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்கள், இயந்திரங்கள் ஊடான செயற்திட்டங்களை விரிவாக்கல், அவற்றின் ஊடாகவும், வங்கிகள் ஊடாக கிடைக்கப் பெறுகின்ற இலகுகடன் திட்ட நடவடிக்கைகளையும் பயன்படுத்தி துறைசார்ந்தவர்கள் தொழிற் துறைகளை மட்டுமல்லாது சமூக மேம்பாட்டுக்காக உழைக்க வேண்டிய பொறுப்பையும் கொண்டுள்ளார்கள்.

இத் திட்டத்திற்காக யாழ். மாவட்டத்திற்காக 100 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் இதனை யாவரும் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இத்திட்டத்திற்கு இலங்கையிலுள்ள 9 வங்கிகள் அனுசரணை வழங்கவுள்ள அதே வேளை, குறித்த திட்டத்தினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சும் நடைமுறைப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் ஜயசிங்க இக்கடன் திட்டம் மற்றும் அதனூடாக தொழிற துறை சார்ந்தோர் மற்றும் மக்கள் அடையக் கூடிய பயன்கள் குறித்து விளக்கவுரை நிகழ்த்தும் போது, 1995 ஆம் ஆண்டு முதல் தமது கடமைகளை கண்ணியத்துடன் நேர்மையுடனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இற்றை வரை ஆற்றி வருகின்றார் என சுட்டிக்காட்டினார்.

இதன்போது கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சின் பிரதம கணக்காளரும், குறித்த திட்டத்தின் பிரதான பணிப்பாளருமான வீரசிங்க, உதவித் திட்டப் பணிப்பாளர் இந்திக ரணதுங்க, ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, அமைச்சரின் ஆலோசகர் சுந்தரம் டிவகலாலா, யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் சிவகெங்காதரன், தேசிய தொழில முயற்சி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் ரவிக்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

விசாரணைக்குழு அமைத்தல் இதுவரை இறுதியாகவில்லை

ஐ.நா.மனித உரிமைப்பேரவை தெரிவிப்பு

இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணை, அதற்கான ஆலோசனை மற்றும் ஆதரவு நிபுணர்களை இறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

பேரவையின் பேச்சாளர் ரூபட் கொல்வில்லி இதனைத்தெரிவித்துள்ளார்.

இந்த நிபுணர் குழு இறுதிப்படுத்தப்பட்டவுடன் அது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவித்தல் விடுக்கப்படும். விசாரணைக்கென உரிய வழிகாட்டிகள் மற்றும் சுயாதீனமான உறுதிப்படுத்துதல் மற்றும் விசாரணையின் இறைமை போன்ற விடயங்கள் கருத்திற் கொள்ளப்படவுள்ளது.

குறித்த குழு 12 பேரை உள்ளடக்கியிருக்கும். இந்தக் குழுவின் இணைப்பாளராக சான்ட்ரா பெய்டாஸ் என்ற 20 வருட அனுபவம் கொண்ட மனித உரிமைகள் நிபுணர் கடமையாற்றுவார்.

இந்தக்குழு 2014 ஜூன் நடுப்பகுதி முதல் 2015 ஏப்ரல் நடுப்பகுதி வரையில் தமது விசாரணை வரையறையைக்கொண்டிருக்கும்.

குழுவின் இறுதியறிக்கை 2015 ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில்...

ஆபத்தானது. ஆப்கானிஸ்தானில் செய்த தவறை அமெரிக்கா மீண்டும் செய்கிறது.

அளுத்கம வன்முறைகளை அமெரிக்கா பயன்படுத்திக் கொளளப் பார்க்கிறது.

சில அடிப்படைவாத முஸ்லிம் குழுக்களும் தலைவர்களும், இந்த விவகாரத்தை அனைத்துலக மயப்படுத்தப்படுத்த முனைகின்றனர் என்றும் அவர் மேலும் குற்றம்சாட்டியுள்ளார்.

வன்முறையைத்...

அத்துடன், சிறுபான்மையினர் மற்றும் வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடப்பாடாகும் என்றும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அனைத்து...

இந்தச் சபைக்கு உறுதிமொழி அளிக்கிறது.

இந்த வன்முறைகளில், 2 முஸ்லிம்கள் ஒரு தமிழர் என மூவர் கொல்லப்பட்டுள்ளனர். 6 காவல்துறையினர் உள்ளிட்ட 13 சிங்களவர்கள், 13 முஸ்லிம்கள் என 26 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இரு சமூகங்களினதும், 69 வீடுகள், 83 கடைகள், 11 வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

தற்போது நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

28 சிங்களவர்கள், 17 முஸ்லிம்கள் என 43 பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

அவர்களில், 12 சிங்களவர்கள், 5 முஸ்லிம்கள் என 17 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கூரை...

அவர் குறிப்பிட்டுள்ளார்.

மங்கள சமரவீர நேற்றுக் காலை, சம்பவம் இடம்பெற்ற நோ லிமிட் நிறுவனத்தின் விற்பனை நிலையத்திற்குச் சென்று பார்வையிட்டு, அதன் உரிமையாளருடன் உரையாடியபின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

ஆடை...

சம்பவ இடத்துக்கு அமைச்சர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் றெஜினோல்ட் கூரே இருவரும் நேற்றுக் காலை சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை தீவிபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண வதந்திகளை நம்ப வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்தார்.

"இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணைகள் முடியும் வரை எதுவும் கூற முடியாது. நாட்டில் அசம்பாவிதத்தை ஏற்படுத்தும் வகையில் தீய சக்திகளின் திட்டமிட்ட சதியா அல்லது ஆடையகத்தின் மின்சார ஒழுக்கு சீர்கேடா என ஆராய்ந்து வருகிறோம்.

இந்நிலையில் சிலர் இதனை இனவாத ரீதியில் நோக்குவதுடன் வதந்திகளை பரப்பி வருகின்றனர். அவற்றை நம்ப வேண்டாம் என நான் கோரிக்கை விடுக்கிறேன்

அத்துடன் தீ விபத்து தொடர்பான விசாரணைகள் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பேரம்பல வைரவர் வேள்வி; 250 கடாக்கள் வெட்டிச்சரிப்பு



தெல்லிப்பழை துர்க்காபுரம் பேரம்பல வைரவர் ஆலயத்தின் வருடாந்த வேள்வித் திருவிழா நேற்று அதிகாலை இடம்பெற்றது.

நீதிமன்ற கட்டளைக்கமைய மூடி மறைக்கப்பட்ட மாதிரி கொள்கலனில் வைத்து தனித்தனியாக 250 இற்கும் மேற்பட்ட கடாக்கள் இந்த வேள்வியின் போது வெட்டப்பட்டன.

ஒவ்வொரு ஆட்டினையும் தெல்லிப்பளை பிரதேச சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனை செய்த பின்னரே வெட்டப்பட்டன.

இதற்கு முன்னர் கடந்த சனிக்கிழமை கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலயத்தின் வேள்வியின் போது 400 இற்கும் மேற்பட்ட கடாக்கள் வெட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்வி முதுமாணி மாணவர்களின் கல்விச்சுற்றுலா இன்று

கல்வி முதுமாணி கற்கை நெறி மாணவர்களின் கல்வி சுற்றுலா இன்று காலை 6மணிக்கு ஆரம்பமாகின்றது.

பத்தாவது பிரிவில் கல்வி கற்கும் 100 முதுமாணி கற்கை மாணவர்களே இன்று யாழ் மாவட்டம் தழுவிய கல்வி சுற்றுலாவில் பங்கு பற்றவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக உயர்பட்ட பீடாதிபதி பேராசிரியர் எஸ். சத்தியசீலன் இத்ற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளனர்.

முதுகல்விமாணி மாணவர்களின் இணைப்பாளர் கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகம் தலைமையில் இச்சுற்றுலா இடம்பெறும். (92)

நாமக்கலில் வாகன விபத்து இரு இலங்கையர் உயிரிழப்பு

தமிழ்நாடு நாமக்களில் மாவட்டத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில்இரண்டு இலங்கை அகதிகள் உயிரிழந்துள்ளனர்.

நாமக்கல் மேட்டுப்பிட்டி அகதிகள் முகாமைச் சேர்ந்த ஆனந்தன் நிஷாந்த் (வயது 23), அதே முகாமைச்சேர்ந்த அந்தோனி கண்ணன் (வயது-42) என்ற இருவருமே உயிரிழந்துள்ளனர்.

கோழிப்பண்ணை ஒன்றில் வேலைசெய்து விட்டு திரும்பியபோது இரு மோட்டார் சைக்களிள்கள் நேருக்குநேர் மோதி விபத்துக் குள்ளானதிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர். இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கனகராஜ் (வயது-25), சுலக்சன் (வயது-24) என்ற இரு அகதிகளும் படுகாயமடைந்து நாமக்கல் அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைய...

னிக்கப்படவில்லை என ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இந்தக் குழு தொடர்பான தகவல் வெளியிடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அடிப்படைவாத...

வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், அன்று மாலை அலரி மாளிகையில் நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும், பொது பல சேனாவைத் தடை செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரினர்.

அதற்கு ஜனாதிபதி பொதுபலசேனாவைத் தடை செய்ய முடியாது என்றும், அவ்வாறு செய்தால் அவர்கள் கதாநாயகர்களாகி விடுவர் என்றும் குறிப்பிட்டார்.

அடிப்படைவாத அமைப்புகளைத் தடை செய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும், அதன் மூலம் மதங்களுக்கிடையிலான பிரச்சினை முடிந்து விடும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்பை மோசமாக மீறும் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களைக் கைது செய்திருந்தாலும் கூட, அத்தகைய செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருக்காது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் விமல் வீரவன்ச, அளுத்கம வன்முறைகளுக்கு சிங்கள, முஸ்லிம் அடிப்படைவாதிகளே பொறுப்பு என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, அமைச்சர் சம்பிக்க ரணவக்க, பொது பலசேனவுக்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அப்போது, குறுக்கிட்ட அமைச்சர் வாசு தேவ நாணயக்கார, பொதுபல சேனாவைப் பாதுகாக்க ஜாதிக ஹெல உறுமய முற்படுவதாக குற்றம்சாட்டியுள்ளார்.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அமைச்சர்களான பசில் ராஜபக்ச,நிமால்சிறிபாலடிசில்வா,தினேஸ்குணவர்தன,ரவுப்ஹக்கீம்,விமல் வீரவன்ச,சம்பிக்க ரணவக்க,டலஸ்அழகப்பெரும, சுசில்பிரேம ஜயந்த,டி.யு.குண சேகர, திஸ்ஸவிதாரண,மற்றும் பிரபா கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் பிரதேசங்களுக்கு கடுமையான பாதுகாப்பு

ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளுக்கு கடுமையான பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபருக்கு பணிப் புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்கும் முஸ்லிம் அமைச்சர்க ளுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்யை தினம் பதுளை யில் ஊவா மாகாண முதலமைச் சரின் இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி இவ் வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது முஸ்லிம் அமைச்சர்கள் நாட்டில் முஸ்லிம்கள் மிகவும் அச்சத்துட னும் பதற்றத்துடனும் வாழ்வது தொடர்பிலும், முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள அச்சசூழ்நிலை தொடர்பிலும், இன வெறுப்பு பிரசாரதுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பிலும், அண்மைய வன்முறைகள் தொடர்பிலும் ஜனாதிபதிக்கு எடுத்து கூறினர்.

ஜனாதிபதி பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங் கக்கோனிடம் இவை தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக் குமாறும், முஸ்லிம் பிரதேசங்களில் கடுமையான பாதுகாப்பு நடவ டிக்கையை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

அண்மைய வன்முறைகள் தொடர்பில் சுயாதீனமான விசார ணைக் குழு ஒன்றை நியமித்து அதன் மூலம் சயாதீன விசார ணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார் .

நாட்டின் தற்போதைய சூழ் நிலையைக் கருதிக்கொண்டு முஸ்லிம் அமைச்சர்களின் வேண்டுகோளின் பேரில் தர்கா நகர், பேருவளை மற்றும் அளுத் கம உட்பட நாட்டின் பல பிரதே சங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இன வாத தாக்குதலைக் கண்டித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிக்கை ஒன்றை வெளியிடவும் இணங்கினார்.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், றிஷாத் பதியுதீன், பீர் சேகு தாவூத, ஏ.எச்.எம்.பௌசி, ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், பிரதி அமைச் சர்களான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல் லாஹ், பைசர் முஸ்தபா ஆகி யோர் கலந்துகொண்டனர் . அமைச்சர்களான பசில் ராஜபக், டலஸ் அழகப்பெரும மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம்.அஸ்வர் மற்றும் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக் கோன் ஆகியோரும் சந்திப்பின் போது கூடவிருந்தனர்.

உலகக்கிண்ண கால்பந்து

உலக கோப்பை கால்பந்து தொடரில் நேற்று நடந்த போட்டி ஒன்றில் ஆர்ஜன்ரீனா ஈரான் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் ஆர்ஜன்ரீனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஈரானை வீழ்த்தியது. ஆர்ஜன்ரீனா அணியின் மெஸ்சி கோல் அடித்து அணியின் வெற்றிக்கு உதவினார்.

வகக் கட்டுப்பாட்டை இழந்து குளத்தில் பாய்ந்தது மோ.சைக்கிள்




(வடமராட்சி)

பொலிகண்டி உள்ள பொலிகண்டி சிவபாதசுந்தர்னார் வீதியூடாகச் சென்று கொண் டிருந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பொலிகண்டி கந்தவன ஆலயக் குளத்திற்குள் பாய்ந்ததில் அதில் பயணஞ் செய்த இரு பெண்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 10.15 மணியளவில் பொலி கண்டி கந்தவனக்கடவை ஆலய பின் வீதியில் இடம்பெற்றது

இவ் விபத்துச்சம்பவத்தில் பொலிகண்டி கிழக்கு பொன்னா தோட்டத்தைச்சேர்ந்த சுப்பிர மணியம் இந்திராணி (வயது55) பொலிகண்டி மேற்கு ஊறணி யைச்சேர்ந்த ஜெயச்சந்திர மூர்த்தி சசிகலா (வயது 24) ஆகிய இருவருமே படுகாயமடைந்து வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை ஊறணியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். (116)

முல்லைத்தீவு குடும்பம் படகு மூலம் தமிழகத்திற்கு



(சென்னை)

முல்லைத்தீவு மாவட்டத் தைச் சேர்ந்த நான்குபேர் படகுமூலம் நேற்று அதிகாலை தமிழகத்தின் தனுஸ்கோடியைச் சென்றடைந்தனர். முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த அந்தோணி குரூஸ் அவரது மனைவி செல்வி குரூஸ் மற்றும் இவர் களது குழந்தைகளான ரோமே ரியா, ரியான்ச் ஆகிய நான்கு பேருமே தமிழகம் சென்றுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் தனுஸ்கோடி பகுதியில் இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு பேர் படகு மூலம் இலங் கையில் இருந்து வந்ததாக அந்த பகுதியை சேர்ந்த மீன வர்கள் கடலோரப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து அங்கு விரைந்த கடலோரக் பொலிஸார் இலங்கையில் இருந்து வந்தவர் களை முகுந்தராயர் சத்திரம் பொலிஸ் சோதனை சாவடிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, தனது மனைவி செல்வி குரூஸ் கிட்னி பாதிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு கிடைக்க மிகவும் சிக்கலாக இருக்கிறது. இதனால் மனைவி செல்வி குரூஸ்க்கு சிகிச்சை அளிக்க போதுமான பணம் கிடைக்க வில்லை. எனது உறவினர் தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அகதிகள் முகாமில் இருக்கின்றனர். அவர்களின் உதவியுடன் இங்கு வந்து சிகிச்சை பெறலாம் என்ப தால் தலைமன்னாரில் இருந்து 20 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து படகு மூலம் தனுஸ் கோடிக்கு வந்தோம் என்று அந் தோணி குரூஸ் தெரிவித்தார். இவர்களிடம் மத்திய, மாநில உளவுப் பிரிவு பொரிஸார் விசார ணைகளை மேற்கொண்டனர்.

அத்துடன் கடலோரக்காவல் துறையினர் மண்டபத்திற்கு அழைத்து சென்று விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

சஞ்சீவ பண்டார கைது

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டா ளர் சஞ்ஜீவ பண்டார, பொலி ஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குள் அத்துமீறி நுழைந் தமை மற்றும் அங்கிருந்த பாது காப்பு பிரிவு அதிகாரிகளை அச் சுறுத்தி அவர்கள் மீது தாக்கு தலை நடத்தியமை என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாண வர் சங்கத்தின் தலைவரையும் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோத ஆட்கடத்தல் இலங்கையும் உள்ளடக்கம்

சட்டவிரோத ஆட்கடத்தல் நடைபெறும் நாடுகளின் வரி சையில் இலங்கையின் பெயரை யும் அமெரிக்கா உள்ளடக்கி யுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் இடம்பெறும் நாடுகளின் இரண்டாம் பிரிவிற் குள் இலங்கை உள்ளடக்கப்பட் டுள்ளது. சட்டவிரோத ஆட்கடத தல் நடவடிக்கைகளை கட்டுப் படுத்த தவறிய நாடுகளின் வரி சையிலேயே இலங்கையின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல்க ளில் ஈடுபடுவோர் கண்டுபிடிக் கப்பட்டு அவர்களுக்கு எதிராக விசாரணை நடத்தி தண்டிக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டு மென அமெரிக்கா கோரியுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல்க ளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. சட்டவிரோத ஆட் கடத்தல்களினால் பாதிக்கப்படு வோர் பல்வேறு துன்புறுத்தல்க ளுக்கு இலக்காவதாகக் குறிப் பிட்டுள்ளது.

சவூதி அரேபியா, குவைட், கட்டார், ஜோர்தான், எகிப்து, ஈராக், ஆப்கானிஸ்தான், மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா உள்ளிட் நாடுகளுக்கு கட்டிட நிர்மானப் பணியாளர்கள் உதவியாளர் களாக வீட்டுப் பணிப்பெண்க ளாக வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வோர் பலவந்தமாக தொழில்களில் ஈடுபடுத்தப்ப டுவதுடன், துன்புறுத்தப்படுவ தாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சட்டவிரோத ஆட்கடத்தல் கடத் தல் நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசி யமானது என அமெரிக்கா வலி யுறுத்தியுள்ளது.

சிறிதரன் எம்.பி.க்கு கொலை அச்சுறுத்தல்

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ். மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

நேற்று நண்பகல் வேளை யில் தனது கைத்தொலைபே சிக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தொலை பேசி அழைப்பு வந்ததாகவும் அந்த தொலைபேசி அழைப்பு தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று நண்பகல் முறையிட்டுள்ளதாக வும், கொலை அச்சுறுத்தும் வகையில் பேசப்பட்ட விபரங் கள் தொலைபேசி இலக்கம் என் பன பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறித ரன் தெரிவித்தார். (29)

சாட்டி கடலில் குளித்த வயோதிபர் உயிரிழப்பு

சாட்டிக் கடலில் மூழ்கி வயோதிபர் ஒருவர் நேற்று மாலை உயிரிழந்தார். குடும்பத்தினருடன் சாட்டிக் கடலில் குளிக்கச் சென்ற வேளை இவர் கடலில் மூழ்கி மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது. மானிப்பாய் வீதி, கொட்டடியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் நடராஜா (வயது 84) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கர்ப்பிணித் தாய்மாருக்கு எச்.ஐ.வி. பரிசோதனை

கர்ப்பிணித் தாய்மார்களை எச்.ஐ.வி பரிசோதனைக்கு உட் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக தேசிய பாலியல் மற்றும எய்ட்ஸ் ஒழிப்புத் திட்டம் தெரி வித்துள்ளது.

தாயிடம் இருந்து குழந் தைக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்படுவதை தடுப்பதே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும் என தேசிய பாலி யல் மற்றும் எய்ட்ஸ் ஒழிப்புத் திட்டத்தின் பணிப்பாளர் டொக்டர் சிசிர லியனகே தெரிவித்தார்.

இந்தப் பரிசோதனை மூலம் கடந்த வருடத்தில் எச்.ஐ.வி. தொற்று ஏற்படவிருந்த ஆறு குழந்தைகளை, அந்த அபாய நிலையிலிருந்து காப்பாற்ற முடிந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மற்றுமொரு இலங்கையர் ஆஸி.யில் தற்கொலை முயற்சி

இலங்கையில் இருந்து அகதி யாக அவுஸ்ரேலியா சென்று தஞ்சமடைந்த மற்றுமொரு இலங்கை பிரஜையொருவர் தற் கொலை முயற்சியில் ஈடுபட்டுள் ளதாக அவுஸ்திரேலியாவின் தமிழ் அகதிகளுக்கான சபை அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு மீண்டும் திரும்பிச்சென்றால் சித்திரவதை அடையவேண்டும் என்ற அச்சத் தினாலேயே இவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என குறிப்பிட்டுள்ளனர்.

இவர் தற்போது அவுஸ்திரே லியாவில் உள்ள வைத்திய சாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த நபரானவர் அவுஸ் ரேலியாவில் நோபல் பார்க் எனும் இடத்தில் வசித்து வருப வர் என்றும் 2012ஆம் ஆண்டு படகின் மூலம் அவுஸ்ரேலியா விற்கு வந்து தஞ்சமடைந்தவர் என்றும் அச்சபை அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.